எங்கெங்கு காணினும் சக்தி கீதியடி

சக்தி

பெண்ணிதழ்

பெண்கள் மேம்பாட்டு
பன்மொழி மின்னிதழ்

மலர்–1 இதழ்–12 நிறுவனர் & தலைமை பதிப்பாசிரியர் முனைவர் செ. ராஜேஸ்வரி | ஆகஸ்ட் 2025

RANI LAXMI BAI

MADAM CAMA

SAROJINI NAIDU

HANSA MEHTA


BEGAM HAZRAT MAHAL

DR. ANNIE BESANT

KASTURBA GANDHI

CAPT. LAKSHMI SEHGAL

KAMLA NEHRU


PRITILATA WADDEDAR

DURGABAI DESHMUKH

VIJAYA LAKSHMI PANDIT

சிக்கன உண்டியல் செழிப்பின் களஞ்சியம்
முனைவர் வி. ஆனந்தி

மதநல்லிணக்க மதுரை
முனைவர் தேமொழி

ஆடிமாதத்தில் அம்மன்வழிபாடு
செ. ராஜேஸ்வரி

‘குடும்ப விளக்கேற்றிய’ பாரதிதாசன்
மாலதி தமிழ்ச்செல்வன்

இந்திய விடுதலை களத்தில் பெண்கள் -1
எஸ். சாந்தினிபீ

ஹவிர்பூ
இரா. சைலஜா சக்தி

பகடைக் காலம்
இ. சக்தி சுரேஷ்

கமலா சோஹோனி
மேனகா நரேஷ்

கார்த்திகா கவின் குமார் (நேர்காணல்)
வித்யா மனோகர்

தைரிய லட்சுமி
வை.மு.கோதைநாயகி

Aranyani (Chapter: 5)
Vijeni

உண்மைக்கதைகள்

*Biddy Bridget Mason
*ரமா பாய்
*Sarla Thakral - The First Pilot of India
*பூலான் தேவி

விடுதலைத் திருநாள்
வாழ்த்துக்கள்

மலர்-1 இதழ்-12

நிறுவனர் &
தலைமைப் பதிப்பாசிரியர் :
முனைவர் செ.ராஜேஸ்வரி

சிறப்பாசிரியர் :
முனைவர் தேமொழி [USA]

பொறுப்பாசிரியர் :
முனைவர் சந்திரிகா
சுப்ரமணியன்[சிட்னி]

துணை ஆசிரியர் :
கவிஞர் மேனகா நரேஷ் [NJ]

Shakthi

Printed and Published by :
E.Satish Rajkumar [Advocate]

3/422, Thiruvalluvar Street,
Dinamani Nagar, Madhurai,
Tamil Nadu – 625 018.
Ph : +91 7871123226,
+91 7010997630

கட்டுரைகள் அனுப்ப..
sakthipennithazh@gmail.com
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில்
இடம்பெற்றுள்ளகருத்துகள்
அனைத்தும் கட்டுரையாளர்களின்
கருத்துகளே ஆகும். அவற்றுக்கும்
இதழாசிரியருக்கும் எந்தத்
தொடர்பும் இல்லை

உள்ளடக்கம்

1	புரிதலும் தெரிதலும் தெளிதலும் - சசிகலா விஸ்வநாதன்	1
2	பகடைக் காலம் (கவிதை) - இ. சக்தி சுரேஷ்	8
3	இரட்டை சுடர் -2 - அ. திவ்யகுமாரி கண்ணம்மா	9
4	பூலான் தேவி (உண்மைக்கதை)	14
5	பாலூட்டி வளர்த்த (கவிதை) - நரேன்	19
6	சிக்கன உண்டியல் செழிப்பின் களஞ்சியம் - முனைவர் வி. ஆனந்தி	20
7	ஆடிப்பிறப்பு! (கவிதை) - நாவாலியூர் சோமசுந்தரப் புலவர்	27
8	Biddy Bridget Mason (வரலாற்றுத்தகவல்)	29
9	தைரிய லட்சுமி (தொடர்கதை) - வை.மு.கோதைநாயகி	31
10	அம்மா தோசை (கவிதை) - நரேன்	34
11	நேர்காணல்-கார்த்திகா கவின் குமார் - வித்யா மனோகர்	39
12	ஹவிர்பூ (கதை) - இரா. சைலஜா சக்தி	46
13	விற்பனைக்கு (கவிதை) - கனியமுது அமுதமொழி	47
14	'குடும்ப விளக்கேற்றிய' பாரதிதாசன் - மாலதி தமிழ்ச்செல்வன்	48
15	கிடைத்த பந்தங்களைத் தக்கவைப்போம் - Dr. அ.ப.ஃபரூக் அப்துல்லா	57
16	எல்லாம் சரியாகிவிடும் (கவிதை) - ரிஸ்கா முக்தார், இலங்கை	60
17	ARANYANI (Chapter: 5) - Vijeni	62
18	ரமா பாய் (மொழிபெயர்ப்பாளர்)	71
19	இந்திய விடுதலை களத்தில் பெண்கள் -1 - எஸ். சாந்தினிபீ	72
20	மதநல்லிணக்க மதுரை - முனைவர் தேமொழி	78
21	நெடு நாளைக்குப்பின் (கவிதை)	80
22	சிந்தனையோர் வழியில் சிறப்பாக வாழ்க! - இல. ஜெயந்தி	82
23	பெண் விஞ்ஞானி கமலா சோஹோனி - மேனகா நரேஷ்	87
24	Sarla Thakral — The First Pilot of India	91
25	ரூமியின் காதல்கவிதை (மொ.பெ) - செ. ராஜேஸ்வரி	92
26	ஆடிமாதத்தில் அம்மன்வழிபாடு - செ. ராஜேஸ்வரி	93
27	இங்கிலாந்து மண்ணில் இனிய தமிழ்விழா 'தமிழணங்கு' எழுத்தாளர்களுக்குப் பாராட்டு விருது	98

தாயின் மணிக்கொடி பாரீர்! - அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!

ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் - அதன்
உச்சியின் மேல் வந்தே மாதரம் என்றே
பாங்கின் எழுதித் திகழும் - செய்ய
பட்டொளி வீசிப் பறந்தது பாரீர்!

இந்திரன் வச்சிரம் ஓர்பால் - அதில்
எங்கள் துருக்கர் இளம்பிறை ஓர்பால்
மந்திரம் நடுவுறத் தோன்றும் - அதன்
மாண்பை வகுத்திட வல்லவன் யானோ?

விடுதலைத் திருநாள்
வாழ்த்துக்கள்

புரிதலும் தெரிதலும் தெளிதலும்

சசிகலா விஸ்வநாதன், பெங்களூர்

சம்யுக்தா சுவையும், ஈர்ப்பும் அல்லாத செயற்கைத் தனம் மிகுந்த அந்த தொலைக்காட்சி நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருந்தாள். மிகவும் அலுப்பாவும் உணர்ந்தாள். தொலைக்காட்சி பொத்தானை அழுத்தி அதிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள்.

வேறு என்ன செய்வது? குகனின் அழைப்பின் பேரில், அவன் அலுவலகத்தில் நடக்கவிருக்கும் வருடாந்திர ஆண்டுவிழா கொண்டாட்டத்திற்கு வந்திருந்தாள். வரவேற்பு வளாகத்தில் குகனுக்காகக் காத்திருக்க வேண்டிய நேரத்தில் இந்தச் சின்னத்திரை நிகழ்ச்சியில் அகப்பட்டுக் கொண்டாள்.

பக்கத்தில் ஒரு இளம்பெண் மிரட்சியான கண்களுடன்,தன் கலவரத்தை மறைக்க முயன்று கொண்டிருந்தாள். அவள் பள்ளி மாணவி போல் சூடிதாரின் துப்பட்டாவை திருத்தமாக ஆங்கில எழுத்து V போல் அணிந்து இருந்தது, வித்தியாசமாக இருந்தது.சங்கீதாவுக்கு ஏனோ அவளிடம் பேச்சு கொடுக்க உள்ளூர ஒரு உந்துதல்.

'நான் சங்கீதா! பர்சனல் செக்ஷன் குகனின் மனைவி. நீங்கள்..?' என்று வினவினாள். 'நான் இனியாள். டெஸ்டிங் செக்ஷன் ஆதிரையனின் மனைவி. சென்னைக்கு இப்போதுதான் பணிமாற்றத்தில் வந்துள்ளேன். திருமணமாகி ஆறு மாதங்கள்தான் ஆகிறது. இது மாதிரி கொண்டாட்டங்கள் எனக்குப் புதிது. நான் வரவேண்டாம்; என்றுதான் இருந்தேன். ஆதிரையான், நான் வரவேண்டும் என்பதில் மிகவும் உறுதியாக இருந்ததினால் வரும்படி ஆயிற்று;' என்று சொல்லித் தன் தயக்கத்தை மறைக்கப் புன்னகை செய்ய முயன்றாள்.

'நீ பயப்படாதே. இந்த கொண்டாட்டம் எல்லாம் ஒரு விஷயமே இல்லை.

மனதை சிறிதே எளிதாக்கிக் கொள். வா! நாம் போய் கேன்டீனில் போய் காஃபி அருந்திவிட்டு வரலாம்' என்று சம்யுக்தா அவளை அழைத்தாள்.

இனியாள்,' இருங்கள் ; மேடம்! அவருக்குப் ஃபோன் பேசி, அவரது அனுமதியுடன் வருகிறேன்.' என்று பணிவுடன் சொன்னாள். ' இந்தக் காலத்தில் இப்படி ஒரு பெண்ணா?' என்று வியந்து போனாள், சம்யுக்தா.

கேன்டீனில் காஃபி அருந்தும் போது இனியாள் எளிதானாள். சிறிது நேரம் கழித்து விழா தொடங்கியது. குகனும், ஆதிரையனும், தங்கள் அலுவலக நண்பர்களுடன் வர அந்த வரவேற்பு வளாகம் களைகட்டியது. ஆணும் பெண்ணும் சகஜமாக சேர்ந்து பழகும் மென்பொருள் நிறுவனம் அது. ப்ராஜக்ட் ஹெட், மேலாளர், சீனியர், ஜூனியர் என்ற பாகுபாடு இல்லாமல் ஒருவரை ஒருவர் பேரிட்டு அழைப்பதும், சகஜமாக கை குலுக்கிக் கொள்வதும், தோளில் தட்டிப்பேசுவதும், துள்ளலுடன் ஏகடியமாக பேசுவதும், இனியாளுக்கு அறவே ரசிக்கவில்லை என்பதை அவள் முகபாவமே தெளிவாக்குகியது.

குறிப்பாக ஆதிரையனிடம் எந்தப் பெண்ணாவது பேச முனைந்தால், அவள் முகம் கருத்துப் போவதை சம்யுக்தா கவனிக்காமல் இல்லை. அவள் சிறு பிள்ளைத்தனமாக ஏதும் செய்யாமல் இருக்க வேண்டுமே; என்ற பதற்றத்தை சம்யுக்தா அடைந்தாள். இந்த மன அழுத்தத்தில், அவளால் நிகழ்வில் முழுமையாக பங்கு பெற இயலவில்லை.

வீட்டிற்குப் போகும் வழியில் சம்யுக்தா, குகனிடம் இனியாள் பற்றி பேசினாள். 'அவள் மிகவும் சிறுபிள்ளைத்தனமாக ஏதாவது பேசி விடப் போகிறாளே;' என்று நான் பயந்து கொண்டே இருந்தேன். நல்ல வேளை, அவள் அந்த மாதிரி எதுவும் பேசவில்லை. நடந்து கொள்ளவும் இல்லை' என்று பேசிக்கொண்டே போன்றவளை இடைமறித்தான் குகன். 'அவளை ரொம்பவும் புகழாதே! சாம்பவி ஆதிரையனை பெயர் சொல்லி அழைத்ததற்கு, அவள் கடுப்பாகி' அவர் என்ன; உனக்கு அண்ணனா; தம்பியா? பெயர் சொல்லி அழைக்கிற வேலை எல்லாம் வேண்டாம் என்று தர்க்கம் பண்ண; ஆதிரையான் சாம்பவியிடம் சமாதானமாகப் பேசி அனுப்பினான். இனியாளை, ஒன்றும் சொல்ல முடியவில்லை. இப்போதுதான் புதிதாக திருமணமாகி பணிமாற்றத்தில் வந்திருக்கிறாள். அவனே அவளிடம் இன்னும் சகஜமாகவில்லை! பாவம் அவன்.எப்படி சமாளிக்கப் போகிறானோ,'என்று அங்கலாய்த்தான்; குகன்.

ஆதிரையன் மிகவும் கோபமாக இருந்தான். ஆயினும், மௌனமாக இருந்து, நேரத்தை எளிதாக்க முயன்றான்.இனியாள் ஏதும் சமாதானமாகப் பேச முயன்றால், விஷயத்தை பெரிதாக்காமல், மென் பொருள் அலுவலக சூழல், அதன் கலாச்சாரம், பழகும் முறைகள் பற்றி தெளிவாக்கி புரிய வைக்கலாம் என்று அவள் பக்கம் பார்த்தான்; ஆதிரையன். இனியாள், முகம் களையிழந்து, கருத்திருந்தது. அலுவலக கொண்டாட்டத்தின் களிப்பின் சாயல் அவள் முகத்தில் சிறிதும் இல்லை.

ஸ்கூட்டர் பயணம் மௌனத்தில் கரைந்தது. ஆதிரையன் சினத்திலும்; இனியாள் ஆழ்ந்த யோசனையிலும், இருந்தனர். இரவு நேரம் ஆதிரையன் நினைத்தபடி அமையவில்லை. வெகு நேரமாக இனியாள் கம்ப்யூட்டரில் ஏதோ பார்த்துக் கொண்டிருந்ததில்,, ஆதிரையன் சலிப்புடன், காத்திருந்த அலுப்பில் உறங்கி விட்டான்.

திருமணமாகி ஆறு மாதத்தில் தினமும் ஃபோனில் காணொளி அழைப்பில் பேசுவதில் ஒருவரையொருவர் புரிந்து கொள்ள இயலுமா? இடையில் இரண்டு மூன்று தரம் ஊருக்குச் சென்றாலும் உறவினர் வீட்டு விருந்துகளுக்கும், குல தெய்வம் கோயிலுக்குப் போய் பொங்கலிட்டு சாமி கும்பிடவும் தான் நேரம் சரியாக இருந்தது. விருந்துகளுக்கும் , கேளிக்கை களுக்கும் ஊருக்குப் போவது அலுப்பாய் இருக்க, ஊருக்குப் போவதையே தவிர்த்துக் கொண்டு இருக்க; இனியாள் அதை எப்படி புரிந்து கொண்டாளோ; அடுத்த மூன்று மாதத்தில் , இதோ சென்னை வந்து சேர்ந்து விட்டாள்.

திங்கள் அன்று. வந்தவள்,அவனே ஆச்சரியப் படும்படி இரண்டு நாட்களில், வீட்டை ஒழுங்கு படுத்தி பால் போடுபவர், செய்தித்தாள் போடுபவர் வீட்டு வேலைக்கு உதவியாள், என்று எல்லாவற்றையும் நறுவிசாக இந்த இரண்டு மூன்று நாட்களில் செய்து முடித்தாள்.

அடுத்த வாரம் திங்கள் கிழமை வேலைக்குச் சேர வேண்டும். அந்த அலுவலகம் எங்கிருக்கிறது; எந்தப் பேருந்தில் போக வேண்டும்; எத்தனை மணி பேருந்தில் சென்றால் அலுவலகத்திற்கு சரியான நேரத்தில் சென்று அடைய முடியும் ; என்று எல்லா விவரங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டாள். அயர்ன் பண்ணும் அண்ணனை சிநேகிதம் பிடித்து வைத்துக் கொண்டாள். பக்கத்து வீடு; எதிர் வீடு மனிதர்களை வலுவுக்குப் போய் அறிமுகம் செய்து கொண்டு அவர்களது அலைபேசி எண்களை வாங்கி சேமித்துக் கொண்டு, தங்களது தொலைபேசி எண்ணையும் அவர்களுக்குக் கொடுத்து வந்ததில், அந்த வீட்டில் இருக்கும் முரளிதரனும், முத்துக்குமாரும், இவனைப் பார்த்து முதல் முறையாக புன்னகைத்து, அறிமுகம் செய்து கொண்டனர். சகஜமாக. அவனுடன் உரையாட ஆரம்பித்திருந்தனர்.

உபரியாக வீட்டு சாவிகளை புதிதாக செய்து அவர்களிடம் கொடுத்து வைத்தாள். எதற்கும் அவனை தொந்தரவு படுத்தாமல் , தன்னிச்சையாக முடிவெடுத்து, எல்லாவற்றையும் பக்காவாக திட்டமிட்டு, அழகாக நடைமுறைப்படுத்தவும் செய்தது ஆதிரையனை மிகவும் ஈர்த்தது. வீட்டின் பொறுப்பை இயல்பாக ஏற்று நிர்வகிக்க முனைந்தது, அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. அவர்கள் திருமணம், காதல் திருமணம் இல்லை; என்றாலும், அவளது இயல்பான ஆளுமை குணத்தினால் , அவள் அவனை கவர ஆரம்பித்து இருந்ததை அவனால் மறுக்க முடியவில்லை. நேற்று அலுவலக கொண்டாட்டத்தில் நிகழ்ந்தவைகளை அவன் பின்னுக்குத் தள்ளவே நினைத்தான்.

மறு நாள் காலை வழக்கம் போல நறுமண கா஼பி,அன்றைய செய்தித்தாள் தலைப்புச் செய்திகள் பற்றி சகஜமான உரையாடல்.. காலை நேர நடைப்பயிற்சி, தேங்காய் பாலுடன் சூடான ஆப்பத்துடன்; காலை சிற்றுண்டி என அமர்க்களமாய் விடிந்தது .

காலை சிற்றுண்டி முடிந்ததும், 'ஆதிரையன்! ஒரு முக்கியமான விஷயம். நான் திங்கள் அன்று வேலையில் சேர்ந்து உடன் படிப்பதற்காக ஒரு வருட லீவுக்கு மனு செய்ய இருக்கிறேன்.நான் ஏற்கனவே படித்துக் கொண்டு இருந்த கணினி பட்ட மேற் படிப்பை படித்து முடித்தால், எனக்கும் உங்கள் மாதிரி மென் பொருள் கம்பெனியில் சுலபமாக வேலை கிடைக்கும் அல்லவா? நல்ல ஊதியமும் கிடைக்கும்; இல்லையா?' என்று சாதாரணமான விஷயத்தை சொல்வது போல், சொன்னாள். ஆதிரையனுக்கு எவ்வாறு இதற்கு எதிர்வினை ஆற்றுவது, என்று புரியாமல் ஒரு கணம் தடுமாற்றம் அடைந்தான்.

'ஏன்? என்னிடம் கலந்து ஆலோசிக்க வேண்டும்; என்று உனக்குத் தோன்ற வில்லையா?' என்று கேட்க நாவும், மனமும் துடித்த துடிப்பை அவன் கட்டுப்படுத்திக் கொண்டான்; அந்த மாதிரி வினாக்கள், தான் ஆணாதிக்க மனப்பான்மை உடையவன், என்று அடையாளம் காட்டி. விடுமோ; என்று ஏதும் பேசாமல் இருந்தான்.

சிறிது நேரம் யோசித்தவன் 'இனியாள்! உன் வருமானம் இல்லாமல் நம்மால் சென்னையில் சமாளிக்க முடியுமா? நம் வீடுகளில் சொல்ல வேண்டாமா? தன்னிச்சையாக முடிவெடுக்கலாமா?' என்று வினவ,'ஏன் முடியாது? நம் வாழ்வை நாம்தான் வாழ வேண்டும். மூன்றாம் மனிதரின் முடிவுகள் நமக்கு சரியாக இருக்குமா? ஒரு முறை ஆலோசனை கேட்க; எப்போதும் அதை அவர்கள் எதிர்பார்ப்பார்கள். நாமும் அவர்களைச் சார்ந்து நிற்க பழகி விடுவோம். நம்மையும் அறியாமல் அவர்களுக்கு நாம் அடிமையாகி விடுவோம்.

நாம் சரியாக திட்டம் போட்டு குடும்பம் நடத்தினால், சமாளிக்க முடியும். நான் நேற்று இரவே எனது கல்லூரியின் தாளாளரிடம் பேசி, இங்கு வைணவ கல்லூரியில் சேர்க்கைக்கும் ஏற்பாடு செய்து விட்டேன். முதல் வருட இறுதி தேர்வில் நான் நல்ல மதிப்பெண் பெற்று இருப்பதால் இங்குள்ள கல்லூரியில் சேர்க்கை கிடைப்பது, கடினமாக இருக்காது. கவலைப் படாமல் இருங்கள். இப்போது எனக்கு இருக்கும்

தொடர்புகளை பயன்படுத்தி சிறு சிறு ப்ராஜக்ட் வேலைகளை தனியாக செய்வதில் ஓரளவு சம்பாதிக்கவும் செய்யலாம். என் படிப்பிற்கும் அது பயனுள்ளதாக அமையும்' என்று மேலே பேசவிடாமல் சாமர்த்தியமாகப் பேசி முடித்தாள். ஒரு வருடம் சிறிது கஷ்டப்பட்டாலும் வாழ்விற்கும் பயனுள்ள வேலையைத் தான் நாம் செய்கிறோம். அதற்கு ஏன் வீட்டில் சொல்லி அனுமதி வாங்க வேண்டும்? அப்படி எவரேனும் கேட்டால், என் விருப்பத்தின் பெயரில்தான் இனியாள் மேற்படிப்பை தொடர்ந்து படிக்கிறாள் என்று சொல்வீர்கள் தானே!' என்று கண்ணடித்தபடி, புன்னகையுடன் கேட்க, திகைப்படைந்த ஆதிரையனால் எந்த பதிலும் தீர்மானமாக அளிக்க இயலவில்லை. கண்ணைக் கட்டி காட்டில் திரிய விட்ட மாதிரி இருந்தது; ஆதிரையனுக்கு.

எல்லாம் விரைவாகவும், விறுவிறுப்பாகவும் நடந்தேறின.இனியாளுக்கு, படிப்புக்காக லீவு கிடைப்பதும் கல்லூரியில் சேர்க்கை கிடைப்பதும் கடினமாக இல்லை. ஆயினும்,அவள் அலுவலகத்தில் படிப்பு முடிந்ததும் ஒரு வருடம் அங்கேயே வேலை பார்க்க வேண்டும் அல்லது பிணைப்புக் தொகையாக ஒரு வருட சம்பளத்தை கம்பெனிக்கு கொடுக்க வேண்டும் என்ற பிணைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டியிருந்தது. பெற்றோர்களை சமாளிப்பது தான் கடுமையாக இருந்தது. கேள்விச்சரங்களை எதிர் கொண்டு சமாளிப்பது பெரும் பாடாக இருந்தது.

அவள் படும் பாடுதான் அவனால் சகிக்க முடியவில்லை. இனியாள் அதிகாலையில் இருந்து நள்ளிரவு வரை ஓயாமல் உழைத்தாள். வீட்டு வேலைகளில் இவன் பங்கு கூடியது. அவன் அலுவலக நண்பர்கள் போல் தன்னைத் தளர்வாக வைத்துக் கொள்வது இயல்வதே இல்லை.எந்நேரமும் ஓட்டமாய் ஓடத்தான் வேண்டியிருந்தது. இனியாளும், இம்மியும் தளர்வில்லாமலும் சோர்வில்லாமலும் வீட்டு வேலைகளையும், தனது ப்ராஜக்ட் வேலைகளையும், படிப்பையும், ஒரு சேர ஒருங்கிணைத்துச் செய்து கொண்டிருந்தாள்.

தன் வருமானம் வீட்டிற்கு இல்லை; என்பதை நினைவில் எந்நேரமும் நிறுத்திக்கொண்டு, ஆதிரையனின் சௌகரியத்தைக் குறைக்காமல் தன் செலவுகளைக் குறைத்துக் கொண்டாள். திருமணமாகி முதல் வருட பண்டிகைகளுக்கும், ஊர் திருவிழாவுக்கும் போகாமல் சென்னையிலேயே இருந்தார்கள். உறவினர் வீட்டு விசேஷங்களை தவிர்த்தனர். படிப்பு, வேலை,, சமையல், என்று அன்றாட நிகழ்விலேயே நாட்கள் கழிந்து கொண்டிருந்தன. ஆதிரையானுக்கும் குடும்ப நிர்வாகத்தின் நெளிவு சுளுவுகள் பிடிபட ஆரம்பித்தது. சிக்கனம் இயல்பாக மனதிற்கு

பழகி விட்டிருந்தது. இனியாளின் மேல் இருந்த மரியாதையும் வியப்பும் நாளுக்கு நாள் கூடியது

ஒரு வருடம் ஒரு நிமிடமாக ஓடியது. இனியாள் தன் தேர்வை முடித்த அடுத்த நாளே தன் வேலையில் சேர்ந்தாள்.அவள், தன் முதல் மாத சம்பளத்தை தன்னிடம் கொடுப்பாள்; என்று ஆசையாய் காத்திருந்த ஆதிரையனுக்கு ஏமாற்றம்தான் மிஞ்சியது. அதை முழுவதுமாக வங்கியில் இருவர் பேரிலும் இணையாக ஒரு கணக்கு ஆரம்பித்து, அதில் சேர்த்து விட்டாள். வரும் நாட்களில் மென் பொருள் நிறுவனத்தில் வேலை கிடைத்தால், தன் அலுவலகத்திற்கு பிணைப்புக் தொகை கட்ட அந்த தொகை கை கொடுக்கும் என்று ஒரு கணக்குப் போட்டு வைத்திருந்தாள். வழக்கம் போல் ப்ராஜக்ட் வருமானம் கை கொடுத்தது.

இரண்டு மாதங்களில் இனியாள் முதுகலைப்படிப்பில் தேர்ச்சியடைந்த மகிழ்வான செய்தி அவர்களுக்கு புத்துணர்ச்சி தந்தது. தேர்வின் முடிவு தெரிந்ததும் இனியா மென்பொருள் அலுவலகங்களில் பணி தேட ஆரம்பித்தாள். மூன்று மாதங்களில் ஆதிரையின் அலுவலகத்திலேயே ஒரு வேலை வாய்ப்பு வர அதற்குண்டான தகுதி தேர்வுகளில் தேர்வாகி ஒரு நாள் இனியாளை குகன் சந்தித்தான்; நேர்காணல் அலுவலராக. குகன் அலுவலக சம்பந்தமான வினாக்கள் முடிந்ததும், " மேடம்! நாங்கள் முடிவெடுக்கும் முன் முடிவாக ஒரே ஒரு வினா. உங்களுக்கு இன்னும் இரண்டு மூன்று வேலை வாய்ப்பு எங்கள் அலுவலகத்தை விட நல்ல வருமான தொகுப்பு இருந்தும், இந்த அலுவலகத்திற்கு நேர்காணல் வரை விழைவுடன் வந்திருப்பதின் காரணம் என்னவாக இருக்கும் என்று நான் கேட்டால்; உங்கள் பதில் எனனவாக இருக்கும்,' என்று வினவினான்.

ஒரு நிமிடம் யோசித்த இனியாள் சொன்ன பதிலில் அவன் அயர்ந்தே விட்டான். ' ஆமாம், சார்! மனத் தெளிவும், நிம்மதியும் மிகவும் முக்கியம் அல்லவா? மென் பொருள் அலுவலக கலாச்சாரம், என் போல் தெற்கே இருந்து வாழ்வின் வாய்ப்புகளைக் தேடி சென்னை வருபவர்களால் ஏற்றுக் கொள்ளவும், புரிந்து கொள்வதும் கடினம். எனதுகுறிக்கோளே சரியான நேரத்தில் என் கணவர் ஆதிரையனின் அலுவலகத்தில் வேலைக்குச் சேருவதுதான். அவர் அலுவலகத்திலேயே நான் அலுவல் பார்க்க, அவை அவருக்குக் கிடைக்கும், அல்லவா?அந்த பாதுகாப்பு உணர்வும், மன நிம்மதியும், எனக்கும் கிடைக்குமல்லவா? இவைதான் பிரதானமான காரணம். வேறு சில அன்றாட காரணங்களும் உள்ளன. அவை இப்போது முக்கியமில்லை. திருமணமாகும் தம்பதியர்கள் முதல் இரண்டு

மூன்று வருடங்கள் சென்ற பின்பே பரஸ்பரம் நம்பிக்கையும், அன்பும் கொள்ள முடியும். அதற்கு பிறகுதான் காதல் கொள்ள முடியும். நீண்ட நாள் வாழ்விற்கு பரஸ்பரம் புரிதலும் நம்பிக்கையும் தான் நங்கூரம். அஸ்திவாரம் பலமாய் இருக்க, எழுப்பும் மாளிகை எளிதாகவும் , எழிலுடன் கூடியதாக வும் இருக்கும்'என்று புன்னகையுடன் சொல்லி எழுந்தவளுக்கு, வேலையில் சேருவதற்கான அலுவலக ஆணையைக் கொடுத்து , வாழ்த்துக்கள், சொன்னான்; குகன். தன் அலைபேசியை செவிக்கு ஒற்றி, சம்யுக்தாவிடம் இந்த செய்தியை பகிர்ந்து மகிழ்ந்தான்.

பகடைக் காலம்

இ. சக்தி சுரேஷ்

இன்று துரியோதனன்கள் இல்லை
துச்சாதனங்களுக்கு வேலை இல்லை
ஆடை அவிழ்க்க வேண்டிய
அவசியமும் இல்லை
எந்த நொடியில் அதுவே
அவிழும் என தெரியாது

திரௌபதிகளுக்கோ பஞ்சமில்லை
பகடைகளை அவளே உருட்டுவாள்
வெல்வது யார் என்பதையும் அவளே
தீர்மானிப்பாள்

வெல்வது ராமனே ஆனாலும்
அவள் திரௌபதி தான்.



இ. சக்தி சுரேஷ்

(சென்ற மாத கட்டுரையின் தொடர்ச்சி...)

இரட்டை சுடர் –2

அ. திவ்யகுமாரி கண்ணம்மா
ஐய்யை உலகத் தமிழ் மகளிர் மன்றம்

இரண்டாமவள் வேற ஒரு டிசைன்...

இவளும் துப்பட்டாவை தேடுவாள் இது வேற மாதிரியான தேடல்..

வேலைக்கு சென்ற நாட்களில் இருந்து எங்களை ஒருவர் ஒருவர் மிஸ் பண்ணாமல் இருக்க நாங்கள் மூவரும் சில பைத்தியக்காரத்தனங்களை செய்வதுண்டு அதில் இதுவும் ஒன்று...

வாரத்தில் என்றாவது ஒரு நாளைக்கு தான் இது நடக்கும்..

குட்டி லட்டு ஓடி வந்து கொடிக்கயிற்றில் துப்பட்டாவை தேடுவாள் அதன் முனையில் முடிச்சி இருந்தால் ஒரே உற்சாகம் தான்...

துப்பட்டாவின் முனையில் 20 ரூபாய் முடியப்பட்டிருந்தால்.. அன்று ஐஸ் சாப்பிட அனுமதி...

மாலை வேளையில் எங்கள் தெருக்களில் ஐஸ் வண்டி வருவது இயல்பு...

" ஹே அம்மா ஐஸ் சாப்பிட காசு வெச்சிட்டு போயிருக்கா டி " என்று ஊரையே கூட்டி கத்துவாள்.

தினமும் .. தினமும் அலுவலகத்திற்கு மாலை செல்லும் போது அழுது கொண்டே என் நைட்டியை தேடுவாள் அதை கட்டிக்கொண்டு தூங்கி விடுவாள்..

என் கணவர் அலுவலக வேலைக்காக வெளியூர் சென்று தங்க நேரும் போது அவரது சட்டையை தலையணைக்கு அணிவித்து அதை அணைத்துக்கொண்டு தூங்குவது நினைவிற்கு வருகிறது.

என் கண்களில் கண்ணீரை பார்த்துவிட்டால் சின்ன குட்டி.. குட்டி லட்டுக்கு உலகமே இருண்டு விடும்..

நாம் அழுவதை யாரும் பார்க்க கூடாது என அடிக்கடி கூறுவாள்...

எப்படியாவது என்னை வேலையை விட்டு நிறுத்தி விட வேண்டும் என்பதில் மிகவும் மும்முரமாக இருக்கிறாள் இவள்..

உருவத்தில் மட்டுமல்ல குணத்திலும் பல நேரங்களும் என் போலவே இவளும் இருப்பது ஆச்சரியமும் பயத்தையும் தருகிறது..

பேருக்குத்தான் சின்ன குட்டி, குட்டி லட்டு...

கர்ப்ப காலத்தில் எடுக்கப்பட்ட ஸ்கேனில் ஆதிரையை விட குட்டி லட்டு ஒரு நாள் மூத்தவள். (அது எப்படி திமிங்கலம் - என்ற உங்கள் மைண்ட் வாய்ஸ் எனக்கு கேட்கிறது, ஆனால் ஸ்கேன் ரிப்போர்ட் அப்படித்தான் சொல்லுது)

அம்மா மகள் உறவு பெரிதும் பேசப்படாத சமூகத்தில்..

இவர்களது ஒவ்வொரு செய்கையும் சொர்க்கம் தான்..

நேற்று இருவரும் ஒருத்தருக்கு ஒருத்தர் சாதாரணமாக பேசிக்கொண்டு இருக்கும்போது ஒட்டுகேட்டேன் ..

ஆதிரை: சூரியன் எதையோ நோக்கி வேகமாக பயணிப்பதாக கர்பணை கதை கூறுகிறார்..

ஆதி:ஆம்மாண்டி துப்பாக்கியில் இருந்து போற புல்லட் மாதிரி சூரியன் போகிறது என்று மற்றவர் பதிலளிக்கிறார்...

உடனே இருவரும் ஒரே சிரிப்பு ...

இப்படி பல டீக்கடை பெஞ்சு கதைகளை இவர்கள் பேசிக்கொண்டு தான் இருக்கிறார்கள்...

அரட்டைக்கு கொஞ்சம் கூட பஞ்சமே இல்லை...

இந்தக் கிழவிகளுக்கு நான் தாயா இல்லை மகளா என எனக்கே சந்தேகமாக இருக்கிறது..

இவர்களின் தவறுகளை சரி செய்வதை விடுத்து. இவர்கள் கேட்கும் கேள்விகளால் எனது தவறுகளை நான் நிறையவே திருத்தி வருகிறேன். சூழ்நிலைக்கு ஏற்ப சில டயலாக்குகளை அவர்கள் அடிப்பது... மண்டை காய்கிறது..

இவர்கள் இருவருக்கும் மூலிகை மேயும் பழக்கம் இருக்கிறது..

துளசி வெற்றிலை கற்பூரவள்ளி கொத்தமல்லி, கருவேப்பிலை என எந்த செடியை பார்த்தாலும் பிச்சி வாயில் போட்டு மென்று கொண்டே தான் இருப்பார்கள்..

இதனால் தான் என்னவோ கிழவிகள் மீது வரும் பச்சை வாசனை இவர்கள் மேல் வருகிறது..

எது எப்படி இருந்தாலும் நான் சொல்லிக் கொடுத்து வளர்க்கப்படும் குழந்தை போல இவர்கள் இல்லை..

இக்கால குழந்தைகள் எல்லோரும் இப்படிதானோ என்னவோ..

என்னை கேள்வி கேட்டும் என் தவறுகளை நான் திருத்திக் கொள்ளும் சிந்தனைகளை தூண்டும்..

ஏதோ நமது மூதாதையார் மீண்டும் வீட்டில் வந்து பிறந்ததைப் போல அவர்களுக்கு அடங்கி பயந்து தான் பல சமயங்களில் நடந்து கொண்டிருக்கிறேன்.

பல சமயங்களில் மிகச் சரியான கேள்விகளை குழந்தைகள் கேட்பதால்..

ஈகோவோ.. அல்லது குறுகிய மனப்பான்மையிலோ... கிழவி மாதிரி பேசாத .. குழந்தை போல நடந்துக்கோ வயசுக்கு ஏத்த மாதிரி பேசு என்றெல்லாம் அவர்களை நாம் மட்டுப்படுத்துகிறோம்.. அவர்களது ஒப்பினியன்களை மிக சாதாரனமாக நாம் கடந்து செல்கிறோம்..

அசட்டையாக அவர்களின் கருத்துக்களை அலட்சியப்படுத்துகின்றோம்.

வெள்ளை மனதுடைய நீதிமான்கள் குழந்தைகள் தான் அவர்களது கருத்துக்களை அப்படியே நாம் ஏற்றுக் கொள்வது தவறே இல்லை.

குழந்தைகளை எப்படி வளர்க்கணும் அவங்களுடைய மனோ தத்துவ முறைகளையும்...

சைல்ட் சைக்காலஜி என பல கோர்ஸ்களையும் ஆன்லைனிலும் புத்தகத்திலும் தினம் தினம் படிக்கிறோம் பல காணொளிகளும் காண்கிறோம்..

உண்மையிலேயே ..அவர்களை ட்ரெய்ன் செய்வது விடுத்து... நாம் பெற்ற பிள்ளைகள் என்ன சொல்றாங்க என காது கொடுத்து கேட்டாலே பாதி பிரச்சனைகளுக்கு முடிவு கட்டிவிடலாம் குழந்தைகள் நம் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டும் என்ற அவசியமே இல்லை ...

கோஆப்பரேட் செய்தாலே போதுமானது..

ஆனால் நாம் என்ன செய்துக்கொண்டிருக்கிறோம்..

நாம் தான் இயந்திரத்தனமான இந்த வாழ்வில் சிக்கி சிதைந்து கொண்டிருக்கிறோம் என்றால் LKG பிள்ளைகளைக் கூட சிறந்த கல்வி என்ற பெயரில் 9:00 மணிக்கு ஆரம்பிக்கும் பள்ளிக்கு ஏழு மணிக்கே பள்ளி பேருந்தில் ஏற்றி விடுகிறோம்.

எது மாதிரியான இயந்திரத்தனத்தை நாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்..

இது மட்டுமா.. இயற்கையாகவே குழந்தைகளுக்கு இருக்கும் ஒரு உணர்வு பகிர்ந்து உண்ணுதல் பல பள்ளிகளில் தங்கள் உணவினை மற்றக் குழந்தைகளோடு பகிர்தலை தவிர்க்கின்றனர். ஆரம்ப காலத்தில் குழந்தைகள் தங்கள் பொருட்களையோ உணவையோ மற்ற குழந்தைகளோடு பகிர்ந்து உண்ணும் பழக்கம் இல்லாதவர்களாகவே இருப்பார்கள். அதை நல் முறையில் பழக்கப்படுத்துவதே நம் கடமையே தவிர , பகிர்ந்துக் கொள்ள வேண்டாம் என்று சொல்லுவது குழந்தைக்கு ஆபத்தாக முடிந்து விடும்.

இந்ய செயல் மற்றவரின் உணர்வுகளையும் தேவைகளையும் புரிந்து நடந்து கொள்ளவும் ஆரோக்கியத்திற்கும் உதவுகிறது.

குழந்தைகள் மற்றவரோடு பகிர்ந்து கொள்ளும் பொழுது ஆக்சிடோஸின் (oxytocin) என்ற ஹார்மோன் சுரக்கிறது என குழந்தைகள் மனவளர்ச்சி மருத்துவர்கள்

தெரிவிக்கின்றனர். அன்பிற்கு அடிப்படை யாவது இந்த ஹார்மோன் தான் . கோபமாக இருக்கும் குழந்தைகள் கூட பகிர்ந்து கொள்ளும் பொழுது மகிழ்ச்சி அடைகின்றனர்.

பகிர்ந்து பழகாத குழந்தைகள் பின்னாட்களின் சமூகத்தில் நண்பர்களை உருவாக்குவதில் சிக்கலையும் சமூகத்தை கசப்பான அணுகு முறையோடும் எதிர்கொள்கின்றனர்.

இது போலவே பிள்ளைகள் மீது திணிக்கப்படும் ரேங்க் மாயை.

சேல்ஸ் & மார்க்கெட்டிங் துறைக்கு வைக்கும் டார்கெட்டை போல முதல் மதிப்பெண் தான் எடுக்க வேண்டும் என்று குழந்தைகளை வாட்டி வதைக்கிறோம் .

சில மாதங்களுக்கு முன்பு பிரபல தொலைக்காட்சி விவாத மேடையில் ஒரு தாய் தன் மகன் முதல் ரேங்கில் இருந்து இரண்டாவது ரேங்க் வந்து விட்டான் என்பதற்காக பச்சை மிளகாய்ச் சாற்றை தான் பெற்ற பிள்ளையின் கண்களில் பீச்சியதாக பெருமிதமாக பேசினார்.

குழந்தை வளர்ப்பில் கண்டிப்பு அவசியம் தான் ஆனால் இது போன்ற மோசமான செயல்கள் தாய்மையே கொன்று விடுகின்றது. கல்வியை எதிரியாக்குகிறது.

கண்டிப்பு என்ற பெயரில் தீராத மன வலியையும் வாழ்நாள் முழுவதும் அவர்களை பந்தய குதிரையை போல விரட்டி கொண்டிருப்பது தான் ஒழுக்கம் என தன்னைத்தானே பல பெற்றோர்கள் ஏமாற்றிக்கொண்டு தன் பிள்ளைகளின் ஆணி வேர்களை அரிக்கும் கரையான்களாகவும் இருக்கின்றன.

இறுதியில் குழந்தைகள் தங்கள் தன்னம்பிக்கை இழந்து தவறான முடிவுகள் எடுக்க இதுவே வழிவகை செய்கிறது.

இயந்திரத்தனமான தனிமையான ஒரு வாழ்வை அவர்களுக்கு பரிசளிக்காமல் சமூகத்தோடு சேர்ந்து வாழவும் கல்வி என்ற பெயரில் மன உளைச்சல் இல்லாத நல்வாழ்வும் நம் குழந்தைகளுக்கு வழங்குவது பெற்றோரான நம் தலையாய கடமை.

நான் வன்முறையில் பிறந்தேன்; நான் வன்முறையால் இறப்பேன்; இதுதான் என் விதி

பூலான் தேவி

ராஜபுத்திர (தாக்குர்) சமுதாயத்தைச் சேர்ந்த 22 பேரை மண்டியிடச் சொல்லி சுட்டுக் கொல்கிறாள் ஒரு பெண்மணி. இந்தியா முழுவதும் இந்த செய்தி அதிரும் துப்பாக்கிச்சூட்டின் தீயாய் பரவுகிறது. இந்த படுகொலைகளைச் செய்த பெண்மணியின் பெயர் பூலான் தேவி, அவர் பின்னாளில் மிர்சாபூர் தொகுதியின் மக்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். 2001ஆம் ஆண்டு நாடாளுமன்றக் கூட்டத்தில் கலந்துகொண்ட பின் தன் இல்லத்துக்கு மக்கள் தலைவியாக திரும்புகிறார் அம்மையார் பூலான் தேவி...

37 வருடங்களுக்கு முன்பு சரியாக 1963 ஆகஸ்ட் 10ஆம் தேதி உத்தரப் பிரதேச மாநிலத்தில் உள்ள கொர்ஹா கா புர்வா எனும் கிராமத்தில் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த தின் மல்லா, மூலா தம்பதியருக்கு நான்காவது வாரிசாகப் பிறந்தவர் அம்மையார் பூலான் தேவி. பெண் குழந்தையைச் சுமையாகக் கருதும் காலமது, பிற ஒடுக்கப்படும் சமுதாயத்தைச் சேர்ந்த பெண்கள் அனுபவிக்கும் துயரங்களை அவரும் அனுபவிக்க வேண்டிய சூழல், பண்ணை அடிமையாக இருந்தது பூலான் தேவியின் குடும்பம்.

11 வயதிலேயே ஒரு இரக்கமற்றவனுக்கு அம்மையார் பூலான் தேவியை திருமணம் செய்து வைக்கின்றனர் அவரது குடும்பத்தார். அதனை திருமணம் என்று கூட சொல்ல முடியாது, ஒரு பசு மாட்டை வாங்கிக்கொண்டு பூலான் தேவியை அவரது குடும்பத்தார் விற்றுவிட்டார்கள் என்று சொன்னால் சரியாக இருக்கும். விருப்பமற்ற கணவனால் பலமுறை பாலியல் வண்புணர்வு செய்யப்பட்ட பூலான் தேவி, அவனிடமிருந்து தப்பி ஓடுகிறார்.

கணவனின் கொடுமை தாங்காமல் தப்பி ஓடியவர் ஒரு கொள்ளைக் கூட்டத்தில் இணைகிறார் (அ) ஒரு கொள்ளைக் கூட்டத்தால் கடத்திச் செல்லப்படுகிறார் என இரு தகவல்கள் உள்ளன. அந்த கொள்ளைக் கூட்டத் தலைவன் பாபு குஜ்ஜார், பூலான் தேவியை பாலியல் வன்புணர்வு செய்து, கொடூரமாகச் சித்ரவதை செய்கிறான். இதனை சகித்துக்கொள்ள முடியாத அதே கொள்ளைக் கூட்டத்தைச் சேர்ந்த விக்ரம்

மல்லா, பாபு குஜ்ஜாரை கொலை செய்து அந்தக் கூட்டத்தின் தலைவனாக மாறுகிறான்.

விக்ரம் மல்லாவுக்கும், பூலான் தேவிக்கும் இடையே காதல் மலர்கிறது. அம்மையார் பூலான் தேவிக்கு பாதுகாப்பு அரணாக விக்ரம் இருக்கிறார். தனக்கு தொடர் சித்ரவதை அளித்த முன்னாள் கணவனை தேடிப்பிடித்து கொடூரமாக தாக்கிய பூலான் தேவி, இனி சிறுமிகளை யாராவது திருமணம் செய்தால் கொன்றுவிடுவேன் என்ற செய்தியையும் விட்டுச் செல்கிறார். கொள்ளையடிப்பதில் மும்முரமாக இருந்ததில், பாபு குஜ்ஜாரை கொலை செய்ததை விக்ரம் மல்லா மறந்து விடுகிறார்.

விக்ரம் மல்லா ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர். அவர் பாபு குஜ்ஜாரை கொலை செய்தது அதே கும்பலில் உள்ள ராஜபுத்திர சமுதாயத்தைச் சேர்ந்த ஸ்ரீராம் மற்றும் லால் ராம் ஆகியோருக்கு உறுத்தலாக இருந்தது. பழிவாங்கச் சரியான நேரம் பார்த்துக் காத்திருந்தனர். அந்த நேரமும் வந்தது, ராம் சகோதரர்கள் கும்பலுக்கும், விக்ரம் கும்பலுக்கும் இடையே துப்பாக்கிச் சூடு நடைபெற்றது. இதிலிருந்து அதிர்ஷ்டவசமாக அம்மையார் பூலான் தேவியும், விக்ரமும் தப்பிவிட்டார்கள். ஆனால் அந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை. ராம் சகோதரர்கள் தலைமையிலான ராஜபுத்திர கும்பல், இருவரையும் தேடிப்பிடித்து விக்ரமை கொலை செய்துவிட்டு பூலான் தேவியை அடிமையாக இழுத்துச் சென்றது.

அம்மையார் பூலான் தேவியை பெஹ்மாய் என்ற கிராமத்துக்கு அழைத்துச் சென்ற அந்த கும்பல், அவரை நாட்கணக்காக பாலியல் வன்புணர்வு செய்து கொடூர சித்ரவதைக்கு ஆளாக்கியது. ஒரு கட்டத்தில் தன்னைக் கொலை செய்துவிடும்படி பூலான் தேவி மன்றாடுகிறார். ஆனால் அந்த கும்பல் அவரை விடாமல் சித்ரவதை செய்து, நிர்வாணமாக ஊர்மக்கள் முன்னிலையில் அடித்து துன்புறுத்துகிறார்கள். பின்னர் பூலான் தேவியின் காதலரின் நண்பர்கள் வந்து அவரை மீட்டுச் செல்கிறார்கள். அதில் முக்கிய நபரான மான் சிங், அம்மையார்

பூலான் தேவியை மிகவும் மதிக்கிறார். அவர் பற்றி பூலான் தேவி, என்னை சதையாகவோ அடிமையாகவோ பார்க்காத ஆண் மான் சிங்தான் என குறிப்பிடுகிறார்.

பெஹ்மாய் சம்பவத்துக்கு பிறகுதான் மாபெரும் கிளர்ச்சியாளராக உருவெடுக்கிறார் அம்மையார் பூலான் தேவி. உயர்சாதி என தங்களை பிரகடனப்படுத்திக் கொண்டு மற்ற மக்களை ஒடுக்குமுறைக்கு ஆளாக்கும் கும்பல்களிடம் கொள்ளையடிக்கிறார். கொள்ளையடிப்பது மட்டுமல்லாமல், தனக்கு நேர்ந்த கொடுமைக்கு பழிதீர்க்க நினைக்கிறார். பாபா என்பவர் உதவியால் தனக்கென ஒரு பெரும் கூட்டத்தை உருவாக்கிக் கொண்ட பூலான் தேவி, தனது காதலனை கொலை செய்து தன்னை பாலியல் வன்புணர்வு செய்த கும்பலை தேடி பெஹ்மாய் கிராமத்துக்கு செல்கிறார். அங்கு தன்னை பாலியல் வன்புணர்வு செய்த இருவரை அடையாளம் கண்டுகொண்ட அவர், தன் காதலன் கொலைக்கு காரணமான ராம் சகோதரர்கள் எங்கே என விசாரிக்கிறார். தெரியாது என்ற பதிலுக்கு தோட்டாக்களை பரிசாக அளிக்கிறார்.

இந்த சம்பவம் இந்தியா முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்துகிறது. பூலான் தேவியை உயிரோடோ, பிணமாகவோ கொண்டு வருபவருக்கு ரூ.1 லட்சம் பரிசுத்தொகையாக அறிவிக்கப்படுகிறது. இதனிடையே காவல்துறையினர் பூலான்

தேவியின் ஆதரவாளர்களைக் கொன்று குவித்தனர். தன்னால் பிறர் வாழ்க்கை நாசமாவதை விரும்பாத அம்மையார் பூலான் தேவி, சரணடைய முடிவு செய்கிறார்.

சரணடைய பூலான் தேவி வைத்த கோரிக்கைகள் பின் வருமாறு:

1) என் தந்தையிடம் ஏமாற்றி பிடுங்கப்பட்ட நிலம் திரும்பி வழங்கப்பட வேண்டும்

2) என் கூட்டாளிகள் யாருக்கும் மரண தண்டனை வழங்கக் கூடாது, அதேபோல் சிறைத் தண்டனையும் 8 ஆண்டுகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும் என சில கோரிக்கைகளை முன்வைக்கிறார். இதனை ஏற்றுக்கொள்கிறது மாநில அரசு, மத்தியப் பிரதேச முதலமைச்சர் அர்ஜுன் சிங் முன்னிலையில் பூலான் தேவி சரணடைகிறார்.

அவருக்கு ஒடுக்கப்பட்ட மக்களின் ஆதரவு பெருமளவில் இருந்தது. கொள்ளையடிக்க செல்லும் இடங்களில் எல்லாம் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், பெண் குழந்தைகளுக்கும் உதவும் பழக்கம் உடையவர் அம்மையார் பூலான் தேவி. அவருக்கு பெருவாரியான மக்கள் கூட்டம் ஆதரவளித்ததில் ஆச்சரியம் ஏதுமில்லை.

அம்மையார் பூலான் தேவிக்கு 11 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கி, அவரது கோரிக்கைகளை நிறைவேற்றுகிறது மாநில அரசு. 1994ஆம் ஆண்டு நிஷாதா சமுதாய மக்கள் தலைவர் விஷம்பர் பிரசாத் நிஷாரின் முயற்சியால் பூலான் தேவி பரோலில் வெளியே வருகிறார். அவர் மீதிருந்த 48 குற்ற வழக்குகளை வாபஸ் பெற்றது அன்றைய முதல்வர் அர்ஜூன் சிங் யாதவின் அரசு. அதன்பிறகு மிர்சாபூர் மக்களவைத் தொகுதியில் சமாஜ்வாதி கட்சி சார்பாக போட்டியிட்டு 2 முறை

எம்.பி.,ஆக தேர்வு செய்யப்பட்ட அம்மையார் பூலான் தேவி, தான் சொன்னது போலவே வன்முறையால் இறந்தார்.

2001ஆம் ஆண்டு நாடாளுமன்ற கூட்டத்தில் கலந்துகொண்ட பின் தன் இல்லத்துக்கு திரும்பிய அம்மையார் பூலான் தேவியை உயர் சாதியினர் சுட்டுக் கொன்றனர்.

பாலியல் வன்புணர்வுக்கு ஆளாகி வாழ்க்கையின் மீது பற்றற்றுப் போகிறவர்கள் மத்தியில், அதிலிருந்து மீண்டு வந்து மக்கள் பிரதிநிதியான அம்மையார் பூலான் தேவி, இன்றும் பல பெண்களுக்கு உத்வேகமாக இருக்கிறார். அவர் மீது பல கொலை வழக்குகள் இருக்கின்றன. ஆனால் இன்றும் அந்தப் பெயரைக் கேட்டால் அதிகாரவர்க்கம் நடுங்கும். வாழ்நாள் முழுக்க ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவுக் குரலாய் ஒலித்தவர் பூலான் தேவி..

வீரமங்கை பூலான் தேவியின் உரை

நான் ஒரு ஆதிவாசி பெண் என்பதால் என்னை என் பெற்றோர்கள் கண் முன்னே வன்புணர்ச்சி செய்தார்கள்....

♥பிறகு காவல் நிலையத்தில் வைத்து 22 காவலர்கள் வன்புணர்ச்சி செய்தார்கள்..

மீண்டும் என்னை எனது கிராமத்தில் பல பேர் சேர்ந்து வன்புணர்ச்சி செய்தார்கள்.

அப்போதெல்லாம் இந்தியாவில் எந்தவொரு அதிர்வும் ஏற்படவில்லை..

♥ஒருநாள் என்னை வன்புணர்ச்சி செய்த 22 பேரை துப்பாக்கியால் சுட்டு கொன்றேன். ஒட்டுமொத்த இந்தியாவும் கொந்தளித்தது.

அனைவரும் என்னை தீவிரவாதி பெண் என்றார்கள். அவர்களைப்பற்றி நான் கவலை கொள்ள வில்லை. காரணம் அதன்பின் என் கிராமத்தில் இருக்கும் எந்த பெண்கள் மீதும் கை வைக்க எந்த ஆண்களும் பயந்தார்கள். அதுதான் எனக்கு தேவை...

♥என் சமூகம் நிம்மதியாக வாழ நான் தீவிரவாதியாக மாறுவதில் எனக்கு எந்த குற்ற உணர்ச்சியும் வரவில்லை...

பாலூட்டி வளர்த்த

நரேன்

வளர்ந்தபோது
வறுத்த மீனும்
சுறாப்புட்டும்
எனக்காக
எடுத்து வைத் *தாய்*

வீட்டிலே
இன்னிக்கி
மரக்கறிதான்
என்று சொல்லி
முட்டை அட்டு
ஊற்றித் தந் *தாய்* !

காலையில்
பூச்சாண்டி
வர்றான்,
ஆ காட்டு
என்றாய்!

மதியத்தில்
போலீஸ்காரர்
வர்றார்
என்ற போது
பயந்து
பிளந்த
வாயில்
பால் சோற்றைத்
திணித் *தாய்* !

இரவில்
நிலாவைக்
காட்டி
மம்மூ
ஊட்டினாய்!

இன்று
முரணாய்...
காலை
மதியம்
இரவு
உணவுக்கு முன்னால்
உணவிற்கு பின்னால்
என்று
டாக்டர் சீட்டைக்காட்டி,
ரானிடிடைன்
150 mg
அமலாக் 5 mg
க்ளோபிடோக்ரல்75 mg
ஊட்டுகிறேன்.

சிக்கன உண்டியல் செழிப்பின் களஞ்சியம்

முனைவர் வி. ஆனந்தி
உதவிப் பேராசிரியர்,
தயாள் சிங் மாலைக் கல்லூரி
தில்லிப் பல்கலைக்கழகம்

‘‘ஹாய் சுமதி எப்படி இருக்க?

‘‘ஏதோ இருக்கேன் டி ‘‘நீ எப்படி இருக்க உன் வாழ்க்கை எப்படி போயிட்டு இருக்கு’’

‘‘நான் நல்லா இருக்கேன் டி என் வாழ்க்கையும் சூப்பரா போயிட்டு இருக்கு’’

‘‘ஆமாம் எங்கே இந்த பக்கம்’’

‘‘கடைக்கு வந்தேன் டி, நாளைக்கு எங்க பையனுக்கு பிறந்தநாள் அதுக்காக தான் வந்து துணி எடுக்கலான்னு வந்தேன். ‘‘

‘‘வாங்கிட்டியா? வா வீட்டுக்கு போகலாம் எங்க வீடு இங்கிருந்து பத்து நிமிடம் தான் ஆகும்.’’

‘‘வீட்டில் போய் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுத்துட்டு அப்பறமா உங்க வீட்டுக்குப் போகலாம் ஓகேவா ‘‘என்று சுமதி அழைக்க

பக்கத்துலயா எங்கே ?

‘‘வாடி உன்னை நான் கூட்டிட்டு போறேன்’ ஆட்டோ ... ஆட்டோ என்று ஆட்டோவை கூப்பிட்டு

ஆட்டோவில் ஏறி இரண்டு பேரும் உட்கார்ந்து சுமதி வீட்டுக்குச் செல்கிறார்கள் .

வீடு வந்ததும் ‘‘வா வா உள்ளே வா வந்து உட்கார் அனு, இந்த வீட்டுக்கு இப்பதான் முதல் முறையாக வருகிறாய் இல்ல முன்பிருந்த வீட்டில் நிறைய முறை வந்திருக்க’’

எவ்வளவு நாளாச்சு நம்ப பார்த்து இப்ப சொல்லு

‘‘என்ன சாப்பிடுவ என்ன குடிக்கிற ட்ரிங்க்ஸ் இரு உனக்கு ஆப்பிள் ஜூஸ் பிடிக்கும் இல்ல எடுத்துட்டு வரேன்,’’

‘‘ஹேய் இது எல்லாம் ஞாபகம் வச்சிருக்கியா டி ‘‘

‘‘நம்ம இன்னைக்கு பார்த்து நாளைக்கு ஃப்ரெண்ட்ஷிப் வச்சிக்கிட்டோம் மா என்ன? சின்ன வயசுல இருந்து ஒண்ணா படிச்சோம் அப்ப உன்னுடைய டேஸ்ட் எல்லாம் எனக்கு தெரியாதா டி ‘‘

‘‘சரி சரி கோச்சிக்காதடி எடுத்துட்டு வா சாப்பிடலாம்’’

‘‘இதோ வரேண்டி’’ என்று இரண்டு பேருக்கும் ஆப்பிள் ஜூஸ் எடுத்துக் கொண்டு வருகிறாள்.

‘‘ஆமாம்... கோமதியை பார்த்தியா?’’

‘‘இல்லடி ரொம்ப நாளாச்சு நீ பார்த்தியா?’’

‘‘ஆமாம் டி நேற்றுதான் பார்த்தேன் அவ குழந்தைங்க எல்லாம் ஃபாரின் டூர் போறாங்களாம் நேத்து தான் பேசினேன்.

‘‘அவளைப் பார்த்தால் எனக்கு ரொம்ப பொறாமையா இருக்கு நம்ம மூணு பேரும் பள்ளிக்கூடத்தில் இருந்து கல்லூரி படிக்கும் வரை தோழிகளாக இருந்தோம்.

ஆனா இன்று நம்மள விட கோமதி தான் ரொம்ப பெரிய பணக்காரனை கல்யாணம் பண்ணிக்கிட்டு ஃபாரின் டூர் போவது,,, நல்ல நல்ல டிரஸ் போடுவது, அவ ஹேர் ஸ்டைல் என்ன எல்லாம் மாறிப்போச்சு அவளைப் பார்த்தா எனக்கு ஏன் இவ்வளவு பொறாமையா இருக்குன்னு தெரியல’’

‘‘அவங்க வீட்டுக்காரர் நல்லா சம்பாதிக்கிறார் அவங்க கிட்ட பணம் இருக்கு எங்க வேணா அவங்க டூர் போவாங்க நல்லா டிரஸ் போடுவாங்க அதுக்கு ஏண்டி நீ பொறாமை படுற ‘‘

சுமதி, நீயும் அதே மாதிரி டிரஸ் போட்டுக்கோ டூர் போயிட்டு வா ஒன்னும் பிரச்சனை இல்ல’’

‘‘அது மாதிரி எப்படி போறது என் வீட்டுக்காரர் ஒத்தையா சின்ன வேலை செய்கிறார் அவருக்கு வருகிற வருமானத்துல எங்க குடும்பம் நடத்துறதே பெரிய பாடா இருக்கிறது இதில் எங்கிருந்து நான் டூர் கீர் போகிறது ‘‘

‘‘சுமதி... ஆமா நீ எங்கேயும் வேலைக்கு எதுவும் போகலையா?’’

‘‘இல்லடி இரண்டு மூணு ஆபீஸ்ல வேலைக்கு தேடி பார்த்தேன் கிடைக்கல அதனால இப்ப வீட்லதான் இருக்கேன்’’

‘‘வேலை கிடைக்கும், வேலை கிடைக்கும்ன்னு உட்கார்ந்துட்டு இருந்தா வேலை கிடைக்குமா? ஏதாவது பிசினஸ் பண்ணலாம் இல்ல ..நீ ஸ்கூல் படிக்கும்போது உன்கிட்ட ஒரு அருமையான திறமை இருந்தது ம்ம்... நீ நல்லா ட்ராயிங் பண்ணுவ நல்லா ஸ்டிச் பண்ணுவ சோ அதெல்லாம் வளர்த்துக்கலாம் இல்லையா அதை வைத்து பிசினஸ் பண்ணலாமே ‘‘

எங்கடி அது ஸ்கூலோட போயிடுச்சு அதுக்கப்புறம் கல்யாணம் குழந்தைன்னு நான் வந்துட்டேன் அவ்வளவுதான் அது... டச் விட்டு போச்சு டி ‘‘

‘‘இங்கே பாரு சுமதி நம்ம எல்லார்கிட்டயும் ஒவ்வொரு திறமை ஒளிந்துகிட்டு இருக்கும் அதனை கண்டுபிடித்து அந்த திறமையை நாம வளர்த்துக் கொள்ள வேண்டுமே ஒழிய மற்றவர்களைப் பார்த்து பொறாமைப்படக்கூடாது. அவர்களை விட உயர்வாக ஆகணும் என்று நினைக்கணும்

என்னை எடுத்துக்கோ எங்க வீட்லயும் மீடியமா தான் சம்பாதிக்கிறார் எனக்கு ஏதோ கல்லூரி முடிச்ச உடனே வேலை கிடைச்சிடுச்சு அதனால நாங்க ஒரு டைம் டேபிள் போட்டு வச்சிருக்கோம் அதாவது என்னுடைய சம்பளத்துல இத்தனை பர்சன்டேஜ் இதற்கு, இத்தனை பர்சன்டேஜ் அதற்கு, அப்படின்னு ஒரு வரையறைக்குள் குடும்பம் நடத்திட்டு இருக்கேன் அதனால எங்களுக்கு இதுவரை எந்த கடன் தொல்லையும் இல்லை மகிழ்ச்சியா நல்லபடியா இருக்கிறோம்.

யார் ஒருத்தர் கடன் இல்லாமல் நல்லா சந்தோஷமா இருக்காங்களோ அவங்கதான்டி பெரிய பணக்காரர்

அதுமட்டுமில்லாமல் நானும் சினிமா போறேன் நானும் வருஷத்துக்கு ஒருமுறை குடும்பத்தோடு டூர் போகிறேன், எல்லாமே நல்லா தான் நடக்குது.''

''எப்படி டி இதெல்லாம் ஆமா என்னமோ பர்சன்டேஜ் ன்னு சொன்னியே அது என்னது ''

அது ஒன்னும் இல்லப்பா அது ஒரு சேவிங் டெக்னிக், எங்க வீட்ல நான் ஆறு உண்டியல் வைத்திருக்கிறேன் அந்த ஆறு உண்டியல்களுக்கும் பெயர் வச்சிருக்கேன்.

''என்ன உண்டியலுக்கு பெயரா இன்ட்ரஸ்டிங்கா இருக்கே எப்படி''

எப்படி என்றால் முதல் உண்டியான 1.அத்தியாவசிய உண்டியல் அத்தியாவசிய செலவாகிய வீட்டு வாடகை, மளிகைச் சாமான்கள், பால் , பழங்கள், காய்கறிகள் இது எல்லாம் அடங்கும் (எனக்கு வீடு சொந்த வீடாக இருப்பதால் வீட்டு வாடகை மிச்சம்) இதற்கான செலவுக்காக 55% அந்த உண்டியலில் போட்டு விடுவேன்

இரண்டாவது உண்டியானா 2. லாங் டெர்ம் அதாவது சேவிங் உண்டி அதுல பத்து பர்சன்ட் மாத மாதம் போட்டு விடுவேன் இது எதற்கு என்றால் அதாவது நம்முடைய

எதிர்காலத்திற்கு கார் எல்லாம் வாங்கணும்னா நிறைய செலவா ஆகும் இல்லையா அதனால நிறைய பணம் சேர்த்து வைக்கணும் இல்லையா அதற்காக.

மூன்றாவது உண்டியான 3. சுய செலவு உண்டி அதுலயும் 10% போடுவேன் அது எதற்கு என்றால் இப்ப வந்து நான் நிறைய புத்தகம் படிக்கிறதுனால என்னை நானே டெவலப் பண்ணிப்பதற்கு அதிக புத்தகங்கள் வாங்க வேண்டி இருக்கும் அப்போ அந்த உண்டியலில் இருந்து பணத்தை எடுத்து அதற்கு பயன்படுத்திக் கொள்வேன் என்னை நானே டெவலப் பண்ணுவதற்கு அதுபோல எங்கேயாவது போக நல்ல டிரஸ் வாங்குவது, watch வாங்குவது இதெல்லாம் அதில் அடங்கும் .

நான்காவது உண்டியலில் 10% போடுவேன் அது எதற்கு என்றால் அந்த உண்டி பேரு 4. எதிர்கால உண்டி எதிர்காலம் என்பது கல்விச்சலவு இருக்கலாம், நம்ம எதிர்காலத்தில் மியூச்சுவல் ஃபண்ட்ல போடலாம், இல்ல எல்ஐசி கட்டலாம் இது போன்ற ஒரு எதிர்கால செலவுக்காக அந்த உண்டியலில் இருந்து பணம் எடுப்போம்

ஐந்தாவது உண்டியான 5. விளையாட்டு உண்டி இதுலயும் நான் 10% போடுவேன் இது எதற்கு என்றால் குழந்தைகள் பிறந்தநாள் எங்களுடைய பிறந்தநாள் வந்தால் எங்கேயாவது ரெஸ்டாரண்டுக்கு போவது படத்துக்கு போவது, டூர் எங்கனா போனோம்னா அதுல இருந்து எடுத்துக் கொள்வோம் .

ஆறாவது உண்டியான 6 தானம் உண்டி இதுல மாத மாதம் 5% ஒதுக்கி விடுவேன் அன்னதானம் செய்வது அல்லது அதாவது அல்லது முதியோர் இல்லம் சென்று முதியோருக்கு தானம் பண்ணுவது அந்த மாதத்தில் திருமணம் ஏதாவது இருந்தால் அவர்களுக்கு கிப்ட் வாங்கி கொடுப்பது போன்ற செலவுகளை செய்ய இந்த உண்டியை பயன்படுத்துவேன்

ஆக, இந்த ஆறு உண்டியல்கள் தான் என்னுடைய களஞ்சியங்கள் என்று சொல்லலாம் ‘‘ இப்படி தான் மாதம் மாதம் நாங்கள் செலவு செய்யறதுனால எங்களுக்கு வாழ்க்கை ரொம்ப அருமையாக இருக்குது யாரிடமும் கடனும் வாங்குவது கிடையாது

‘‘நல்லா இருக்கே இந்த ஐடியா ரொம்ப நல்லா இருக்கே ஆமாம் இந்த ஐடியா எல்லாம் எப்படி வந்தது உனக்கு?

அது வா .. ஒரு நாள் புத்தகத் திருவிழாவிற்கு போயிருந்தேன் அங்கு ஒரு புத்தகம் எனக்கு கண்ணுல பட்டது அந்த புத்தகத்தின் மேல் Think rich to get rich!

என போட்டு இருந்தது அந்த புத்தகத்தின் பெயர் "secrets of the millionaire mind" யார் எழுதினது என்றால்? (ஆத்தர்) T.Harv Eker. இவரு இந்தப் புத்தகத்தை எழுதுவதற்கு அவருக்கு 14 வருடங்கள் ஆனது, அத்தனை வருடங்களாக யோசிச்சு எப்படி சேமித்தால் எப்படி நிம்மதியாக வாழலாம் என்று அதில் எழுதி இருப்பார் அவர் கொஞ்சம் வேற மாதிரி எழுதியிருப்பார் அதுல நான் கொஞ்சம் எனக்கு ஏத்த மாதிரி அழகு பண்ணி எனக்கு புரியும்படி நான் உண்டியலை பிரிச்சு அதுல பணம் பணம் போட்டு சேமித்துக் கொண்டு வாழ்ந்து வருகிறேன்."



"சூப்பர் டி சூப்பர் சூப்பர் நல்லா இருக்குப்பா எதோ படம் பார்த்த மாதிரி இருக்கு இதன் மூலமா சேமிப்பு எப்படி செய்யலாம் என்பதையும் கற்றுக் கொண்டேன்"

"அதே மாதிரி நீயும் வந்து தனக்கு ஒரு வரையறையை வகுத்துகிட்டா, குடும்பத்துல நீயும சந்தோஷமாக இருக்கலாம்"

அதற்கு நீயும் ஒரு வருமானத்தை தேடிக்கொள் அதாவது உனக்கு தெரிஞ்ச ஸ்டிச்சிங் அதெல்லாம் வச்சு ஒரு பிசினஸ் பண்ண கத்துக்கோ அதுக்கப்புறம் இது மாதிரி சேமித்து வைத்து நீயும் கோமதியை விட அருமையா மேல முன்னுக்கு வரலாம் நீயும் நல்ல டிரஸ் போட்டுக்கலாம் வருடா வருடம் குடும்பத்தோடு டூர் போகலாம் சந்தோஷமா வாழ்க்கை ஓட்டலாம் சரியா? "

நீ பொறாமை படுவதை விட்டுட்டு நம்ம இன்னும் எவ்வளவு நல்லா சம்பாதிக்கலாம் நம்ம வீட்டை எப்படி ஓட்டலாம் என்பதை மட்டும் யோசிச்சு பிளான் பண்ணு"

"ஆமாம்பா நீ சொல்வது சரிதான் இன்றைக்கு இதைப் பற்றி என் கணவரிடம் பேசுகிறேன் தேங்க்யூ அனு இந்த மாதிரி எனக்கு அருமையான ஒரு ஐடியா கொடுத்ததற்கு."

‘‘நமக்குள்ள என்னடி தேங்க்ஸ் சரிடி ரொம்ப நேரம் ஆச்சு நான் போயிட்டு வரேன் ஆல் தி பெஸ்ட் பாய் பாய்’’ என்று கூறிவிட்டு செல்கிறாள்.’’

நடந்ததை எல்லாம் அலுவலகத்தில் இருந்து வீட்டுக்கு வந்த கணவனிடம் கூறியப் பிறகு கணவனும் அவளுக்கு உதவி செய்கிறார். ‘‘இங்கே பாரு நம்ம ரெண்டு பசங்களையும் அம்மா இருக்காங்க பார்த்துப்பாங்க நீ என்ன பண்ற பக்கத்துல ஒரு பேஷன் டிசைனிங் சொல்லிக் கொடுக்கிற கல்லூரி இருக்கு அதுல போய் சேரு சேர்ந்து படி படிச்சி முடி உன் திறமையை மேலும் வளர்த்துக்கோ அதுக்கப்புறம் நம்ப சொந்த கடை கடை வைப்பது பற்றி யோசிக்கலாம் சரியா ‘‘

‘‘சரிங்க நாளைக்கு நான் போய் அந்த காலேஜ்ல சேர்ந்து படிக்க என்னென்ன வேணும் என்பதை இன்னைக்கே போய் கேட்டு தெரிந்து கொண்டு வந்து விடுகிறேன் ஓகேவா’’

அதன்படி அவள் அருகில் உள்ள பேஷன் டிசைனிங் கல்லூரியில் போய் விசாரித்து விட்டு வந்து மறுநாள் கல்லூரியில் சேர்ந்து படித்தால் அது அவளுக்கு சுய தொழில் தொடங்க ஏதுவாக இருந்தது .

அவளுக்கு ஏற்கனவே ஓவியத்தின் மீது ஆர்வம் இருந்ததால் பத்து மாத கோர்சை ஐந்து ஆறு மாதத்தில் கற்றுக் கொண்டாள் சீக்கிரமாக முடித்து கோர்ஸில் போய்க்கொண்டே ஓய்வு நேரத்தில் வந்து நிறைய ஓவியத்தை வரைந்து youtube அண்ட் facebook, instagram எல்லாவற்றிலும் போட தொடங்கினாள்.இதன் மூலம் அவளுக்கு நிறைய ஆர்டர்கள் வந்தது மனம் தளராமல் அதில் ஓயாமல் உழைத்து ஒரு வாடகை இடத்தைப் பிடித்து ‘‘அனு பேஷன் டிசைன்’’ என்ற கடையைத் திறந்து அது மிக அருமையாக ஓடியது .

இன்று ஒரு தொழில் முனைவராக இருக்கிறாள் அதற்கு காரணம் அவளுடைய தோழிதான் அதனால தான் அந்த பேஷன் டிசைன் பெயரும் தோழியின் நினைவாக தோழியின் பெயராகிய ‘‘அனு பேஷன் டிசைன்’’ என்று பெயர் வைத்திருந்தாள.

அதில் பெண்கள் மிகவும் ஆர்வமாக கலந்து கொண்டு முன்னுருக்கும் மேற்பட்ட மாணவர்கள் படிக்கிறார்கள். அவளுக்கு அண்டர்ல பத்து பேர் வேலை செய்கிறார்கள் ஃபேஷன் டிசைனர் ஓவியர் இன்டீரியர் டிசைனர் என தொழில் அதிபராக இன்று தலை நிமிர்ந்து வாழ்கிறாள். உள்ளூரில் மட்டுமின்றி வெளியூரிலும் கம்பீரமாக உலா வருகிறாள்.

ஆடிப்பிறப்பு!

நாவாலியூர் சோமசுந்தரப் புலவர்

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுமுறை
ஆனந்த மானந்தம் தோழர்களே!
கூடிப்பனங்கட்டி கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

பாசிப்பயறு வறுத்துக்குத்திச் செந்நெல்
பச்சை அரிசி இடித்துத் தெள்ளி,
வாசப்பருப்பை அவித்துக்கொண்டு
நல்ல
மாவைப் பதமாய் வறுத்தெடுத்து,

வேண்டிய தேங்காய் உடைத்துத் துருவியே
வேலூரில் சக்கரையுங் கலந்து,
தோண்டியில் நீர்விட்டு மாவை அதிற்கொட்டி
சுற்றிக் குழைத்துத் திரட்டிக்கொண்டு.

வில்லை வில்லையாக மாவைக் கிள்ளித்தட்டி
வெல்லக் கலவையை உள்ளே இட்டு
பல்லுக் கொழுக்கட்டை அம்மா அவிப்பாளே
பார்க்கப் பார்க்கப் பசி தீர்ந்திடுமே!

பூவைத் துருவிப் பிழிந்து பனங்கட்டி
போட்டு
மாவுருண்டை பயறுமிட்டு
மாவைக் கரைத்தம்மா வார்த்துத் துழாவுவாள்
மணக்க மணக்க வாயூறிடுமே!

குங்குமப் பொட்டிட்டு பூமாலை சூடியே
குத்து விளக்குக் கொளுத்தி வைத்து
அங்கிளநீர் பழம் பாக்குடன் வெற்றிலை
ஆடிப் பாடிப் படைப்போமே!

வண்ணப் பலாவிலை ஓடிப்பொறுக்கியே
வந்து மடித்ததைக் கோலிக்கொண்டு
அன்னை அகப்பையால் அள்ளி அள்ளி வார்க்க
ஆடிப் புதுக்கூழ் குடிப்போமே!

வாழைப் பழத்தை உரித்துத் தின்போம் நல்ல
மாவின் பழத்தை அறுத்துத் தின்போம்
கூழைச் சுடச் சுட ஊதிக்குடித்துக்
கொழுக்கட்டை தன்னைக் கடிப்போமே!

ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை
ஆனந்த மானந்தந் தோழர்களே
கூடிப் பனங்கட்டிக் கூழுங் குடிக்கலாம்
கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!

Biddy Bridget Mason

Biddy Bridget Mason (1815-1891) was born into slavery and given as a wedding gift to a Mormon couple in Mississippi named Robert and Rebecca Smith. In 1847 at age 32, Biddy Mason was forced to walk from Mississippi to Utah tending cattle behind her master's 300-wagon caravan.

After four years in Salt Lake City, Smith took the group to a new Mormon settlement in San Bernardino, California in search of gold. Biddy Mason soon discovered that the California State Constitution made slavery illegal, and that her master planned to move them all to Texas to avoid freeing them. With the help of some free blacks she had befriended, she and the other slaves attempted to run away to Los Angeles, but they were intercepted by Smith and brought back. However, when he tried to leave the state with his family and slaves, a local posse prevented his flight. Biddy had Robert Smith brought into court on a writ of habeas corpus. She, her daughters, and the ten other slaves were held in jail for their own safety until the judge heard the case and granted their freedom.

Now free, Mason and her three daughters moved to Los Angeles where they worked and saved enough money to buy a house at 331 Spring Street in downtown Los Angeles. Biddy was employed as a nurse, midwife, and domestic servant. She was one of the first black women to own land in the city of Los Angeles. She had the gumption to use part of her land as a temporary resting place for horses and carriages, and people

visiting town paid money in exchange for the space. This can be considered the first "parking lot" in Los Angeles!

Knowing what it meant to be oppressed and friendless, Biddy Mason immediately began a philanthropic career by opening her home to the poor, hungry, and homeless. Through hard work, saving, and investing carefully, she was able to purchase large amounts of real estate including a commercial building, which provided her with enough income to help build schools, hospitals, and churches. Her financial fortunes continued to increase until she accumulated a fortune of almost $300,000. In today's money, that would be $6M. Her most noted accomplishment is the founding of the First AME Church in California.

Like many refugees around the world who escaped persecution, she used her energy to create a fulfilling life, while continuing to encourage the downtrodden in their journey toward a better life. Sounds like an incredible woman.

நாவல் அத்தியாயம்-2

தைரிய லட்சுமி

வை.மு.கோதைநாயகி

அவன் இதயத்தில் கவலை என்கிற மேகம் கப்பிக்கொண்டது. கண்களில் மழைபெய்வது போல் கண்ணீர் பெருக சுப்ரமணியன் கடிதத்துடன் மனைவியிடம் வந்து கடிதத்தைக் கொடுத்தான். நாகலக்ஷ்மி கடிதத்தைப் படித்துவிட்டு கவலையே படவில்லை.

உம்! இதென்ன ப்ரமாத அதிர்ச்சியா என்ன? இம்மாதிரி பதில் தான் வரும் என்பது நான் எதிர்பார்த்தவிஷயந் தான். எனக்கு இதனால் கவலையே இல்லை;நான் சமயம் வரும்போதெல் லாம் சொல்லிக் காட்டுவதைவிடப் போவதில்லை. இதே வர தக்ஷிணைவலையை நீங்களும் உங்கள் மூத்தமகன் விவாகஏரியில் வீசி வரதக்ஷிணை என்கிற பக்கா மீன்களைப் பிடித்த பேர்வழி தானே? நான் அப்போதும் இந்தப் பிசாசுவேண்டாம் என்று சொன்னது மறந்துவிட்டதா? அப்போது சற்றும் எதையும் லக்ஷியம் செய்யாது இறுமாந்திருந்த நிலைமையில் செல்வமும் சரீர முடுக்கும் ஒத்தாசை செய்தது. என் பேச்சு ஏறாமல் சமுத்திரத்தில் கரைத்த சர்க்கரையைப்போல் ஆகிவிட்டது. அந்த உணர்ச்சியை இப்போ து நினைத்துப்பார்க்கிறதுதானே? சமூகத்திலுள்ள ஊழல்களை சமூகத்தவர்கள்தான் சேர்ந்து களைந்தெறிய வேண்டுமேயன்றி மற்றவர்கள் வருவார்களா? கட்டுப்பாடாக வரதக்ஷிணை அரக்கனை ஒழிக்க வேண்டு மென்று கங்கணங் கட்டிக்கொண்டு ை உழைத்தால் ஒரு சிறி தாவது குறையாமலா போகும். நீங்கள் கூசாமல் 5 ஆயிரம் வாங்கியதுபோல் இப்போது கடைசீ பெண்ணுக்கும் கொடுத் துக் கடனைத் தீர்த்தால் பெண் சந்தோஷப்படுவாள், இல்லாவிட்டால்...

என்று முடிப்பதற்குள் வெகு தைரியமாய் இவர்களின் மூத்த மருமகள் அங்குவந்து மாமியாரை நோக்கி, ‘‘அம்மா! எங்க அப்பாவும் இப்படித்தான் தவித்துத் தண்ணீராய்

உருகி எங்கள் வீட்டையே அடகுவைத்து ஆயிரம் ரூபாய் கடன்வாங்கி 5 ஆயிரம் உங்களுக்குக் கொடுத்துப் பின் மூவா யிரம் கல்யாணச் செலவு செய்தபிறகு மேலே மேலே ஏற்பட்ட செலவின் பயங்காச் சுழலில் வீடு கடனில் மூழ்கிப்போய்விட் டதை நீங்கள் அறிய வில்லை. இப்போது சந் தர்ப்பம் வரும்போது 'சொல்லிக்காட்டவே ண்டும் என்று சொல்கிறேன். அப்பாவின் கதியைக் கண்டு நான் என்ன தான் தவித்தேன் தெரியுமா? இந்த அவமானம் தாங்காதுதான அம்மாவும் அப்பாவும் உலகையேவிட்டு மறைந்தார்கள். என்று கண்ணீர்ப் பெருகச் சொல்விவிட்டுச் சடக்கென்று உள்ளே போய்விட்டாள்.



இதைக்கேட்ட சுப்ரமணியத்தின் மனம் பின்னும் பாகாய் உருகியது. முதலிலிருந்த நிலைமையும் முடுக்கும் இப்போது அடங்கிவிட்டதல்லவா! நான்கு பெண்களுக்கும் விவாகத்தைச்செய்து ஓட்டாண்டியாகிவிட்ட சமயம் மூத்த மகனின் கல்யாணம் ஒரு கறவை மாட்டைக் கறந்து உரிவதுபோல் சம்மந்திகளை உரிந்துவிட்டார். பிறகு பிள்ளைகளின் படிப்பு, மூத்த பெண்களின் மற்றபடியான செலவுகள் – எல்லாம் மனி தனை அடியோடு ஆட்டிவிட்டதால் நந்தினியின் கல்யாணம் எப்படியாவது முடிந்து அவளைக் கொண்டு தள்ளிவிட்டால் போதும் என்ற எண்ணத்துடன் தான் இருந்தார். ''ஏதோ நல்ல இடம், உயர்ந்த குடும்பம், பெரிய படிப்பு, அழகான பிள்ளை-ஒரே பிள்ளை, நந்தினியை நன்றாக நடத்துவார்கள் என்றெல்லாம் கனவு கண்டு கடனை வாங்கியாவது கல்யாணத் தைச்செய்துவிடவேண்டும். இந்த வரன் தப்பினால் இம்மாதிரி கிடைக்காது என்கிற ஆசையால் துணிந்து இறங்கிவிட்டார்.

தனக்குள்ள சகல சொத்துக்களும் அடமானத்தின் சங்கிலியில் ஊசலாடும்போது துணிந்து யார் கடனைக்கொடுப் பார்கள்? கல்யாணத்தின்போது எப்படியோ நடந்துவிட் டது. இப்போது தானே திண்டாட்டம் அதிகமாகி வதைக் கிறது. தவித்துக்கொண்டே இருக்கையில் நந்தினி வந்தாள். அப்பா! கடிதத்தை அம்மா காட்டினாள்,நானும் பார்த்தேன். இதென்ன அசட்டுத்தனம்; எனக்காக நீங்கள் கண் கலங்க வேண்டாம். நான் ஒரு பிள்ளை என்று எண்ணிவிடுங்கள்; அவர்கள் இத்தகைய ஈவிரக்கமற்ற கொடுமை செய்வார்கள் என்று தெரிந்திருந்தால் உலகத்தில் எத்தனையோ பேர்கள் கல்யாணமே இல்லா திருக்கிறார்களே, அதுபோல் நானும் இருக் திருக்கலாம். என்னை

ஸ்காலர் ஷிப்பில் காலேஜில் சேர்க்க ஏற்பாடுசெய்து அனுப்பி விடுங்கள். அவர்களுக்கு மனது இரங்கிவந்து அழைக்கும் போது நான் போகிறேன். வீணாகக் குழம்பித் தவிக்கவேண்டாம். கடன் என்கிற கடவில் கரைகாணாது தவிப்பது போதும். இனி அவைகளை விற்றுக் கடன் தொல்லையைத் தீர்த்துக்கொண்டு சுகமாக வாழுங்கள்; வீணான யோசனை வேண்டாமப்பா. நான் செய்த பாவந்தான் உங்களை ஆட்டு கிறது. இப்போதுள்ள நிலைமையில் பிடிவாதமாய் என்னைக் கொண்டு விட்டுவிட்டு வந்தால் அது ரஸாபாஸமாக முடியும். திரும்பவும் அவர்கள் என்னைக் கால்பந்து ஆடுவதுபோல் இங்குக்கொண்டு தள்ளினால் என்ன செய்வது? அல்லது மக னிடம் என்னை அனுப்பாமல் வேலைக்காரிபோல் வைத்திருந்தால் உங்கள் மனம் சகிக்குமா? அது அழகா? ஊரர்தான் என்ன சொல்வார்கள்.

அல்லது பட்டிணத்தில் அவர் தனியாக இருக்குமிடத் திற்கு நீங்கள் கொண்டுவிட்டால்மட்டும் திருடன் வாழ்வது போல் திருட்டு வாழ்க்கைதானே வாழவேண்டும் ? அது இனிக்குமா! அதனால் அவருக்குத்தான் என்ன சந்தோஷம்? நான் சகலத்தையும் அலசிப்பார்த்துவிட்டுத்தானப்பா சொல் கிறேன். இனி இரண்டாங்கல்யாணத்திற்கு அவர்கள் துணிய முடியாது. சட்டம் அதற்கு வேலிபோட்டிருக்கிறது: ஆகை யால் பயப்படவேண்டாம்! அப்படி யாராவது ரகஸியமாய் விவாகம் செய்துவைக்கவும் பெண் கொடுக்கவும் முன்வந்தால் நானே நேரில் சென்று' என்னை விளம்பரப்படுத்தி அதைத் தடைசெய்கிறேனப்பா! நான் இத்தனை நேரம் என் சினே கிதை சீதாவிடம்போய்ப் பேசிக்கொண்டிருந்தேன் ; அவள் பிதா எனக்கு ஸ்க்ாலர்ஷிப்பு வாங்கிக்கொடுப்பதாயும் தன்னா லான உதவி செய்வதாயும் சொன்னார். ஆனால் இந்த விஷ யங்கள் ஒன்றும் அவருக்குத் தெரியாது. நான் படிக்க ஆசைப்படுவதாக அவரிடம் கேட்டேன். நீங்கள் கவலையே படவேண்டாம். இக்கடிதத்திற்கு பதிலும் எழுதவேண்டாம்; நானும் இனி அவருக்கு எழுதப்போவதில்லை. என்ன நடக் கிறதோ பார்க்கலாம், நீங்கள் என் படிப்புக்காக ஏற்பாடு செய்யுங்கள்.

அப்பா! இந்த அனுபவத்திலிருந்தாவது இனி இருக்கும் பிள்ளைகளுக்கு வாதக்ஷிணை வாங்காது விவாகத்தைச்செய்து காட்டுங்கள். அந்தக் கொடிய பழக்கத்தைக் குழிதோண்டிப் புதைக்கக் கங்கணங்கட்டிக்கொண்டு ப்ரசாரம் செய்யுங்கள்'' என்று படபடத்துக் கூறினாள்.

தன் மனைவி, மருமகள், மகள் மூவரும் இம்மாதிரி சுடச் சுடப் பேசுவார்கள் என்று இவர் சற்றும் எ எதிர்பார்க்கவில்லை யாதலால் இன்னது செய்வதென்று தோன்றாமல் விழிக்கிறார். பெண் சொல்கிறபடி பேசாதிருந்துவிடலாமா? அப்படி இருந்் தால் ஊரார் என்னசொல்லுவார்கள்? 'பெண்ணை வாழவிடா மல் இம்மாதிரி செய்வது அழகா?' என்று ஏசமாட்டார்களா? ஒரு பெண் இம்மாதிரி வீட்டோடு இருப்பதால் மற்ற பிள்ளை களுக்கு மதிப்புடன் பெண் கொடுக்க வருவார்களா? மருமகப் பிள்ளைகள் தான் மதிப்பார்களா? என்கிற கலக்கம் உண்டாகி விட்டதால் ஒருவருக்கும் எத்தகைய பதிலும் சொல்ல முடியாமல் தடதடவென்று வெளியே சென்றார். ஒவ்வொரு வருடைய வார்த்தையும் அவருடைய செவியில் ஒலித்து இதயத்தைத் தாக்கியது.

அம்மா தோசை

நரேன்

வயிறு நிறைஞ்சு
போதும்மா
என்றாலும்,
ஊத்திட்டேன்
கொஞ்சம் இரு
தட்டில் விழும் ஆறாவது
செல்ல தோசை.

சந்திரோதயம் பதிப்பகம், மதுரை
நூல் விலைப்பட்டியல்

3/422, Thiruvalluvar Street, Dinamani Nagar, Madurai 625 018.
Mob: +91 7010997639

நூல்கள்		விலை
1.	திருவிளையாடல் புராணக்கதைகள் (எளிய உரைநடையில்)	200
	கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதை நூல்கள்	
1.	உன்னோடு உரையாடுதல்	100
2.	காதல் மொழி	200
3.	பார்வையில் பூத்த நிலா	100
4.	தேனடையும் வரலாறு	100
5.	நுண்கலை மருத்துவன்	200
6.	தொடரும் புழுதிக்கால்கள்	100
7.	புரட்டாசி மூன்றாம் சனிக்கிழமை இரவு	200
	முனைவர் செ. இராஜேஸ்வரியின் எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்	
1.	வெற்றித்திருமகள் எம்.ஜி.ஆர்.	200
2.	எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்	200
3.	சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர் கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்)	200
4.	வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட	200
5.	மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்	200
6.	எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி	200
7.	எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி	200
8.	ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.	200
9.	வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் - I	200
10.	நீங்க நல்லா இருக்கணும் (எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - 1)	
11.	பாட்டுடைத் தலைவன். எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II]	200
12.	இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்	200
13.	முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்	200
14.	இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.	200
15.	எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு	200
16.	படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு	200
17.	Unique Fandom of MGR	200
18.	எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்	200
19.	எம்ஜி.ஆர். படத்தில் சண்டைக்காட்சிகளின் சுவாரஸ்யங்கள்-1	200
20.	எங்க வீட்டுப்பிள்ளை.	200
21.	எம்.ஜி.ஆர். வீடும் விருந்தும்	
	முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் நூல்கள்	
1.	தலைமை பொறுப்பேற்கலாம்	200
2.	இணையத் தமிழ்	120
3.	ஊடகச் சட்டங்கள்	250
4.	ஆஸ்திரேலியாவில் அருந்தமிழ்	200

5.	கொசு வீட்டில் பாயாசம் (சிறுவர் நூல்)	200
6.	பாரதியார்	100
7.	நவீன மொழி பெயர்ப்பு உத்திகள்	200
8.	மாயோன் வீட்டுத் தோட்டத்தில் (சிறுவர் நூல்)	
9.	மாயோன் வீட்டு யானை (சிறுவர் நூல்)	

பிற ஆசிரியர்களின் நூல்கள்

1.	பன்முகப் பண்பாட்டு உரையாடல் - முனைவர் ஆனந்த அமலதாஸ்	200
2.	மொழிபெயர்ப்புத் திறன் - பேரா. முனைவர் மு. முத்துவேலு	150
3.	சிறுநல் வாழ்க்கை - முனைவர் ஜோதி எஸ். தேமொழி	200
4.	ஏன்? எதற்கு? எப்படி? - முனைவர் ஜோதி எஸ். தேமொழி	150
5.	உடல் நலமும் புதிய சிகிச்சை முறைகளும் - முனைவர் ஜோதி எஸ். தேமொழி	150
6.	தமிழ் இறைவனார் யார் - பேரா. முனைவர் மு. முத்துவேலு	200
7.	கவிஞர்களும் எழுத்தாணிய - மேனகா நரேஷ் (NJ)	300
8.	இலக்கிய நயங்களும் நுட்பங்களும் – மு. பழநிச்சாமி	300

Other Books

1.	Concepts of Constitution - Dr. S. Kalai Arasu	300
2.	Aranyani By Vijeni (English Novel Part I & Part II)	200
3.	Translating Tamil Poetry - Dr. C. Rajeswari	200
4.	Tie Your Hears with Words - Afrah Fathin F.N.	215

முனைவர் செ. இராஜேஸ்வரியின் சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்

1.	பண்பாட்டு நகர்வுகள் - தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு	200
2.	பெண் தெய்வ வழிபாடு	200
3.	தேவேந்திரன்	200
4.	மருதநிலப் பெண் தெய்வங்கள் (வராகி, பிடாரி, தவ்வை)	200
5.	இரு நிலத்தில் திருமுருகன்	200
6.	முன்னோர் வழிபாடு (கதிரவன். காலதேவன், நாகர் வழிபாடும்)	200
7.	வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும்	200
8.	யானைக்கடவுள்	200
9.	பெண் பூப்பின் புனித வழிபாடு	200
10.	வழிபாட்டின் வேர்களைத் தேடி	250
11.	பெண் தெய்வம் (தோற்றமும் வரலாறும்)*	300
12.	உலகத்தமிழரின் ஒரே நூல் திருக்குறள்	200

சமய வழிகாட்டி நூல்கள் (7)

சாமிகளின் சரித்திரம் (வரலாறும் வழிபாடும்)	300
விரதங்களின் விளக்கம்	200
சாமிகளின் துதிகள் (27, 54, 108 போற்றி)	200
மலைக்கோயில்கள் - முருகன் (வரலாறும் வழிபாடும்)	200
மலைக்கோவில்கள் - சிவன், விஷ்ணு	250
அம்மன் கோயில்கள் (வழிபாடும் வரலாறும்)	250
திருமணத் திருத்தலங்கள் (வழிபாடும் வரலாறும்)	250
பிள்ளை வரம் அருளும் கோயில்கள் (வழிபாடும் வரலாறும்)	250

முனைவர் செ. இராஜேஸ்வரியின் கவிதைத் திறனாய்வு நூல்கள்

1.	பாடுபொருளும் பாசப்பொருளும்	250
2.	"பூ மர நிழலி"ன் களமும் காலமும்	200
3.	"2020 தைமாதத்தில் இன்று" கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு	100
4.	கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதையில் காதல்	100
5.	கவிஞர் முத்தமிழ் விரும்பியின் பயணக் கவிதைகள்	200

ஆங்கிலக் கவிதைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	எட்டுத்திக்கும் செல்வீர்	200
2.	அவன் கடவுளுக்கு நிகரானவன்	200
3.	செக்கச் சிவந்த ரோஜா	200
4.	கலீல் ஜிப்ரானின் "மணலும் நுரையும்"	200
5.	கலீல் ஜிப்ரானின் "பாடல்கள் 14"	200
6.	ஆங்கிலத் தேன் கவிதைகள்	400

Tamil Classics in English - (Dr. C. Rajeswari)

1.	Kurunthokai	200
2.	Purananooru	200
3.	Naaladiyaar	200
4.	Aasaarakkovai	200
5.	A Predictress from the Hill (Thiru Kutrala Kuravanchi)	200
6.	A Peasant with two Wives (Mukkudal pallu)	200
7.	Classic Tamil Poems of Poetess Avvai.	300
8.	Classic Poems of Love and Life	400
9.	Ainkurunuuru	200
10.	Pastoral Literature of Classic Tamil	300
11.	A Classic Portrait of Ancient Madurai	300
12.	The Winter's Tale in Classic Tamil (Nedu nal vaadai)	

Socio Cultural Study Series

1.	Lord Indra -The Forgonen Diet	300
2.	Serpent - The Primordial God	300

தற்காலத் தமிழில் சங்க இலக்கிய நூல் வரிசை

1.	குறுந்தொகைக் கவிதைகள்	200

மொழிபெயர்ப்பு ஆய்வு நூல்கள் - முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	மொழிபெயர்ப்பியல் ஆய்வு (ஆய்வு நூல்)	200
2.	கவிதை மொழிபெயர்ப்பு	200
3.	நவீன மொழிபெயர்ப்பு உத்திகள் (Co-author)	200
4.	மொழிபெயர்ப்பில் பெயரும் பொருளும்	200
5.	மொழிபெயர்ப்பு நுண்ணாய்வு	400

தமிழ் இலக்கண நூல்

1.	தமிழில் வேற்றுமை உருபுகள்	200

சிறுகதை, கவிதை

1.	அமராவதியின் காதல் - சத்யப்பிரபா	200
2.	ரோஜா மொட்டு (சித்திரக்கவிதைகள்) - சத்யப்பிரபா	200
3.	மகிழ் பேரின்பம்	200

ஜோதிட நூல்கள்

மேஷ ராசியின் சூட்சும ரகசியம்	200
ரிஷப ராசியின் சூட்சும ரகசியம்	200
நவரத்தினமும் உபரத்தினமும்	200
மிதுன ராசி சூட்சும ரகசியங்கள்	200
கடக ராசியின் சூட்சும ரகசியம்	200

மாத இதழ்கள்

1.	தமிழணங்கு மாத இதழ்	200
2.	Love Thamizh	500
3.	சக்தி (பெண்ணிதழ்	

பேராசிரியர் முனைவர் தே. ஞானசேகரனின் நூல்கள்
ஆங்கிலத்தில் - முனைவர் செ. இராஜேஸ்வரி
Moonstone Publication, Madurai

1.	Emerging Mallarism	200
2.	Festival of lord Indra	200
3.	Role of Devendirar's in Indian war of Independence	200
	(Sundaralingam Kudumbanar)	200
4.	Re reading of Pallu literature	200
5.	Mallariyan Literature	200
6.	Frontyard without My Dad (Poem)	200

Poems of Er. Poet Muththamizh Virumbi - In English Dr. C. Rajeswari
[Moonstone Publication]

1.	Therapist of the Finest Art	200
2.	Following Dusty Feet	

நேர்காணல்

கார்த்திகா கவின் குமார்,
திருச்சி
(எழுத்தாளர், கதைசொல்லி)

"கடக்கத் துணிந்தவனுக்குக் கடலின்
எல்லா அலைகளிலும் கதவுகள்
திறந்தே இருக்கும்"...
(மகாகவி ஈரோடு தமிழன்பன்)

வணக்கம் கார்த்திகா!

தங்களின் குடும்பம், மற்றும் கல்வி குறித்து சக்தி பெண்ணிதழ் வாசகர்களுக்கு ஒரு சிறு அறிமுகம் தாருங்கள்

திருவாரூர் மாவட்டம் குடவாசல்தான் நான் பிறந்த ஊர்.

பள்ளி படிப்புகள் முழுவதும் குடவாசலிலும், கல்லூரி படிப்புகள் முழுவதும் கும்பகோணத்திலும் முடித்தேன். இணையர் தஞ்சை மாவட்டதைச் சேர்ந்தவர். தகவல் தொழில்நுட்பத் துறையில் பணிபுரிகிறார். தற்போது குடும்பத்துடன் திருச்சியில் வசிக்கிறோம்.

எனக்கு இரண்டு பெண் குழந்தைகள். மூத்த மகள் ஐந்தாம் வகுப்பும், இளையவள் இரண்டாம் வகுப்பும் படிக்கிறார். மூத்த மகள் ஐந்து வயதில் தங்கப்பெண் சொன்ன கதை என்ற சிறார் சிறுகதை நூலை எழுதி வெளியிட்டார்.

நான் B.Lit., B.Ed., M. A., M. Phil., N. E. T(ugc) படித்து,

பேராசிரியையாகப் பணியாற்றி, இணைய வழியில் உலகளாவிய வெளிநாட்டுவாழ் மாணவர்கள்,அயல்நாடு மற்றும் அயல் மாநில பரத நாட்டியக் கலைஞர்களுக்கு தமிழிலக்கிய, இலக்கணங்களை கற்பித்து வருகிறேன்.

தொல்லியலில் அதிக ஈடுபாடு உண்டு.

பரதநாட்டியக் கலைஞர்களின் தமிழார்வம்/ அவர்களோடான தங்களின் பயணம் குறித்து

என்னிடம் இலக்கியம் பயிலும் பெரும்பாலான மாணவர்கள் அயல் நாட்டைச் சார்ந்தவர்கள்.

சிலர் மட்டுமே தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள்.

வித்யா மனோகர்,
நேர்காணல் எடுத்தவர்

ஆனால் முழுமையாக தமிழ் அறிந்தவர்கள் இல்லை.

பலர் தமிழ் இலக்கியங்களின் மீது ஆர்வத்தின் காரணமாகவும் அதை நாட்டியக் கலைகளின் மூலம் வெளிப்படுத்துவதற்கென ஆர்வமாகக் கற்கின்றனர்.

தமிழ் மொழியின் மேல் மிகுந்த ஆர்வமும், பற்று உடையவர்களாகவும் இருக்கின்றனர். குறிப்பாக என்னுடைய வகுப்புகளில் என்னுடன் அவர்கள் இயன்றவரை தூயத் தமிழில் உரையாடுவார்கள்.

என்னுடைய மாணவர்களில் பெரும்பாலானோர் என்னை விட வயதில் மூத்தவர்கள்.

அவர்களின் தமிழ்ப்பற்றின் காரணமாக என் மீது கூடுதல் மரியாதையும் அன்பும் உடையவர்களாக இருக்கிறார்கள்.

நம்முடைய தமிழின் பெருமைகளை அவர்கள் சிலாகித்து பேசும் போது எனக்கே வியப்பாக இருக்கும்.

தொல்லியல் ஆய்வுகள் குறித்து

நான் தமிழ் இலக்கியம் பயின்றதால் எனக்குத் தொல்லியலில் ஆர்வம் அதிகம். தொல்லியல் துறையில் இயங்கக்கூடிய என்னுடைய நண்பர்களுடன் இணைந்து, நிறைய தொல்லியல் கலங்களுக்கு சென்று ஆய்வுகளை மேற்கொண்டுள்ளேன்.

பேச்சாளராக,எழுத்தாளராக, சிறார் செயற்பாட்டாளாராக இயங்குவதால் நிறைய இடங்களுக்குப் பயணிக்கும் வாய்ப்பும், சூழலும் ஏற்படும்.

நான், இணையர் என்னுடைய இரண்டு குழந்தைகள் என குடும்பத்தோடுதான் அனைத்து இடங்களுக்கும் பெரும்பாலும் பயணிப்போம்.

எனக்கு கல்வெட்டு எழுத்துகள் தொல்லியல் சார்ந்த செய்திகள் அனைத்தும் தெரிவதால் நாங்கள் செல்லும் இடங்களில் கோயில்கள், பழமை சார்ந்த கல்வெட்டுகள் ஆகியவற்றின் செய்திகளை உய்த்துணர்ந்து ஆவணப்படுத்தி வருகிறேன்.

விரைவில் அதை நூலாக தொகுக்கவும் உள்ளேன்.

சிறார் இலக்கியம் படைக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது பற்றி...

எழுத்தாளர் உமையவன் அவர்களின் ஆகாய வீடு என்னும் அறிவியல்சார் சிறார் நூலினை விமர்சனம் செய்ய அழைத்தார்கள்.

என்னுடைய துறை சங்க இலக்கியங்கள், தொல்லியல் தொல்காப்பியம், கவிதை, சிறுகதை முதலியவற்றைச் சார்ந்தது. சிறார் இலக்கியம் குறித்து எனக்கு பெரிதாக அறிமுகம் இல்லை. ஆகையால் சற்றுத் தயங்கினேன். நீங்கள் இதை சிறப்பாக செய்வீர்கள் என்று என்னை அந்நூல் குறித்து பேசச் சொன்னார்கள். நானும் அந்நூலை விமர்சனம் செய்தேன். அவ்விமர்சனம் பெரும் வரவேற்பைப் பெற்றது. நிகழ்வு முடிந்ததும் எழுத்தாளர் உமையவன் அவர்களும் என்னை வியந்து பாராட்டினார்.

நீங்களும் சிறார் இலக்கியம் எழுதத் தொடங்குங்கள், இலக்கியம் படித்தவர்கள் சிறுவர்களுக்காக எழுதும்போது இன்னும் சிறப்பாக இருக்கும். மேலும் நீங்கள் சிறு குழந்தைகளின் தாயாக இருக்கிறீர்கள். குறிப்பாக பெண்கள் சிறார் இலக்கியம் எழுத வரும் போது சிறார் இலக்கியம் இன்னும் செழுமைப் பெறும் என்று கூறினார்.

ஒரு வாரத்தில் அவர் சொன்னதற்காக, பத்து சிறுவர் பாடல்களை எழுதி அவருக்குப் பகிர்ந்தேன். மிகவும் நன்றாக இருக்கிறது, மேலும் எழுதுங்கள் என்று ஊக்கப்படுத்தினார். பிறகு கேக்கின் பிறந்தநாள் என்ற துரித உணவுகளின் ஆபத்துகள் குறித்த ஒரு நூலை சிறுவர்களுக்காக எழுதினேன். பாரதி புத்தகாலயம் புக்ஸ் ஃபார் சில்ட்ரன் வெளியீட்டில் வெளிவந்தது. சிறுவர்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றது. இப்படியாக என்னுடைய சிறார் இலக்கியப் பயணம் தொடர்ந்தது.

சிறுவர் பாடல்களும் தொடர்ந்து எழுத ஆரம்பித்தேன். அவற்றையும் தொகுத்து நூலாக வெளியிட்டேன்.

சிறார் நலன் கருதி தங்களின் முன்னெடுப்புகள் குறித்து

திருச்சிராப்பள்ளி மாவட்ட மைய நூலகத்தில் மாதந்தோறும் குழந்தைகளை ஒருங்கிணைத்து கதை சொல்லல் நிகழ்ச்சி, கதை எழுதும் பயிற்சி ஓவியப் பயிற்சி, நாடகப் பயிலரங்கு போன்றவற்றை நடத்தி வருகிறேன். எங்களுடைய சொந்த செலவில் வருகின்ற குழந்தைகளுக்கு புத்தகங்களும், இயற்கை உணவுகளும் வழங்கி வருகிறோம். நூலகத்திற்கும் தற்போது வெளிவந்துள்ள பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள நவீன நூல்கள் நன்கொடையாக வழங்கி உள்ளோம்.

ஈனில் இலக்கிய அமைப்பு என்ற பெயரில் நான் ஓர் இலக்கிய அமைப்பு நடத்தி வருகிறேன். பள்ளி கல்லூரி மாணவர்களை ஒருங்கிணைத்து, அவர்களுக்கான இலக்கியம் சார்ந்த நிகழ்வுகளை நடத்தி வருகிறேன்.

விடுமுறை நாட்களில் பின் தங்கிய கிராமங்கள், குறிப்பாக திருச்சி மாவட்டம் தாயனூர் கிராமத்தில் மாணவர்களுக்காக விண்மீன் நூலகம் என்ற பெயரில் ஓர் இலவச நூலகம் தொடங்கி, அவர்களின் வாசிப்பை மேம்படுத்தியும், கல்விசார்ந்த பயிற்சிகளையும் இணையருடன் இணைந்து இலவசமாக செய்து வருகிறேன். அதிகம் நூல்வாசிக்கும் குழந்தைகளை ஊக்கப்படுத்தும் விதமாக ஊக்கத்தொகையும் வழங்கி வருகிறோம்.

கதை உலகம் என்னும் புலனக் குழுவில் நண்பர்களுடன் இணைந்து சிறுவர்களுக்கான கதைகளை நாள்தோறும் சொல்லி வருகிறேன்.

தங்களின் படைப்புகள் குறித்து

அகப்பை முகங்கள்(கவிதை), கேக்கின் பிறந்தநாள் (சிறார் நூல்), ஆமை அத்தை, ஆமை அத்தை (சிறார் பாடல்கள்), அதிசய யூனிகார்ன் (சிறார் சிறுகதை), புறநானூறு உரை, தொல்காப்பிய உரை, குப்பை மேனிகள் (சிறுகதை), தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் சார்பில் டுர்... டுர்.. டுபூ .. டுபூ ..(சாலைப் பாதுகாப்பு குறித்த கதை நூல்), சிறார் கதைகள் எப்படி அமைய வேண்டும்(கட்டுரை நூல்), வாசிப்பு இயக்கம் சார்பில் சந்தனக் கூடு (சிறார் கதை) போன்றவைப் படைத்துள்ளேன்.

இதுவரையில் உங்களின் படைப்புகளுக்குக் கிடைத்துள்ள அங்கீகாரங்கள் குறித்து...

அசோக மித்ரா, காவியக் கல்கி, கவித்தென்றல், இலக்கியத் தேனீ, ஞானச் சுடர், சாதனை மனிதர் விருதினைப் பெற்றுள்ளேன். அரசு புத்தகத்திருழா, பொன்னி

இலக்கியத் திருவிழா மற்றும் காவிரி இலக்கியத் திருவிழா ஆகியவற்றில் ஆளுமையாக சிறப்பிக்கப்பட்டுள்ளேன்.இவள் தாரகை, குருகுலத் தென்றல், மக்கள் மனம் (சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் இதழ்), நீல நிலா,பொம்மி, குட்டி மயில், தேன் மிட்டாய் போன்ற இதழ்களில் படைப்புகள் வெளிவந்துள்ளன.

தொடர்புடைய அமைப்புகள் குறித்து

தமிழ்நாடு சிறார் எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கத்தின் மாநிலப் பொருளாளராகவும், மாவட்டச் செயலாளராகவும், ஈனில் இயக்கிய அமைப்பின் நிறுவனராகவும் இயங்கி வருகிறேன்.

ஈனில் அமைப்பு/ பெயர்க்காரணம் குறித்து கூறுங்களேன்

ஈனில் என்றால் ஈனுதல், கருவுயிர்க்குமிடம். மாடு கன்று ஈன்றது என்று நாம் இயல்பாக வழக்கில் பேசிக்கொள்ளும் சொல்தான்.

தமிழ் இலக்கியங்களை அடுத்தத் தலைமுறைக்கு பெருக்கிக் கொண்டே செல்ல வேண்டும், சிறுவர்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள் சார்ந்த என்னுடைய செயல்பாடுகள் தலைமுறைகள் கடந்து உயிர்ப்பெற்று பெருக வேண்டும் எனும் பொருண்மையில் என் அமைப்பிற்கு இப்பெயர் சூட்டினேன்.

என்னுடைய ஈனில் இலக்கிய அமைப்பின் இலச்சினை வடிவம் தமிழ்நாடு வரைபடம் ஒரு முட்டையின் வடிவத்தில் இருக்கும், அதிலிருந்து இரண்டு கைகளிலும் ஓலைச்சுவடி தாங்கி, வெடித்து வெளியே வருவது போன்று அமைந்திருக்கும்.

நான் எதிர்பார்த்த இலச்சனை (logo) உருவாக்க ஓராண்டு காலம் எடுத்துக் கொண்டேன். நிறைய ஓவியர்கள், கணினி வரைபடம் என நான் நினைத்த உருவம் வரும் வரை, நிறைய பேரிடம் என் கற்பனையைக் கூறி வரையக் கொடுத்தேன்.

இறுதியில் தற்போது உள்ள வடிவம் தான் எனக்கு திருப்தி அளித்தது. அதுதான் எங்கள் இப்போதைய ஈனில் இலட்சனை.

குழந்தைகளை எப்படி அணுகுகிறீர்கள்? அதில் ஏதாவது சிரமம் உள்ளதா?

பெரியவர்களுக்கான இலக்கியம் சார்ந்த நிகழ்வுகளை நடத்தி வந்த எனக்கு, இதை குழந்தைகளுக்கும் கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அதன் தொடக்கமாக அரசு பள்ளிகள் தோறும் இலக்கியங்கள் குறித்து கற்பிக்கத் தொடங்கினேன். நிறைய பள்ளிகளில் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் ஆகியோரிடமிருந்து மிகுந்த வரவேற்பு இதற்கு கிடைத்தது.

அருகிலுள்ள வீதிகள் என இப்படியே தொடர்ந்து ஓய்வு நேரங்களில் சமூகப் பணி செய்யத் தொடங்கினேன்.

தற்போது சிறுவர்கள், கல்லூரி மாணவர்கள், பெண்கள் ஆகியோரின் இலக்கியம் சார்ந்த செயல்பாடுகளில் தொடர்ச்சியாக செயல்பட வேண்டும் என்பதே என்னுடைய நோக்கம்.

இவர்களால் மட்டுமே நம் சமூகத்தில் ஆகச்சிறந்த நல்மாற்றத்தை உருவாக்க முடியும்.

சிறுவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் வாசிப்பை மேம்படுத்த பல்வேறு நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக நடத்தி வருகிறேன்.

நான் இப்படியெல்லாம் சமூகம் சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கு ஒரு சுயநலமும் உண்டு. ஆம், இச்செயல்கள் என் மனதிற்கு நிறைவாகவும், என்னை எப்போதும் உயிர்ப்போடு வைத்திருக்கிறது.

குறிப்பாக குழந்தைகளோடு நான் இயங்கும்போது மனம் அவ்வளவு நிறைவாக இருக்கிறது. இதில் சிரமம் ஏதுவுமில்லை.

அடுத்தடுத்த நகர்வுகள் குறித்து

அடுத்து சிறப்புக் குழந்தைகள் தளத்திலும் பெரிதாக இயங்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் உள்ளது. தற்போது என்னால் முடிந்த அளவில் அத்தளத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறேன்.

சராசரி குழந்தைகளுடன் சிறப்பு குழந்தைகள் எப்போது இயல்பாக பயணப்படுகிறார்களோ அப்போதுதான் இச்சமூகம் மனிதம் நிரம்பிய சமூகமாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

நாம் கற்ற கல்வி மற்றவர்களுக்குப் பயன்படும் வகையில் அமைவதுதான் சரியான கல்வி. இதுவே கற்றலின் பயன். இச்சமூகத்தில் உள்ள ஒவ்வொரு தனி மனிதனும் இது போன்ற சிறு சிறு செயல்களை முன்னெடுத்தால் நிச்சயம் மிகப்பெரிய சமூக மாற்றத்தைக் கொண்டுவர முடியும்.

என்னிடம் கல்வி கற்கும் மாணவர்களிடம் இப்பண்பை வளர்த்து வருகிறேன். இத்தகு மாற்றங்கள் வழி எல்லாம் சாத்தியமாகும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

உண்மை கார்த்திகா! சமுதாயத்தில் நல்ல மாற்றங்கள் , முன்னேற்றங்கள் ஏற்பட வேண்டும் என்பது நம் எல்லோருடைய விருப்பமாகிறது. இளந்தலைமுறையினரை அவ்வழியில் பயணப்பட தயார் செய்யும் தங்களின் பணி போற்றுதற்குரியது. மேலும் பல்வேறு தளங்களில் திறம்பட பணியாற்ற எங்களின் நெஞ்சார்ந்த வாழ்த்துகள். நன்றியும் அன்பும்.

ஹவிர்பூ

இரா. சைலஜா சக்தி

ஒரு தமிழ் சினிமாவில் கதாநாயகன் நாயகியைப் பார்த்து ‘‘நான் உன்னைப் பார்த்தாலே நீ கர்ப்பமாகி விடுவாய்’’ என்று கூறுவார். இது என்ன அபத்தமான பேச்சு. யார் இந்த வசனகர்த்தா. இப்படி எல்லாம் வசனத்தை எழுதியிருக்கிறாரே என்று தோன்றியதுண்டு. ஆனால் ஒரு முனிவரின் பார்வைபட்ட மறுகணமே ஒரு இளம்பெண் கருவுருகிறாள் இராமாயண காலத்தில். பிரம்மாவின் மகனான புலஸ்தியர் கானகத்தில் கடும் தவம் செய்கிறார். அப்போது தேவலோகத்தைச் சேர்ந்த ஆடல் மகளிர் வந்து ஆடிப்பாடி அவரின் தவத்தைக் கலைக்க முயற்சி செய்கின்றனர். கோபம் கொண்ட புலஸ்தியர் ‘‘இனி நான் கண் விழிக்கும்போது எதிரில் எந்தப் பெண் இருக்கிறாளோ அவள் கர்ப்பமடைவாள்’’ என்று சாபமிடுகிறார். உடனே தேவமகளிர் பயந்துபோய் அங்கிருந்து சென்று விடுகின்றனர். புலஸ்தியர் நிம்மதியாக தவம் செய்கிறார்.

ஒரு நாள் ஹவிர்பூ என்ற இளம்பெண் அங்கு வருகிறாள். அவளின் கால் சதங்கை ஒலி கேட்டு புலஸ்தியர் கண் விழிக்கிறார். உடனே ஹவிர்பூ கருவுறுகிறாள். அது அவளுக்குத் தெரியவில்லை. ஆனால் புலஸ்தியருக்குத் தெரியும் என்பதால் அவர் ஹவிர்பூவின் தந்தையை அழைத்து நடந்ததைக் கூறுகிறார். ஹவிர்பூவின் தந்தை த்ருணபிந்து என்ற முனிவர். புலஸ்தியர் அவரிடம் தான் அளித்த சாபத்தைத் திரும்பப் பெறுவதாகக் கூறுகிறார். அவர்கள் இருவரும் பேசுவதைக் கேட்ட ஹவிர்பூ, ‘‘இது இறைவனின் விருப்பமே. நான் உங்களை மணக்க விரும்புகிறேன்’’ என்று கூறுகிறாள். புலஸ்தியர் ’’நான் வயதானவன்’’ என்று கூறி மறுக்கிறார். ஆனால் ஹவிர்பூ அவரைத் திருமணம் செய்வதில் உறுதியாக இருக்கிறாள். பின் இருவருக்கும் திருமணம் நடைபெறுகிறது.

இந்த ஹவிர்பூவின் வயிற்றில் உருவான கரு வேறு யாருமல்ல, ராவணனின் தந்தையான விஷ்ரவஸு ஆவார். ஹவிர்பூ ராவணனின் பாட்டி ஆவாள். இளம்பெண்ணை மணக்க மறுத்த புலஸ்தியர் ராவணனின் தாத்தா ஆவார். இவ்வளவு அறநெறியும், தர்மமும் உடைய தாத்தாவிற்கும் பாட்டிக்கும் பேரனாகத் தோன்றியவன்தான் ராவணன்.

விற்பனைக்கு

கனியமுது அமுதமொழி

கனியமுது அமுதமொழி

வலி மிகுந்த
வெட்டி எரியும் நிலையில்
வலது கால் முட்டி
அடிவயிற்று 10 கிலோ தசை
இடது தோள்பட்டை
தேவையானவர்கள்
அணுகவும்.
பிருஷ்டமும்
மார்பகங்களும் கூட
நோயுற்ற நிலையில்
பரவாயில்லை
என்பவர்கள்
அணுகவும்
மூளை வளர்ச்சி குறைந்த
மன நலம் சிதைந்த
பணியிடங்களில்
பேருந்துகளில் கூட்ட நெரிசலில் பயணம் செய்யும்
பெண்களை பாலியல்
வன்முறை செய்யும்
மூடர்கள்
சூப் வைத்து குடிக்கலாம்
பிரியாணி செய்து சாப்பிடலாம்
மனித மாமிசம் உண்பவர்கள்
என்று அவர்கள்
அப்பொழுதாவது கைது செய்யப்படுவார்களா
பார்க்கலாம்.

இருண்ட வீட்டில் 'குடும்ப விளக்கேற்றிய' பாரதிதாசன்

மாலதி தமிழ்ச்செல்வன், டில்லி

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என இன்று நாம் முழங்குவதற்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்த பெருமக்களின் பட்டியலில், பாவேந்தர் பாரதிதாசனாருக்கு குறிப்பிடத்தக்க இடம் உண்டு. பாரதியாரின் தமிழ்க்கனலின் மீது காதல் கொண்ட கனகசுப்புரத்தினம், பாரதியின் தாசன் ஆனார். சக்தியை பெண்ணை பெண்மையைப் போற்றிய பாரதியாரைப் போலவே, பெண்ணின் பெருமையையும் அவர்களின் கடமையையும், ஒரு சமூகம் சிறப்பாக இருக்க பெண்களின் பங்கு முக்கியமானது என்பதையும் உணர்த்தியவர் பாரதியின் தாசன்.

அவரது ஆகச்சிறந்த படைப்புகளில் முக்கியமான ஒன்று குடும்ப விளக்கு. குடும்ப விளக்கேற்றிய பெருங்கவிஞர் பாரதிதாசன், கவியாற்றல் மூலம் சாதி வெறிக்கு எதிராக போர்க்குரல் விடுத்தவர்.

''வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ''

என்று அவர் கவிதை பாடிய காலம் 80 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இன்று நாம், குறிப்பாக பெண்கள் அனுபவிக்கும் பல இயல்பான விஷயங்கள் அன்றைய பெண்களுக்கு வாய்த்ததில்லை என்பதே இன்றைய இளைஞர்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். ஆனால், பெண்களுக்கு உரிமை கொடுக்காத சமூகம் ஒருபோதும் சிறக்காது என்பதை உணர்ந்த பெருமக்கள், பெண் விடுதலையை வலியுறுத்தினார்கள்.

'மாதர் உரிமை மறுப்பது மாண்பா, மாதர் முன்னேற்றத்தில் மகிழ்வது மாண்பா, ஆய்ந்துபார்' என்று பெண் விடுதலைக்கு வித்திட்டார். பெண்களுக்காக மட்டுமல்ல, சாதி, மதம், பொருளாதாரம் என பிளவுபட்டிருந்த சமூகத்தில் நிலவிய பாகுபாடுகளுக்கு எதிராகப் பாடிய பாவேந்தர், கவிதை, நாடகம், சிறுகதை, கட்டுரை என அனைத்து இலக்கிய வடிவங்களும் படைப்புகளைக் கொடுத்தவர். பாவேந்தரின் கவிதைகளும், தமிழ் ஆளுமையும் இலக்கியத்தில் நீங்கா இடம் பிடித்தவை.

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்னும் கருத்தை வலியுறுத்தும் பாவேந்தர் பாரதிதாசனின் குடும்ப விளக்கு, பலரின் அறியாமை என்னும் இருளைப் போக்கியது என்று சொன்னால் அது மிகையாகாது. குடும்பத்தில் ஒவ்வொருவரும் அன்பு எனும் நூலால் பின்னப்பட்டு, பாசவலையில் கட்டுண்டிருந்தால், குடும்பம் எப்படியிருக்கும்? இந்த கற்பனையை தமிழருக்கு கவிதையாய், நவீன கதையாய் புனைந்து விழிப்புணர்வை ஏற்படுத்தினார் பாரதிதாசன்.



குடும்பத்தில் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் பொறுப்புகளை சரியாக உணர்ந்து அதன்படி நடந்தால், இல்லறம் சிறக்கும் என்பதை கதையாய் கவிதை நடையில் விவரிக்கிறது குடும்பவிளக்கு.

குடும்ப விளக்கின் நாயகியை கடமை உணர்வுமிக்க பெண்ணாய் மிளிரச் செய்த பாவேந்தர், நேர்மையாக வணிகம் செய்து பொருள் ஈட்டுபவனாக கதாநாயகனைப் படைத்தார். அதுமட்டுமா? அன்பான பெற்றோர், அழகான குழந்தைகளுடன் சிறந்த குடும்பம் எப்படி இருக்க வேண்டும் என்பதை பாரதிதாசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படை யாது? சமுதாய முன்னேற்றம் தானே? சமுதாயத்தின் அங்கங்களாக விளங்கும் குடும்பங்கள் எப்படி இருந்தால் வாழ்க்கை இனிக்கும்? பாரதிதாசனின் வார்த்தைகளில் அதை தெரிந்துக் கொள்வது சுவாரசியமானது.

கூட்டுக் குடும்ப வாழ்க்கை குறைந்து, ”நானும் என் குடும்பமும்” என்ற போக்கு அதிகரித்திருக்கும் இன்றைய காலகட்டத்தில் அனைவரும் குடும்ப விளக்கை படித்து உணர வேண்டும். அன்பையும்-பாசத்தையும் பண்பான வாழ்க்கை முறையையும் உணர்த்தும் குடும்பவிளக்கு, அழகான குடும்பத்தை சித்தரிக்கிறது.

குடும்ப விளக்கு நூலின் முதற்பகுதி 1942ம் ஆண்டு வெளியானாலும் அதன் பிறகு வெவ்வேறு ஆண்டுகளில் 1950ம் ஆண்டு வரை மொத்தம் ஐந்து பாகங்கள் வெளியாகின. இதற்கு நடுவில் பாரதிதாசன் படைத்த மற்றுமொரு புனைவுக் கவிதை, நகைச்சுவை நடையில் இயற்றப்பட்ட 'இருண்ட வீடு'. இந்த இருண்ட வீட்டை படித்துக் கடந்திடாமல், குடும்ப விளக்கு முழுமையடையாது.

குடும்பத்திலுள்ளவர்கள் எப்படி இருந்தால் குடும்பம் கோவிலாகும் என்பதற்கு குடும்ப விளக்கு எடுத்துக்காட்டு என்றால், எப்படியெல்லாம் இருந்தால் குடும்பம் குட்டிச்சுவராகும் என்பதை உணர்த்த 'இருண்ட வீடு' படைப்பை படைத்திருக்கிறார் பாவேந்தர்.

பாரதிதாசனின் இந்த இரு படைப்புகளும், ஒரு குடும்பம் எப்படி இருக்க வேண்டும், எப்படி இருக்கக் கூடாது என்பதைத் தெளிவாக விளக்குகின்றன. "இருண்ட வீட்டில்" கல்வி இல்லாத குடும்பம் எப்படி நலிவுறும் என்பதையும், சோம்பிக் கிடக்கும் குடும்பத்தின் நிலை எப்படி இருக்கும் என்பதையும் உணர்த்துகிறார் பெருங்கவிஞர். இருண்ட வீட்டில் ஒளியேற்றுவதாக குடும்ப விளக்கு அமைந்துள்ளது.

தமிழ் படிக்க வேண்டும் எல்லோரும்
அத்தமிழர் படிப்படியாய் முன்னேற் றத்தை
எப்படியா யினும்பெற்று விட்டால் மக்கள்
இப்படியே கீழ்ப்படியில் இரார்க ளன்றோ?
மெய்ப்படிநம் அறிஞரின் சொற்படிந டந்தால்,
மேற்படியார் செப்படி வித்தை பறக்கும்.
முற்படில் ஆகாததுண்டா? எப்ப டிக்கும்
முதற்படியாய்த் தமிழ்படிக்க வேண்டும்''

என்று கல்வியின் முக்கியத்துவத்தை மட்டுமல்ல, தமிழின் முக்கியத்துவத்தையும், மும்மொழி என்று புகுத்துவதற்கு முன்னரே பன்னெடுங்காலம் முன்பே சொல்லிவைத்தார் நமது ஆசான்.

அதேபோல், ‘‘அதிகாலை தொடங்கிநாம் இரவு மட்டும்
அடுக்கடுக்காய் நமதுநலம் சேர்ப்ப தல்லால்,
இதுவரைக்கும் பொதுநலத்துக் கென என்ன செய்தோம்?
என்பதைநாம் நினைத்துப்பார்ப் பதுவு மில்லை’’.

’’வீட்டுத் தொண்டா பொதுத் தொண்டு?
"இன்றைக்குக் கறிஎன்ன? செலவு யாது?
ஏகாலி வந்தானா? வேலைக் காரி
சென்றாளா? கொழுக்கட்டை செய்ய லாமா?
செந்தாழை வாங்குவமா? கடைச் சரக்கை
ஒன்றுக்கு மூன்றாக விற்ப தெந்நாள்?
உன்மீதில் எனக்காசை பொய்யா?’’
என்று சுயநலமாய் வாழக்கூடாது என்று வலியுறுத்துகிறார்.

"தமிழரென்று சொல்லிக்கொள் கின்றோம் நாமும்;
தமிழ்நாட்டின் முன்னேற்றம் விரும்பு கின்றோம்;
எமதென்று சொல்கின்றோம் நாடோ றுந்தான்;
எப்போது தமிழனுக்குக் கையா லான
நமதுழைப்பை ஒருகாசைச் செலவு செய்தோம்?
நாமிதனை என்றேனும் வாழ்நாள் தன்னில்,
அமைவாகக் குந்திநினைத் தோமா? இல்லை;
அனைவருமிவ் வாறிருந்தால் எது நடக்கும்?"

இந்த கருத்தைச் சொல்வது கதையின் நாயகனாக இருப்பதைவிட, குடும்பத் தலைவியாக இருப்பதே சாலச்சிறந்தது என்பதையும் உணர்ந்த பெருங்கவிஞர், நுணுக்கமாக கவிதை புனைந்துள்ளார்.

பெண்கள், ஓவியமும் காவியமும் கற்க வேண்டும்; கவிதை எழுதி உலக அமைதியை உருவாக்க வேண்டும் என்று மட்டுமல்ல, அவள் தனக்குரிய மணமகனைக் காட்டித் ‘தேவை இவன்’ என தனது வாழ்க்கைத்துணையை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று

சொன்னவர் பாரதிதாசன்! கல்வி கற்றவளாக, காதல் தலைவியாக மட்டும் இருந்தால் போதுமா? வீரத்தாயாக விளங்குதல் வேண்டும்; குடும்ப விளக்காக ஒளிவிட வேண்டும் பெண்கள் என்பதையும் வலியுறுத்துகிறார் பாவேந்தர் பாரதிதாசன்.

அச்சமும் மடமையும் இல்லாத பெண்கள்
அழகிய தமிழ்நாட்டின் கண்கள்!

பெண், அச்சம் மடம் நாணம் கொண்டவளாக இருந்தால், நாடாளவும், விண்வெளியில் பறக்கவும் இயலுமா? அச்சம் மடம் நாணம் ஆகியவை பெண்களுக்கு அவசியம் என்று வலியுறுத்தபட்ட காலத்திலேயே, அச்சத்தையும் நாணத்தையும் கொண்டிருப்பது மடமை என்று சொல்லி, இவற்றை உதறித் தள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்துகிறார்.

தேவையில்லாதவற்றை தள்ளிவிட்டு, கல்வி கற்று அன்புடனும் அறத்துடனும் பொதுநலத்துடனும், குடும்பத்தை நடத்த வேண்டும் என்று பெண்களை ஊக்குவிக்கிறார் பாரதிதாசன்.

ஒரு குடும்பத்தின் தினசரி நிகழ்வுகள், திருமணம், விருந்தோம்பல், மகப்பேறு போன்றவற்றை மட்டுமல்ல, முத்தாய்ப்பாக முதியோர் காதலையும் குடும்ப விளக்கில் அருமையாய்ச் சொல்கிறார் பாரதிதாசன்.

பாரதிதாசனின் படைப்பில் இளம்பெண்களை உரிமை மிக்கவர்களாய், சமுதாயக் கட்டுகளை உடைப்பவர்களாய் சித்தரித்திருப்பார். தமிழரின் வீரம்,கொடை,மானம் போன்ற முக்கியமான பண்புகளை போலவே முதியோரின் காதலின் முக்கியத்துவத்தை பாரதிதாசன் சொன்னதுபோல் வேறு யாரும் சொன்னதில்லை.

பாரதிதாசனின் எழுத்துக்களைப் பற்றி பேசும்போது, அவை எந்த காலத்தில் எழுதப்பட்டவை என்பது முக்கியமானது. அன்று அவர் கூறியவை இன்று சாதாரணமானதாகத் தோன்றலாம். 1950களில் புரட்சிக் கருத்தாக இருந்த அவற்றை ஏற்றுக் கொள்ள கற்றோரும் தயங்கினார்கள் என்பதையும் கவனத்தில் கொள்வது அவசியம்.

பெண்ணே குடும்பவிளக்கு எனக் கூறத் தக்கவள். ஏனெனில் அவளே சிந்தனையும், திட்டமிட்டுச் செயலாற்றும் திறமும் படைத்தவள் என்று பாரதிதாசன் கருதினார்.

குடும்பவிளக்கின் தலைவி பல்துறை வித்தகி... அவள், சமைப்பது, வீட்டுவேலை செய்வது என்பதுடன் மட்டும் தன்னை சுருக்கிக் கொள்ளவில்லை. வீணை

இசைக்கிறாள், கடைக்கு சென்று வியாபாரம் செய்கிறாள், தையற்கலையை அறிந்தவள், துணி தைக்கிறாள், குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கிறாள், வீட்டின் மராமத்து பணிகளையும் செய்கிறாள்.



பல கலைகளும் அறிந்தவளாக இருந்தாலும், குழந்தையை எப்படி பராமரித்து பாதுகாக்கிறாள் அந்தத் தாய் என்று பாரதிதாசன் சொல்கிறார்...

இரவில் தன் குழந்தையைப் பக்கத்தில் படுக்க வைத்துக் கொண்டு தூங்கும் தாய், தனது வலக்கையை தலையணையாய் வைத்துக் கொண்டு, இடக்கையை குழந்தையின் மேலே பாதுகாப்பாய் வைத்து உறங்குகிறாள். ஆழ்ந்த துயிலில் கணவன், மனைவி, புரண்டு படுத்தால், பச்சிளம் குழந்தை நசுங்கிவிடும் என்று நினைத்து அவளை எழுப்புகிறான்.

மனைவியை எழுப்பவும் வேண்டும், தூங்கும் குழந்தையையும் தொந்தரவு செய்யவும்கூடாது. என்ன செய்வது? மனைவி, தன் கூந்தலிலிருந்து அகற்றி அருகில் போட்டிருந்த ஒரு மலர்ச்சரத்தை எடுத்து அவளுடைய முகத்தில் போடுகிறான், ஆனால் அவள் கண் விழிக்கவில்லை. பிறகு, மலர்ச்சரத்திலிருந்து ஒற்றை மலரிதழை எடுத்துக் குழந்தையின் மீது போடுகின்றான். தூங்கிக் கொண்டிருக்கும் மனைவியின் கை, தன்னிச்சையாக குழந்தையின் மேல் விழுந்த, மலரிதழை நீக்கி விட்டு மறுபடியும் பாதுகாப்பாய் வளைகிறது, துயிலும் தொடர்கிறது.

சேயைப் பாதுகாக்கும் தாய்மையின் பேராற்றலைக் கண்டு மலைக்கிறான் கனவன். குடும்பவிளக்காய் பரிமளிக்கும் பெண்ணை வணங்குகிறான்.

நம் கலாச்சாரத்தை, தமிழரின் வாழ்க்கையை விளக்கும் குடும்ப விளக்கு, விருந்தினரை எப்படி உபசரிக்க வேண்டும் என்றும் அழகாய் உரைக்கிறது. இது விருந்தோம்பலின் இலக்கணம்...

வாழை இலையின்அடி, உண்பார் வலப்புறத்தில்;
வீழ விரித்திக் கறிவகைகள் - சூழவைத்துத்
தண்ணீர்வெந் நீரைத் தனித்தனியே செம்பிலிட்டு
வெண்சோ றிடுமுன் மிகஇனிக்கும் - பண்ணியமும்
முக்கனியும் தேனில் நறுநெய்யில் மூழ்குவித்தே
ஒக்கநின்றே உண்டபின்பால் சோறிட்டுத்-தக்கபடி
கேட்டும் குறிபறிந்தும் கெஞ்சியும் மிஞ்சியும் அன்பால்
ஊட்டுதல்வேண் டும்தாய்போல்•••

எப்படி இலையை இடவேண்டும், பரிமாற வேண்டும், என்று சொல்லும் கவிஞர், உணவு பிடித்திருந்தாலும் விருந்தினர்கள் கேட்டு வாங்கி உண்ண கூச்சப்படுவார்கள் என்பதால், பரிமாறுபவர் அங்கேயே நின்று உணவிடவேண்டும், குறிப்பறிந்து பரிமாறவேண்டும் என்று சொல்கிறார்.

அது என்ன,''கெஞ்சியும் மிஞ்சியும்?'' விருந்தினரை கெஞ்சி உணவு பரிமாறுவது ஒருவகை என்றால், செல்லமாக மிரட்டி உண்ண வைப்பதும் ஒரு கலைதான், அது விருந்தினர் இயல்பாக இருக்க உதவும் என்பதை அழகாக உணர்த்துகிறார் பாவேந்தர்.

முதியவர்களை மதிக்கவேண்டும் என்பதை பாரதிதாசன் எப்படி உணர்த்துகிறார் தெரியுமா?

இருபெரு முதியோர் தம்மைத் தலைக்கடை அறைசு மந்து
பெரும்பேறு பெற்ற தன்றோ! பிள்ளைகள், அவர்ம னைமார்
வருவார்கள்; அறங்கேட் பார்கள். மற்றுள பேர்த்தி பேரர்
வருவார்கள் அளவ ளாவி மணியோடு பள்ளி செல்வார்•••

எவ்வளவு பணிச்சுமை இருந்தாலும், நம்மை பேணிகாத்து வளர்த்த பெரியவரை, பாட்டன் பாட்டியைக் கண்டு பேசினால் அவர் மனம் குளிருமல்லவா? இது இன்றைய காலத்திற்கும் அவசியமான படிப்பினை தானே?

ஒருவனும் ஒருத்தியும் அன்பு கொண்டு வாழும் வாழ்க்கையைக் காதல் வாழ்க்கை என்கிறோம். இந்தக் காதல் வாழ்க்கை, இளமையில் இனிப்பாய் இருப்பதை பல கவிஞர்கள் பாடியிருந்தாலும், முதியோரின் காதல் வாழ்க்கையைப் பாரதிதாசனைப் போல் அழகாகக் காட்ட முடியுமா?

காதல் என்பது, வயதைத் தாண்டியது, உடல் கவர்ச்சியைத் தாண்டியது••• அன்பால் விளைவது••• என்றென்றும் நீடித்து நிலைப்பது••• 105 வயது ஆணுக்கும், 100 வயது பெண்ணுக்கும் இடையில் காதல்••• இதை கற்பனை செய்து பார்க்கமுடியுமா? ஆனால் பாரதிதாசனால் முடியும்•••

அவள் இருக்கின்றாள்••• அதுவே எனக்கின்பம்••• என்ற வார்த்தைகள் போறாதோ??

புதுமலர் அல்ல; காய்ந்த
புற்கட்டே அவள்உ டம்பு!
சதிராடும் நடையாள் அல்லள்
தள்ளாடி விழும் மூதாட்டி!
மதியல்ல முகம்அ வட்கு
வறள்நிலம்! குழிகள் கண்கள்!
எதுஎனக் கின்பம் நல்கும்?
"இருக்கின்றாள்" என்ப-தொன்றே!

அவள் இருக்கிறாள் என்பதே இன்பம் என்கிறார் கிழவர். முதியவளின் உடலில் மெருகும் இல்லை, அழகும் இல்லை என்றாலும், கணவனுக்கு மனைவிமேல் கொண்டிருந்த காதல் மாறவில்லை. இதற்கு அடிப்படை, அவரது உள்ளத்தில் நிறைந்து விளங்கும் உண்மை அன்பு தான்.

முதியவளின் உடம்பு புதுமலர் போல் ஒளியுடன் இல்லை; காய்ந்து போன புல்கட்டைப் போன்று இருக்கிறது. அவள் நடப்பது அழகாய் இல்லை; தள்ளாடி விழுவதுபோல் இருக்கிறது. நிலவு போல் அவள் முகத்தில் ஒளி இல்லை; வறண்டு இருக்கிறது. கண்கள் குழிந்து காணப்படுகின்றன. இப்படிப்பட்ட முதியவளின் உடலில் எனக்கு இன்பத்தைத் தருவது எது? இன்றும் உயிருடன் இருக்கின்றாள் என்பது மட்டுமே என முதியவர் கூறுகிறார். இதைச் சொல்லும் முதியவரின் வயது 105•••

இதில் கூர்ந்து கவனிக்க வேண்டிய மற்றொரு விஷயமும் இருக்கிறது. அவள் இருக்கின்றாள் அதுவே எனக்கின்பம்' என்று சொல்வது கிழவர் தான், மூதாட்டி அல்ல... அதாவது, ஒரு ஆண், பெண்ணையே சார்ந்திருக்கின்றான் என்பதைச் சுட்டிகாட்டுகிறார் பாரறிந்த பாரதிதாசன்.

குடும்பத்தலைவனாக ஆண் முன்னிறுத்தப்பட்டாலும், பெண் தான் குடும்பத்தின் விளக்கு, ஆணிவேர், நூறு வயது மனைவி, தன் கணவனிடம் உதவி கேட்கவில்லை.

கணவன் தான், என் மனைவி உயிருடன் இருப்பதே எனக்கு ஆனந்தம் என்று சொல்கிறார்.

இதுவொரு பக்கம் இருக்கட்டும், 100 வயது கிழவி காய்ந்து போன புல்கட்டைப் போல் இருந்தால் 105 வயது கிழவர் எப்படி இருப்பார்? இருந்தபோதிலும், தனது உடல்நிலையையும் அழகையும் பற்றி பேசாமல், தனது தோல் சுருங்கிப் போனதைப் பற்றி பேசவில்லை. மனைவி அழகில்லை என்றாலும் அவள் எனக்கென்று இருந்தால் போதும் என்கிறார்.

ஆனால் பெண்ணோ ஒருபோதும் அழகைப் பற்றி பேசுவதில்லை••• கணவன் காதலுடன் இருந்தாலே போதும் என்று நினைப்பாள் என்பது எழுதாமல் விட்ட வார்த்தைகள் என்று நினைப்பதற்கு பாரதிதாசனின் எழுத்துக்கள் உணர்த்துகின்றன.

இந்த வார்த்தைகளை கணவனைப் பார்த்து, 'அவன் இருக்கின்றான் அதுவே எனக்கின்பம்' என்று மனைவி சொல்வதாகவும் பாரதிதாசனால் புனைந்திருக்கமுடியும். ஆனால் பாவேந்தர், அதைச் செய்யவில்லை. ஏனென்றால், மனையாள் இல்லை என்றால் ஆண்கள் படும் துயரத்திற்கு காரணம் அவர்களின் சார்பபுத்தன்மையே என்பதையும் உணர்ந்தவர் அவர்.

ஆண், பெண்ணை சார்ந்தவனா அல்லது பெண், ஆணைச் சார்ந்தவரா என்ற கேள்வியே எழுப்பாமல், மறைமுகமாய் பெண்களின் வலிமையை பாரதிதாசன் உணர்த்துகிறார். பெண்கள் இயல்பாகவே துன்பத்தை எதிர்கொள்ளும் மனவலிமை பெற்றவர்கள், அந்தக் காலத்திலும் பொருளாதாரத்திற்காகவே ஆண்களை சார்ந்திருந்தார்கள். ஆண்கள் ஏறக்குறைய எல்லா விஷயத்திற்கும் பெண்களையே சார்ந்திருந்தார்கள்.

அதனால் தான், பெண் கல்வியின் முக்கியத்துவத்தை பாரதிதாசன் உட்பட அனைத்து ஆன்றோர்களும் சான்றோர்களும் வலியுறுத்தினார்கள். இன்று அந்த கனவு மெய்ப்பட அடித்தளம் இட்ட பாரதிதாசனின் குடும்ப விளக்கு போன்ற படைப்புகள், இருண்ட வீட்டிலும், இருள் படர்ந்த மனங்களிலும் ஒளியேற்றி வைத்திருக்கிறது என்றால் அது மிகையாகாது.

பாரதிதாசனின் குடும்ப விளக்கு வழிநின்று, குடும்பங்கள் சிறப்புற அமையுமானால், இந்தச் சமுதாயம் மென்மேலும் உயர்வடையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

கிடைத்த பந்தங்களைத் தக்கவைப்போம்

How to save Relationships?

Dr. அ.ப.ஃபரூக் அப்துல்லா
பொது நல மருத்துவர்
சிவகங்கை

பிறக்கும் போதே கிடைக்கும் பந்தங்கள் பின் வாழ்க்கையில் நாம் சேர்க்கும் பந்தங்கள் என பந்தங்களுடன் பிணைக்கப்பட்டதே நம் வாழ்க்கை தன்னந்தனியாக ஒரு மனிதன் வாழ்வது என்பது பிராக்டிகலாக இயலாத காரியம் எங்காவது விபத்தில் ஏதேனும் தீவுகளில் காடுகளில் சிக்கிக் கொண்டு கிடந்தாலே தவிர தன்னந்தனியாக மனிதன் ஒரு பொழுதும் வாழ நினைக்க மாட்டான் மனிதன் ஒரு சமூகப்பிராணி. சமூகத்துடனான ஒட்டுதல் இன்றி மனிதனால் இயல்பாக வாழ இயலாது. மேலும் மனிதனுக்கு எப்போதும் ஒரு உணர்வு சார்ந்த தொடர்பு இருந்து கொண்டே இருக்க வேண்டும்.

ஒவ்வொரு மனசும் இந்த உணர்வு சார்ந்த தொடர்புக்கு (EMOTIONAL CONNECT) ஏங்கிக் கொண்டு தான் இருக்கும். அந்த வகையில் நாம் அனைவருமே "எமோசனல் இடியட்ஸ்" தான். உணர்வுகளுக்கு ஆட்பட்ட மனநிலை தான் நமக்கு இருக்கிறது. தனிமையில் இனிமை காண்கிறேன் என்று நாம் கூறினாலும் மெய்யான தனிமையை நம் மனம் வெறுக்கவே செய்யும். மனிதன் அன்புக்கு ஏங்கும் பிராணி. நமது மனம் மற்றொரு மனதால் ஆற்றுதல்படுத்தப்படுவதை (PAMPERING) விரும்பும் வகையில் படைக்கப்பட்டிருக்கிறது. இந்த வகையில் யாரெல்லாம் நம்முடன் எமோசனலாக கனெக்ட் ஆகி நமது மனதை ஆற்றுதல்படுத்துகிறார்களோ அவர்களே நமக்கு பந்தங்களாகிறார்கள். இந்த நிலையில் பந்தங்கள் இடையே விரிசல் விடக் காரணங்கள் யாவை?

அளவற்ற எதிர்பார்ப்பு (IMPRACTICAL EXPECTATIONS)

பொதுவாக பந்தத்தில் இருக்கும் இருவருக்கிடையே குறைந்தபட்ச எதிர்பார்ப்பு இருக்கத் தான் வேண்டும். ஆயினும் அந்த எதிர்பார்ப்பு மிதமிஞ்சும் போது பந்தம் கசக்க ஆரம்பிக்கிறது

ஒரு பக்க முயற்சி (ONE SIDED EFFORTS TO SUSTAIN RELATIONSHIP)

பந்தத்தை கட்டிக் காக்கவும் நிலைக்க வைக்கவும் ஒருவர் மட்டுமே முயன்று கொண்டு இருப்பதும் மற்றவர் எந்த முயற்சியும் செய்யாமல் இருப்பது

எளிதாக எடுத்துக் கொள்வது (TAKEN FOR GRANTED APPROACH)

பெரிய தியாகங்கள் செய்யாமல் சல்லிசாக எளிதாக கிடைத்து விட்டதால் பந்தங்களுக்குரிய முக்கியத்துவத்தை வழங்காமல் இருப்பது பாதகத்தை உருவாக்கும்

பிறர் குறை கண்டு கொண்டே இருப்பது (ALWAYS FINDING FAULT WITH THE OTHER ONE)

பந்தம் வளர்வதும் தேய்வதும் இருபக்க நன்மையாலும் குறையாலும் நேர்வது. இதில் ஒரு பக்கம் மட்டுமே குற்றம் காண்பதும் அதைப் பற்றி ஒருவருக்கொருவர் மனம் விட்டுப் பேசி முடிவுக்கு வராமல் குற்றத்தை மட்டுமே சாட்டிக் கொண்டிருப்பது

நீண்ட தொடர்பின்மை (NO COMMUNICATION FOR LONG TIME)

பந்தங்களுக்கு இடையே நீண்ட தொடர்பின்மையது இடையே ஒட்டுதலைக் குறைத்துவிடும். மனிதனுக்கு பந்தம் நிலைப்பதற்கு மனதால், உடலால், உணர்வால் ஒட்டுதல் அவசியம். பார்வையால் குரலால் தொடுதலால் ஸ்பரிசத்தால் அக்கறையான வார்த்தைகளால் அகம் மகிழும் அன்பு போன்றவை பந்தங்களை வளர்ப்பவை.

கர்வம் / அகந்தை / "நான்" என்ற எண்ணம் (EGO / ATTITUDE)

தான் என்ற எண்ணம், நாம் என்ற ஒற்றுமையை சீரழித்து விடும்.பந்தத்தில் சுயத்தை சற்று விட்டுக்கொடுத்தால் மட்டுமே இன்பம் கிடைக்கும். அகந்தையுடன் பந்தத்தை அணுகுவது துன்பத்தை ஈட்டும் செயலாகும்.

விட்டுக்கொடுக்க அடம்பிடிப்பது (STUBBORNESS TO GIVING UP)

பந்தத்தை தக்கவைக்க சில முரண்பாடுகளில் நமது சித்தாந்தங்களையும் விட்டுக்கொடுத்து பந்தத்தைக் காக்க வேண்டும். எதற்காகவும் பந்தத்தை விட்டுக்கொடுப்பதை தவிர்க்க வேண்டும். தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்ற எண்ணம் பந்தங்களுக்கு உதவாத எண்ணம்.

விட்டுக்கொடுத்தவன் கெட்டுப்போவதில்லை. நாம் கொண்ட பந்தங்களுக்காக விட்டுக்கொடுப்பதில் தவறேதும் இல்லை. இன்னும் பலர் பேசிய வார்த்தைகளுக்காக பந்தங்களைப் பிரிந்து வாழ்கின்றனர். சொந்த பந்தம் சிறக்க.

ஒரு சில வார்த்தைகளுக்காக பல வருடங்கள் ஏன் தலைமுறை தலைமுறையாக பந்தங்களை வேரறுத்த கதைகள் நம்மிடையே உண்டு. ஆனாலும் மனிதன் சினம் கொள்ளும் போது அவன் நாவும் மூளையும் மனமும் அவன் வசம் இருப்பதில்லை அதனால் தகாத மனம் ஒவ்வாத வார்த்தைகளை பேசுவது ஏசுவதை இயல்பாகக் கொண்டிருக்கிறான் இதை நாம் தான் பயிற்சியின் மூலம் மாற்றிக் கொள்ள வேண்டும். எனினும் இத்தகைய வார்த்தைகளுக்குக் கொடுக்கும் எடையை நாம் ஏன் பந்தங்களுக்குக் கொடுப்பதில்லை யாருக்குத்தான் கோபம் வருவதில்லை யார் தான் இங்கு வரம்பு மீறுவதில்லை மன்னிப்பு மூலம் தான் நம் அனைவரும் ஒன்றாக வாழ்ந்து வருகிறோம் மன்னிப்புக்கு தகுதியானவராக நம்மை நினைக்கும் நாம் பிறரையும் மன்னிக்கும் இயல்பை வளர்த்துக் கொள்ள வேண்டாமா?

மீண்டும் கூறுகிறேன் மனிதன் அன்புக்கு ஏங்கும் சமூக மயமாக்கப்பட்ட மிருகம். கிடைத்த பந்தங்களின் அருமை உணர்ந்து குறைவாக எதிர்பார்த்து குற்றம் சாட்டுதலை விடுத்து குற்றமே ஆயினும் அதை மன்னித்து அகந்தையைக் குறைத்து அதிகமாக அன்பு செய்து இடைவெளி ஏதுமின்றி பந்தத்திற்கு மதிப்புக் கொடுத்து அதிகமாக விட்டுக்கொடுத்து அன்பைப் பரிமாறி வாழ்வோம் நம் ஒவ்வொரு செல்களும் நியூரான்களும் அன்பிற்கு ஏங்குபவையே...

அன்பினால் ஆகாததும் உண்டோ?

எல்லாம் சரியாகிவிடும்

ரிஸ்கா முக்தார், இலங்கை

எல்லாம் சரியாகிவிடும்
என்றார்கள்

அதை
நம்பித்தான்
நான் என் நெடியக் கோடைகளைக் கடந்தேன்
கைவிடப்பட்டு நின்றபோதும் கலங்காதிருந்தேன்
துரோகங்கள் முன்வந்து நிற்கத் துணிந்து எதிர்கொண்டேன்
தேடித் தேடிக் கண்டடைந்ததெல்லாம் வெறும் குப்பையெனத் தெரிந்தும்
உடையாதிருந்தேன்
மறுதலித்து நகர்ந்தவர்களையும்
வழியனுப்பி மகிழ்ந்தேன்
என் தேநீர்க்கோப்பையில் நஞ்சூட்டியவர்களையும் மனதார மன்னித்தேன்

எல்லாம் சரியாகிவிடும்
என்றார்கள்

அதை
நம்பித்தான்
நான் என் சாப நிழல்களைத் தாண்டி வந்தேன்
பொருளற்றப் பழிசுமத்தல்களைப் புறங்கையால் தள்ளிவைத்தேன்
யாரும் வந்து தேற்றாதத் துயரங்களையும் சகித்துக்கொண்டிருந்தேன்
தோற்றுப்போய்க் கண்ணீர் சிந்த வேண்டிய நேரங்களிலும் புன்னகையோடு
நின்றிருந்தேன்
தூணென நம்பியிருந்தவர்கள்
தம் கரங்களால் என்னைத் தூக்கிலேற்ற முனைந்தபோதிலும் மனம் கல்லாகி
சமைந்திருந்தேன்

பின்னும்
இனி எல்லாம் முடிந்ததென

என்னை நானேக் கழுவிலேற்றிப்
பலியிடத் துணியும்
போதெல்லாம்
யாரேனும்
சொல்கிறார்கள்
வருந்தாதே
எல்லாம் சரியாகிவிடும்
என்பதாய்
ஆம்
உண்மையில்
அவர்கள் சொல்வதுபோல
எதுவும்
சரியாகுவதில்லைதான்
ஆயினும்
எல்லாம் சரியாகிவிடும்
என்ற
ஓர் ஆறுதல் வார்த்தை
அந்நேரத்திற்கான
வெறும்
சமாதானம்
மட்டுமல்ல
அதன்
பின்வரும் மொத்த
வாழ்வுக்குமான
நம்பிக்கைதான்
இல்லையா?



Chapter - 5

ARANYANI

Vijeni

1439, Aani Maatham, Siddhārthi Aandu, Arava Kingdom
Athikoodoor

As the sun came up with beautiful colours, the queen of Arava, returned to the chamber after her ablutions. She walked in the lead, with four of her personal assistants following close behind.

One among them was the newly joined sixteen-year-old girl, Mangala. After entering the chamber, she glanced around at the walls and high ceiling. "Liste n, listen," she whispered at another assistant, gaping at the carvings of grapevine and embedded precious gems. "How come only this chamber looks so royal in the entire palace?"

"What is it, Mangala?" Badhrakumari turned away from the polished mirror of the mahogany dresser. "My hair is dripping wet, but you want to know why this chamber is so rich and decorative, is it?"

The girls stood stunned. The queen was a perfectionist. The attendants knew that if anyone failed to do her orders, they would face a terrible wrath.

Born as the princess of Solavazli kingdom, she was known for her beauty, courage, and intelligence. The renowned poets had composed several songs praising her godliness, and it had reached every nook and cranny.

Thus, Arava kingdom had to pay a heavy bride price; huge trunks of cloth, gold, gems, and numerous cattle to get her married to Baladitya. Nonetheless, she was a perfect companion, the woman beside the king during all the lows and highs.

The attendant smiled awkwardly at her. "No… No… Maharani, I was just—"

"Calm down, I am not going to get angry." She beckoned and Mangala came forward. "Last year, there was a need to trade herbal medicines from Palichanda kingdom for the ailing children. That was when Maharaja had decided to forgo the inlaid gems and stones from the walls of the entire palace, except for this one. Do you know why?"

Mangala shook her head.

"Because this chamber belonged to a very special person of this kingdom, our former ruler Sukamaandran."

Ministers, chief advisors, council elders, and many more advised, murmured, gossiped, and even forced, that a king's palace should never be void of grandeur. But he paid no heed. To the king of Arava, nothing mattered, except his people.

The queen quirked her eyebrow. "Now that I have cleared your doubts, will you concentrate on your work?"

Mangala rushed towards her and began towelling her hair. Mangala's friend concentrated on scrubbing the essence of jasmine on queen's face. While the other two elder assistants were tying the elephant armlets, and the thick gold girdle around her waist.

Baladitya walked in, his unhurried, slow-paced footsteps echoing in the chamber. The queen raised her hand and flicked her wrist. Immediately, the assistants bowed their heads before filing out of the chamber.

"Badhrani," the king said, his warm hands sliding down her lean arms.

"Maharaja, where were you?" She turned to face him, straightening the folds of her yellow silk sari. "I did not see you by my side when I woke up."

"Sleep has become my enemy, Badhrani." He fetched a sigh. "I was just spending some time in the palace garden."

The queen had never seen gardening as a man's thing until she saw her husband out there, his angavastram clinging to his sweat and mud on his hands. He had learned how to care for a garden from his grandfather, Sukamaandran, and he loved it still. The neatly raised beds of herbs had a circular lawn with a path around it. Outside the lawn area were four marigold bush beds at each corner of the square field. Besides the field was a small pond filled with pink lotuses, dragonflies flitting around them. The thennai, ashoka, and wild mango trees lined the perfect lawn in their wooden boxes; it was all him.

"Did the alone time help you in finding a solution to the problems?"

He shook his head in dismay. "With some hope, I have announced a meeting with the farmers."

"Everything will turn out well, Maharaja."

"Hmm-Hmm."

The king took a pinch of vermilion from the silver bowl and smeared it on the parting of her hair. Then, his eyes wandered from her loose black hair to her fleshy blossom and stopped at her hip; a perfect hourglass.

Badhrakumari's delicate cheeks reddened as he inched closer and inhaled the scent of jasmine that lingered around her. Slowly taking her shoulders into his arms, he pressed a kiss on her forehead and smiled. When she was about to lean forward to dissolve into his muscular chest, her eyes tore open. She discerned a figure approaching them and instinctively nudged her husband.

"Father!"

A small boy came running towards them, and Baladitya with a broad smile on his face opened his hands to welcome him into a warm embrace. The little boy rushed and dived into his chest, pushing him to the cot behind. He placed quick and chaste kisses on his father's face.

“That was fun,” howled the little boy at the top of his voice.

“Yes, it was!”

“Bahubalan!” the queen yelled. “Get off from Maharaja.”

He sat upright and cross-legged on his father’s chest. “No!”

“Bahubalan! I said get off!” She repeated sternly, but Baladitya gestured her to calm down.

“No, Deva. There is no limit for his naughtiness.”

“He is still a kid, Badhrani. He needs to grow up.”

“I will grow and rule this kingdom with all-might,” the little boy replied, faking a sword in his hand.

“Just like my thathaiyya!” The king extended his hand to caress Bahubalan’s hair, but he flinched away.

“Father, do not touch my hair!”

“Why should not he?”

“Mother, everyone likes to ruffle my hair and pinch my cheeks. The maids always mess my hair, especially I hate that old Senthamarai’s annoying kisses. Why has father permitted them to touch me, Mother? Are we not the royal he—”

“Bahubalan!” the king interrupted. “You better learn to respect everyone, young man. No one is superior to anyone. They are the ones who help you grow up and Senthamarai ma is older than all of us.”

“This is how he behaves with everyone, Maharaja. He does not stay in a place and breaks everything in the palace. I am so worried.”

“Asking Bahubalan to sit idle is like telling a fire not to burn. His every muscle needs to move, to dance, and jump.”

“Deva, being naughty is different, but being rude? Do you know, yesterday he kept crying to me that he was not able to catch the peacock from the forest.” She shot a glance at Bahubalan, and he was pushing his lips out with a mean moue.

“And when I asked him what he wanted to do with it, he showed me a stick and said he wanted to beat it.” The queen raised her brows, expecting her husband to speak up.

“Ahm, I understand your concern, Badhrani. But he is a kid, maybe he was curious.”

“Deva! Curiousness will not involve harming. And he eve—”

“Highness.” An attendant waiting at the threshold of the chamber interrupted Badhrakumari’s laments.

“Yes.”

“Warrior Vishnu is waiting to meet you, Highness.”

“Ask him to wait in the garden, I will come.”

The attendant bowed before marching out of the chamber towards the left.

“Badhrani, we shall talk about this little spring tonight.”

The king looked at Bahubalan. He was trying to break the arched handles of a vase placed on the bedside table.

“Bahubalan,” he called, and the little boy stopped his action and turned towards his father. “I will finish the meeting, and we will eat together in the afternoon.”

“Okay, Father!” he exclaimed, and threw the petals in the air.

“In a few minutes, come to the durbar for the proceedings, Badhrani.”

She nodded at her husband and turned her attention back to Bahubalan.

The palace garden that stretched for several acres had seen everything in the king’s life.

It was in the same garden, he had walked first, he had fallen trying to catch his friends, he had practised his skills, his heart had shattered after losing his grandfather, and it was in the same garden that he had kissed Badhrakumari for the first time. This garden was always special to him, and he would never let it go for anyone.

Baladitya took a deep breath, relishing the scent of freshly bloomed flowers. "Yes, Vishnu. What is the matter?"

The warrior instinctively stood up. "Greetings Maharaja."

"Tell me, Vishnu." He sat on his grandfather's chair and gestured the chief to sit on a bench placed across him.

"There is a plea from an orphan girl my wife knows, Your Highness."

"Yes, proceed."

"For several days, someone is misbehaving with her, Your Highness."

"What?"

"Yes, Maharaja. I am yet to find the person. Also, I am not sure if there is anyone else in my village facing the same problem."

"Hmm…" Baladitya looked straight ahead, his face contorted with seething anger. If someone dared to misbehave in the kingdom's capital, he could not think of what was happening in the other villages.

"I will inform the chief police, Vishnu. And what about the girl?"

"She is fine, Your Highness. At present, she is staying with my wife."

"Good. I will talk with Maharani and we shall arrange a good alliance for her. Tell the girl not to worry."

"Thank you, Your Highness." The warrior stood up, bowed, and smiled, flashing a prominent dimple on his left cheek.

***

The royal durbar of Arava was attractive. With rich engravings all over the walls and ceilings, beautiful curtains covering the long windows, and handcrafted lanterns at the most perfect places, the chamber was breath taking.

People had gathered in a semicircular enclosed area a few metres away from the throne, to get answers that worried them more than anything did. All they wanted was to survive.

Six years ago, after the mysterious demise of the former king, all the twenty-eight villages surrounding the kingdom had been suffering. Unknown disease for children and no rain for several months leading to a famine. Though everyone believed that the kingdom was cursed and it was going to crumble into pieces, the hope in Baladitya's heart never burnt low. Not a day passed without a prayer to his ancestors, but it seemed they fell on deaf ears.

With hope-filled hearts, the inhabitants were murmuring their piteous situation with each other.

"Jai Maharaja, Jai Maharaja!"

"Long live the ruler of Arava!"

"Long live our highness!"

Baladitya walked into the palace durbar, the sound of his footsteps distinctly heard, even in the loudness of the jubilant cheers. His face resembled a carved sculpture- a sharp nose and a firm jawline. And his eyes, the colour of deep earth, shined.

On his way, his loyal ministers, holding posts of various degrees of power to make his work less tedious, greeted him. The long corridor finally saw its end, and he climbed the few stairs to the throne. He looked to his left at a small platform and a smile broke its way through Baladitya's stony expression. Badhrakumari was sitting on a smaller throne, her head held high.

A young man came forward, his shoulders hunched together. "Maharaja, the farmers have been assembled."

"Bring them in."

The farmers walked in, with a vague smile on their faces.

"You may present your problems to our maharaja," the attendant said and retreated to his position.

The head of the farmers, an old man in loose dhoti, and a white turban, stepped forward and bowed in humility. "Your Majesty, our saviour, we are facing an acute shortage of produce. There is no water for the fields, and the crops are dying. Also, we will not have food to feed us all from next month. It is worrying us all, Your Majesty. Arava is on the brink of a famine."

"Yes, Parithi ayya. I am aware of the situation and thinking over a solution. Do you have any suggestion?"

"We all feel it is time for us to go to the forest for hun-hunting, Majesty. If-if you could give your approval, some of us sh-shall start the proc—"

"Never!" he yelled, and the king's voice echoed against the durbar walls. "Animals are our family. Do you suggest killing our family to feed ourselves? Don't you know that we respect animals like our lords? We do not have the right to take their life for our comfort!"

The aged man's face wrinkled, and he stood speechless.

"Not for comfort, Your Majesty. But we are begging for our living." Another farmer beside Parithi interjected.

One of the ministers stood up in a rage. "How dare you raise your voice against our raja?"

Baladitya gestured him to calm down. "Minister, I am here to listen to their voices. They have all the right to raise their voice for them." He turned to the

farmers. “Don’t you think animals have a living? No matter what, we shall never hurt them. They have been sent to this world just like us… nature is common for both of us.”

The farmers bowed their heads and sighed.

After several minutes of absolute silence, the king of Arava said, “As you suggested, we shall go to the forest.”

Parithi looked at his fellow farmers and smiled. His burdened heart had relieved a bit.

“But not for hunting…” the king paused, and everyone was eagerly waiting for him to continue. “We will go to find water.”

Faint murmurings started erupting in the durbar. Discussions, questions, confusions, and unpleasant words.

“Yes, Majesty. Bu… a-af-aft…” Parithi cleared his throat. “But after what happened… no one is ready to go to the forest or near the river Dhara.”

The king sat quietl y, gazing at the innocent faces that surrounded him. There is nothing more to think, it is my duty!

He stood up and announced, “I will go to the forest and find us all a solution.”

“Maharaja!” Badhrakumari shrieked.

He turned, and she raised her pleading eyes to his. “Maharaja, you shall not go. Please…”

“Do not worry, Badhrani. If my thathaiyya’s fate awaits me, no one can deny it.”

ரமா பாய்

மராத்தியில் பைபிளை மொழிபெயர்த்தவர்

1858 ஆம் ஆண்டு கர்நாடகாவில்

ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்து,

பிராமணீயத்திற்கு எதிராகக் குரல் கொடுத்து, சூத்திரன் என்று சொல்லப்பட்ட ஓர் இளைஞனைக் கைப்பிடித்து, வடநாடு முழுவதும் சுற்றித் திரிந்து, பெண் கல்வி, பெண் விடுதலை எனத் தன் வாழ்நாளையே அர்ப்பணித்துக் கொண்டவர் ரமா பாய்.

20 ஆவது வயதில் தன் பெற்றோரையும், 25 ஆவது வயதில் தன் கணவரையும் இழந்த பின்னும், நெஞ்சில் துணிவை இழக்காமல், அதற்குப் பிறகு 40 ஆண்டுகள் தன் இலட்சியத்திற்காகப் போராடி மறைந்தவர் அவர்.

ரிப்பன் பிரபுவுக்கு முன்பே பெண் கல்வி குறித்து அவர் ஆற்றிய உரையால் ஈர்க்கப்பட்டு, இங்கிலாந்தும் அமெரிக்காவும் அவரை அரவணைத்தன. ஆனால் அவர் இந்தியாவில் கணவனை இழந்து வாழும் இளம் பெண்களுக்காக ஓர் இல்லம் நிறுவி, அவர்களுக்குக் கல்வி கொடுத்து, ஊக்கம் கொடுத்து, அவர்களைச் சுய மரியாதையோடு வாழ வழி செய்தார். ஆனால் இவையெல்லாம் இந்து மதத்திற்கு எதிரானவை என்று கூறி திலகர் அவரைக் கண்டித்தார்.

ரமா பாய் பிராமண குடும்பத்தில் பிறந்து கிறிஸ்துவ சமயத்தைத் தழுவினார். பண்டித ரமா பாய் என்று அழைக்கப்பட்டார். மராத்தியில் பைபிளை மொழிபெயர்த்தார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பெண்கள் –1

முனைவர் எஸ். சாந்தினிபீ,
மேனாள் வரலாற்று பேராசிரியர்,
சென்னை.

வரலாற்றில் பெண்களே காணாது இருந்த காலம் இன்று மறைந்து போனது. பல தரப்பினரின் முன்னெடுப்பு தொடர் பதிவுகள் வழியே இன்று மொத்தமாக மறையாது தென்னைமரத்தின் பின்புறம் இருந்து விளையாட்டுக் காட்டும் பிறை நிலவாக தெரிகிறார்கள். நாட்டின் ஆளும் அதிகாரத்தை இங்கிலாந்து அரசு இந்தியரிடம் விட்டுச் சென்றது இந்த ஆகஸ்டு மாதம் என்பதால் இந்த போராட்டத்தில் தங்களை அற்பணித்துக் கொண்ட பெண்களை குறித்து நாம் நினைவில் இருத்தலாமே...

சுதந்திரப் போராட்டத்தில் பெண்கள் என்றதும் கஸ்தூரி பாய், கமலா நேரு சரோஜினி நாயுடு என்னு சிலரது பெயர்களை நாம் அனைவரும் விரல் விட்டு எண்ணி விடுவோம், ஆனால் அவர்கள் மட்டுமேவா... என்றால் கிடையாது. ஆண்களுக்கு இணையான எண்ணிக்கையில் இல்லை என்றாலும் மிக அதிகமானோர் பங்கெடுத்தனர்.

தென் ஆப்பிக்காவில் இருந்து இந்தியா திரும்பிய மகாத்மா பெண்கள் ஈடுபடாத ஒரு இயக்கம் மக்களியக்கமாகாது என்பதில் தெளிவாக இருந்தார். தென் ஆப்பிரிகாவில் தமிழர் பெருமளவில் இருந்ததும் போராட்டங்களில் தமிழ்பெண்களின் பங்கெடுப்பும் ஒரு காரணமாகலாம். பெண்கள் வெளியே வந்து நாட்டு நடப்பில் கலந்துக்கொள்ள உதவியதும் அவரே. அக்காலக் கட்ட பெண்களின் பணி, தியாகம் ஒரு எல்லைக்கு அப்பாற்பட்டது.. அதை முழுமையாக எழுத வேண்டுமானால் நீண்ட தொடராக எழுத வேண்டும். எனவே சில பெண்களின் பங்கெடுப்பும் சிறைவாழ்க்கை குறித்து மட்டுமே காண்போம். அதிலும் குறிப்பாக வட இந்தியப் பெண்கள் குறித்து காண்போம்.

முதல் உலகப் போரில் உடல், பொருள் ஆவியைக் கொடுத்து ஒத்துழைப்பு வழங்கிய இந்தியர்களை காலனி ஆதிக்க இங்கிலாந்து அரசு ஒப்பந்தப்படி உரிமையை, விடுதலையை வழங்காமல் ஏமாற்றியது.1920 முதல் முழுமையாக இப்போரில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட காந்தி 1920 செப்டம்பர் மாதத்தில் நடைப் பெற்ற காங்கிரசு

மாநாட்டில் எடுத்த முடிவின் விழைவாக ஒத்துழையாமை இயக்கம் (1920-22), வெளி நாட்டு பொருட்கள் புறக்கணிப்பு, குடிமைச் சட்ட மறுப்பு இயக்கம் (உப்பு சத்யாகிரகம்) (1930-34), வன்முறையற்ற இயக்கம் (அகிம்சை இயக்கம்) வெள்ளையனே வெளியேறு (1942) என ஒரு புதிய பாதையை தந்தை காந்தி அடிகள் விடுதலை போராட்டத்தில் செயல்படுத்தினார்.

காந்தியின் அழைப்பை ஏற்று பெண்கள் பெருவாரியாக பங்கெடுத்தனர் என்று நினைத்தால் அது மிகை. அவ்வளவு எளிதில் எந்த காலத்திலும் பெண்கள் தங்கள் உரிமைகளை செயல்படுத்த முடியவில்லை.. அப்படி ஒரு இரும்புத் திறைக்கு நிகரான பொய் கட்டமைப்புகள் நம் நாட்டில் இன்றும் உண்டு. அதைக் கண்டு மனதளவில் அஞ்சும் பெண்களுக்கும் குறைவில்லை. காந்தி பெண்களுக்கான அறைக்கூவல் விடுத்திருந்தாலும் அன்று காந்தி மகாத்மாவாக அறியப்படாத காலகட்டம். பொருளாதாரத்தில் உயர் நிலை வகித்த குடும்பங்களின் ஆண்களில் இங்கிலாந்து நாகரீகத்தை வாழ்க்கையில் கடைப்பிடித்து நாட்டுப் பற்றையும் போற்றியவர்களே தங்கள் வீட்டுப் பெண்களை இப்போரட்டத்தில் அனுமதித்தனர். அவர்கள் தான் துவக்கத்தில் நாம் விரல்விட்டு எண்ணியவர்கள்.

1921 கணக்கெடுப்பின்படி அன்றைய யூனைடெட் ப்ரவின்ஸ் என்று அறியப்பட்ட உத்திரப் பிரதேசத்தில் ஆயிரம் பெண்களில் ஆறு பெண்களே கல்வி கற்றவர்கள். இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் மூன்று பெண் இதழ்கள் மட்டுமே உத்திரபிரதேசத்தின் அலகாபாத்திலிருந்து இந்தி மொழியில் வெளிவந்தன. அவை ஸ்த்ரி தர்பன், க்ருக லக்ஷ்மி (க்ருகம்= வீடு), சாந்த். இம்மூன்றில் நிலவு என பொருள்படும் சாந்த் தான் எரிமலை பிழம்பிற்கு ஒத்த வேகமானக் கருத்துக்களுடன் வெளிவந்தது. இதன் முதல் பிரதி நவம்பர் 1922 -ல் வந்தது.

க்ரக லக்ஷ்மி (வீட்டு இலட்சுமி) பண்டிட் சுதர்சன் ஆசாரியா அவரது மனைவி ஸ்ரீமதி கோபால்தேவி இருவரின் இணைந்த முயற்சியில் இந்தி மொழியில் உருவானது. இதன் முதல் பிரதி 1909ல் அலகாபாத்திலிருந்து வெளிவந்தது. பெண் ஆசிரியரை தன் குழுவில் கொண்ட ஒரு பெண்ணிய இதழ் எனும் பெருமைக்குறியது. இந்நூலை

வெளியிட்ட சுதர்சன் பிரசுரம் அக்காலத்தில் பன்மொழி இதழ்களை வெளியிட்டது. ஹிந்தி, சமஸ்கிருதம், ஆங்கிலம் மொழிகளில் பெண்ணிய இலக்கியங்களுக்கு முதல்நிலை தந்து பதிப்பித்தது, க்ருக லக்ஷ்மி மாத இதழாகும். குறைந்தபட்சமாக இவ்விதழ் 64 பக்கங்களுடன் வெளியானது.இரு நிறங்களுடன் இரண்டு அல்லது மூன்று படங்களுடன் குறைந்தது 16 கட்டுரைகளையும் கொண்டிருந்தது. தபால் செலவு உட்பட வருடாந்திர சந்தா இரண்டு ரூபாய் எட்டு அணாவாகும். முதலாம் ஆண்டிலே 4000 சந்தாதாரரைப் பெற்ற பெருமைக்குரியது.

ஆனால் படிப்படியாக சந்தாதாரர்கள் எண்ணிக்கை குறைந்தது. 1920ல் 1000 சந்தாக்களே மிஞ்சியது. ஆனால் மீண்டும் மறு எழுச்சிப் பெற்று 1924ல் சந்தாதாரர்களின் எண்ணிக்கை கூடி 2000 த்தைத் தொட்டது. 1929 வரை வெளிவந்த க்ருகலக்ஷ்மி திருமதி கோபால்தேவி அவர்களையே ஆசிரியராக கொண்டிருந்தது.

ஆனால் தாக்கூர் ஸ்ரீனாத் சிங் எனும் ஹிந்தி எழுத்தாளரே ஆசிரியருக்கான பணியை செய்து வந்தார். ஒரு பெண் குடும்பத்தின் செல்வ கடவுள் இலக்குமியே. அவள் தன் கடமையினை திறமையாக செய்ய ஒரு நல்ல குடும்பத் தலைவியாக அவளை வடிவமைப்பதே ஆசிரியர்பகுதியின் நோக்கமாக கொண்டு இவ்விதழ் செயல்பட்டது. தனது கல்வி, அறிவு வழியே ஒரு பெண் தன் குடும்பத்திற்கு அமைதி, மகிழ்ச்சி நிலவ உறு துணையாக அமையும் வண்ணம் அவளை செதுக்கவேண்டும். ஆனால் அவள் இங்கிலாந்து பெண்ணாக மாறிவிடக்கூடாது என்பதில் இவ்விதழ் கவனமாக செயல்பட்டது. குறிப்பாக கோபால்தேவி சமயம், அரசியல் கருத்துக்களுக்கு தனது இதழில் இடமில்லை என வெளிப்படையாக அறிவித்து செயல்படுத்தினார். சங்க இலக்கிய அகம் புறம் போல வீடு பெண்ணின் செயல்பாட்டிற்கும் வெளியுலகம் ஆணுக்குமானது எனும் கருத்தோடு இவ்விதழ் செயல்பட்டது. ஆக இவ்விதழ் காந்தியின் அழைப்பை ஏற்கவில்லை உத்வியும் புரியவில்லை. இப்பெண்ணிதழ் பெரிய முற்போக்கு கருத்துக்களுடன் இயங்கவில்லை. என்பது தெளிவு.

சுருக்கமாக 'ஜிஎல்' என்றும் அறியப்பட்டது இவ்விதழ். பெண்கல்வி பெருக்கம், மூடநம்பிக்கைகளிருந்து பெண்களை விடுவிப்பது போன்ற சில முன்னேற்ற கொள்கைகளைக் கொண்டிருந்தது. அதே வேளையில் பெண்களின் பாரம்பரிய கடமைகள், பணிகளை போற்றுவதையும் தன்நோக்கமாக வைத்திருந்தது. புரட்சிக் கருத்துகளிலிருந்து தன்னை தனிமைப் படுத்திக் கொண்டது. சமூக எதிர்ப்புக்கு துணியாது அஞ்சினார் போலும்.

ஸ்த்ரீ தர்பன் மோதிலால் நேருவின் குடும்பத்தினரான இராமேஷ்வரி நேருவை ஆசிரியராக கொண்டது இதுவும் மாத இதழாகும்.. இந்தி இலக்கியங்கள் குறித பெண்களின் கருத்துக்கு ஒரு தளமாக இயங்கியது. அன்றைய யுனைடெட் ப்ராவின்ஸின் எல்லை கடந்து பஞ்சாப் பெண்களும் இதில் கருத்துரையாடல் செய்யும் வாய்ப்பை வழங்கியது.

எழுபது பக்கக்களுடன் வெளி வந்த இந்த இதழ் நான்கு உட்பிரிவுகளைக் கொண்டது. முதல் பகுதியில் ஆசிரியர் குழு தன் பகுதியில் தவறாது அன்றைய முக்கிய தகவல்களை விவாதித்தது. அதன் வழியே. வாசகர்களுக்கு அன்றைய உலகியல் நடப்புகள், பெண் குறித்த தகவல்கள் கொடுப்பதில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. உலக நடப்பு, நாட்டு நடப்பு உத்திரபிரதேச நடப்பு என மூன்று தரப்பின் தகவல்களையும் பெண்கள் அறியும் வாய்ப்பைப் பெற்றனர்.

இரண்டாம் தொகுதியில் முக்கிய தகவல் செய்தி, அரசியல், வரலாறு, கலாசாரம், சமூகம் சார்ந்த கட்டுரைகளை வெளியிட்டது. இலகியம், சிறுகதை, தொடர்கதை, வாழ்க்கை வரலாறு,கவிதை ஆகியவை மூன்றாம் பகுதியியாகவும் நான்காவதில் இதற தகவல்கள் வாசகர்பகுதி ஆசிரியரின் விளக்கம் புத்தக அறிமுகம் ஆகிய தகவல்களை உட்கொண்ட வெளியீடாக அமைந்தது ஸ்த்ரீ தர்பன்.

அன்றைய உலக, இந்திய அரசியல் நடப்புகளை அறிந்துக் கொள்ளும் வாய்ப்பை இவ்விதழ்தான் முதன் முதலில் பெண்களுக்கு வழங்கியது. இதன் உரிமையாளரும் ஆசிரியரும் ஒரு பெண்ணே எனும் அடையாளதிற்கும் பெருமைக்கும் உரியது. முதலில்

அலகாபாத்திலிருந்து வெளிவந்தது 1923-முதல் கான்பூரிலிருந்து வந்த இவ்விதழ் 1929 வரையிலும் வந்த வெளியீடு பின்னர் நின்று போனது. இதன் முதல் இதழ் 1909 ல் வெளிவந்தது கான்பூருக்கு இடமாற்றம் ஏற்பட்டது முதல் சுமதி தேவி, பூல் குமாரி மெஹ்ரோத்ரா எனும் இருபெண்கள் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார்கள். இவர்களும் நேரு குடும்பத்தினரே. முதல் இரண்டாண்டுகள் தேவநாகரி மற்றும் பாரசீக எழுத்துக்களில் வெளியானது. பின்னர் தேவநாகரியில் மட்டுமே தொடரப்பட்டது.

பெண்களுக்கான சமூக கொடுமைகள் அநீதிகள் அகற்ற பொதுமக்கள் கருத்தாக்கத்தை உருவாக்குவதில் இவ்விதழ் பெரும் பங்குவகித்தது. பெண்களின் அரசியல் உரிமைகளை மையக் கருவாக அமைந்த கட்டுரைகள் பதிக்கப்பட்டன. பெண்களுக்கான பொதுவெளி உரிமைகளை முன் வைத்ததுடன் இவ்விதழே முதன் முதலில் பெண்களுக்கான ஓட்டு உரிமையின் அவசியம் குறித்து குரல் கொடுத்தது.பெண்கள் நாட்டுச் சேவை செய்ய வேண்டுமானால் அவர்களுக்கு ஆட்சி பொறுப்பும் ஆணையிடும் உரிமையும் கொடுக்கவேண்டுமென இராமேஷ்வரி உரத்த குரல் எழுப்பினார்.

வராற்றுப் பெண்கள், உலகப் பெண்கள் முன்னெடுப்பு மற்றும் காந்தியின் அழைப்பு எனும் மூன்று கருதுகோள்களை முன்னிறுத்தி பெண்களுக்கான அரசியல் உரிமைகள் வலியுறுத்தப்பட்டது. அன்றைய இந்தி இலக்கிய உலகில் புரட்சியாளராக அடையாளம் பெற்ற சத்தியபக்த்தா வின் 'பண்டைய இந்தியாவில் பெண்களின் அதிகாரம்' எனும் தொடர் வெளியிட்டார்கள். சீதை, சாவித்திரி போன்ற புராணப் பெண்களும், படைநடத்தி போர்புரிந்த இராஜபுத்திர வீராங்கனைகளும் பர்தா எனும் முகத்திரையின்றி வெளியுலகிலுலவியதையும் முன்னுதாரணங்களாக காட்டினார்கள். இவ்வாறு பல வகைகளில் பெண் உரிமக்காகவும் விடுதலை போரில் பங்கீட்டிற்காகவும் இந்தப் பெண்ணிய இதழ் பெரும் பங்காற்றியது.

ராம்ரக் சிங் சாகல், வித்யாவதி சாகல் ஆகியோரின் முன்னெடுப்புதான் 'சாந்த்' எனும் இந்தி பெண்ணிய இதழ். 1922ல் இதன் முதல் பிரதி வெளியிடப்பட்டது. சிவராணி தேவி இவ்விதழின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். பெண்ணிய மைய தகவல், பெண் அதிகார முன்னேற்றம் ஆகிய கொள்கைகளை மையமாகக் கொண்டு இவ்விதழ் இயங்கியது.பொதுவாக சமூக சீர்திருத்தம், நாட்டுப் பற்று, பெண்கள் குறித்த தகவல்,இலக்கிய படைப்பு, சிறு கதை, வாழ்க்கை வரலாறு, கவிதை, அறிவியல் தகவல், வீட்டிற்கு தேவையான குறிப்புகள், ஆலோசனைகள், போன்றவற்றைக் குறித்து இவ்விதழ் பேசினாலும் பல நேரங்களில் 'பெண்கள், தீண்டாமை, தியாகிகள்' போன்ற தலைப்புகளில் சிறப்பு இதழ்களும் வெளிவந்தன. பெண்கள் சுயமாக தங்களை

முன்னிலைப் படுத்துதல்,, பேச்சு, எழுத்து போன்ற தொடர்பு திறமைகளை வளர்த்தல், பெண்ணியம், நாட்டுப் பற்று, பாலினம் போன்ற துறைகளில் மக்களின் கருத்துக்களை பிரசுரித்தது.

பெண் சமூக சீர்திருத்தத்திலும் நாட்டுப் பற்றிலும் பெண்ணிற்கான இடம் என்ன எனும் கேள்வியை முன்வைத்தது. பர்தா, விதவை மறுமணம், பெண்கல்வி, போன்ற தலைப்புகள் குறித்து இவ்விதழ் கட்டரைகளை வெளியிட்டன. பெண்களின் எழுத்துத் திறமையை கதை, கட்டுரை, கவிதை, தொடர்கதை, நாவல் ஆகியவற்றின் வழியே இவ்விதழ் வளர்த்தது. அறிவியல், நீதி, உடல் நலம், வாழ்வியல், சமையல், குழந்தை வளர்ப்பு, போன்ற தலைப்புகளிலும் பெண்களின் அன்றாடப் பணிகளுக்கு உதவிய கட்டுரைகள் பதிப்பிக்கப்பட்டன. மேற்கத்திய உலக முன்னேற்ற பதிவுகளும் இம்மாதவிதழ் வெளியிட்டது.. சிறப்பு இதழ்களை பதிப்பிப்பதே சாந்த் இதழின் தனிச் சிறப்பாக இருந்தது. அக்காலகட்டத்தில் சமநிலைச் சமூகம் குறித்து பேசிய ஒரே இதழாகக் கருதப்பட்டது. பெண்களுக்கு மட்ட்ம்தான் குடும்பக் கடமைகளா? ஆணுக்கு ஏன் இல்லை? ஸ்த்ரி தர்மம் இருக்கும் போது ஏன் புருச தர்மம் இல்லை ? என்ற கேள்விகளை இவ்விதழ் அடுக்கியது. தாய் என்பவள் தியாகம் செய்பவள் எனும் கட்டமைப்பையும் கேள்விக்கு உட்படுத்தியது.

ஆங்கில ஆதிக்க அரசுக்கு எதிரான கருத்துரைகளை மக்களிடையே பரப்பியது. ஆதிக்க அரசால் தண்டிக்கப் பட்டவர்கள், தூக்கிலிடப்பட்டவர்கள் போன்ற தியாகிகளின் படத்துடன் கட்டுரைகள் அடங்கிய சிறப்பிதழ் ஒன்றை 1928-ல் பதிப்பித்தது. இதனால் ஆத்திரமடைந்த இங்கிலாந்து அரசு இவ்விதழை தடை செய்தது, சென்சார் எனும் பெயரில் பல படங்களையும் கட்டுரைகளையும் தடை செய்தது. இத்தகைய பெண்ணிய மாதவிதழ்கள் வெளியுலகில் நாட்டு நடப்புகளில் பங்கேற்க பெண்களை தயார் செய்தது. காந்தியின் அழைப்பை ஏற்க இத்தகைய பெண்ணிய இதழ்களின் பங்கு மிகப் பெரியது. இவ்விதழ்களை நடத்திய பெண்களின் பணியும் நினைவிற் கொள்ளத் தக்கது.

மதநல்லிணக்க மதுரை அன்றும் இன்றும்...
மகிழ்ச்சி தரும் வரலாற்றுச் செய்தி

முனைவர் தேமொழி,
சான்பிரான்சிஸ்கோ.

மதுரை மீனாட்சிக் கோயிலின் மகர விளக்குத் தோரணம்...

டாக்டர் இரா. கலைக்கோவன் அவர்களின் கட்டுரையிலிருந்து...

கீர்த்திமுகத்திற்கு நேர் கீழே தாமரைமலரில் அர்த்த பத்மாசனத்தில் பின் கைகளில் தாமரை மொட்டுகளுடன் யானைத்திருமகள் (கஜலக்ஷ்மி). முன் கைகள் காப்பும் அருளும் காட்ட, அம்மையின் இருபுறத்தும் துளைக்கைகளில் நீர்க்குடங்களுடன் அலங்கரிக்கப்பட்ட யானைகள்.

· எடை - 28-8-0 தோலா
· 211 சிவப்பு கற்கள்
· 36 மரகத கற்கள்
· 40 பலச்ச வைரம்
· 2 முத்து · 2 நீலம்
· 2 வைடூரியம்
· மிதியடிகள்
· எடை - 27-12-0 தோலா
· 211 சிவப்பு கற்கள்
· 36 மரகத கற்கள்
· 40 பலச்ச வைரம்
· 2 முத்து · 2 நீலம்
· 2 வைடூரியம்

ஆடித்திருவிழாவில் அம்மன் காலில் அணிந்து வரும் காலணிகள் பீட்டர் ரோஸ் வழங்கியவை

கம்பீரமும் கவர்ச்சியுமாய்த் தாமரை அடுக்கென விரிந்து கண்களை நிறைக்கும் இந்த விளக்குமாலையிலும் இரண்டு எழுத்துப் பொறிப்புகளை நளினி கண்டறிந்தார்.

பொ.கா.1819இல் செதுக்கப்பட்டுள்ள அவற்றுள், மத நல்லிணக்கப் பார்வையில் அமைந்திருக்கும்வலப்புறப் பொறிப்பு அக்காலத்தே **மதுரைமாவட்ட ஆட்சித்தலைவராக விளங்கிய ஆங்கிலேயரான ரோஸ்பீட்டரின் ஆணைக்கிணங்க, மதுரை மாடக்குள வட்டாட்சியர் பொறுப்பிலிருந்த திரு. சையது இஸ்மாயில் அனைத்து மக்களுக்குமாக இந்த விளக்குத்தோரணத்தை அமைத்ததாக அறிவிக்கிறது.**

மதுரை மீனாட்சியம்மனின் ஆடித் திருவிழா

கிளி வாகனத்தில் மீனாட்சி

சிம்ம வாகனத்தில் மீனாட்சி

தங்க காமதேனு வாகனத்தில் மீனாட்சி

யானை வாகனத்தில் மீனாட்சி

நெடு நாளைக்குப்பின்

மனுஷ்ய புத்திரன்

நெடு நாளைக்குப்பின்
நானும் மகளும்
நகர்வலம் போனோம்

எப்போதும் அவள்தான்
முடிவெடுப்பவள் என்பதால்
'எங்கே போகலாம்?' என்றேன்

'"நான் குழந்தையாக இருந்தபோது
இருந்த வீட்டிற்குப் போகலாம்'" என்றாள்

நாங்கள் போனோம்
அந்த வீடு இருந்த இடத்தில்
அடுக்கு மாடி குடியிருப்பு இருந்தது
அதற்குள் இருந்து வெளிப்பட்ட
ஒரு தம்பதி
எங்களை வினோதமாக
உற்றுப் பார்த்தபடி கடந்துபோனார்கள்
அந்த வீட்டின் பின்புறமிருந்த
துளசிச் செடி இப்போது இருக்குமா
என்று கேட்டாள்
என் துளசிச் செடியை அணைத்துக்கொண்டேன்
அவள் முகத்தில்
அந்தியின் மஞ்சள் வெளிச்சம்
லேசாக மறையத் தொடங்கியது

"அப்பா நான் சின்ன வயசாக இருந்தபோது
கேக் வாங்கித் தருவியே
அந்த பேக்கரிக்கு போகலாமா?" என்றாள்
எங்கள் வாகனத்தை
அங்கு செலுத்தினோம்
அவளுக்குப் பிடித்த

அதே 'கேக்' கை வாங்கினோம்
ஒரு வாய் உண்டவள்
அப்படிதே வைத்துவிட்டாள்
" அப்பா அந்த பழைய கேக் வாசனை
இதில் இல்லப்பா" என்றாள் ஏமாற்றத்துடன்
அந்தியின் பாதி இருள்
அவள் முகத்தில் படிந்தது

பிறகு
அவள் குழந்தையாக இருந்தபோது
எப்போதும் அழைத்துச் செல்லும்
அந்த வணிக வளாகத்திற்குப் போகலாம் என்றாள்
" அப்பா இந்த மாலில்
எல்லா இடமும் எனக்குத் தெரியும்" என்றவள்
கை கழுவும் இடம்
எங்கே இருக்கிறது என்று தெரியாமல் தடுமாறினாள்.
" இங்கே எல்லாத்தையும் மாத்திட்டாங்கப்பா" என்றாள்
குழப்பமாக
அந்தி அவள் முகத்தைவிட்டு
வெகுதூரம் சென்றிருந்தது

அவள் குழந்தையாக இருந்தபோது
விளையாடிய பூங்கா
அவள் குழந்தையாக இருந்தபோது
படித்த பள்ளி
அவள் குழந்தையாக இருந்தபோது
நாங்கள் நள்ளிரவில் தூக்கிக்கொண்டு ஓடிய
மருத்துவமனை
எல்லாவற்றின் வாசலிலும்
சிறுபொழுது
நின்று நின்று சென்றோம்

மனம் சோர்ந்தவளாக
"நம்ம' பீச்' க்குப் போகலாம்பா" என்றாள்
இறுதியாக

கடல் நீருக்கு
வெகு அருகில் சென்றோம்
"இந்த உலகில்
எல்லாம் மாறிவிடும்
ஆனால் இதோ பார்
இந்தக் கடல் அலை மட்டும்
நீ குழந்தையாக இருந்தபோது
எப்படி இருந்ததோ
அப்படியே இருக்கிறது" என்றேன்

நம்பிக்கையற்றவளாக
கடலையே உற்றுப் பார்த்தவள்
"கடல் அப்படியேதான் இருக்கிறது
ஆனால் நம்வீடு
கடற்கரையைவிட்டு வெகுதூரம்
சென்றுவிட்டதே..." என்றாள்

என் குழந்தைகள்
இன்னும் குழந்தைகளாகத்தான்
இருக்கிறார்கள்
அதற்குள் எத்தனை பிரிவின் துக்கங்கள்
அதற்குள் எத்தனை
'நாஸ்டாலாஜியா' கள்.

இருள் எங்கள் மேல்
முழுமையாக கவிந்திருந்தது
"வீட்டிற்கு போகலாம்பா" என்றாள்
தன் நினைவின் சித்திரப் புத்தகத்தை
மூடியவளாக

முகநூல் பதிவு

சிந்தனையோர் வழியில் சிறப்பாக வாழ்க!

முனைவர் இல. ஜெயந்தி,
சென்னை.

மனித இனம் மேன்மையாக வாழ்வதற்கு அறிஞர்களும், சிந்தனையாளர்களும், ஆழ்ந்து சிந்தித்து அதற்கான வழிகளை எடுத்துரைக்கின்றனர்.

சிந்தனையாளர்கள் கூறும் வழியில் வாழ்வை அமைத்துக் கொள்வது பாதுகாப்பும், அமைதியும், நிறைவும் அளிக்க வல்லது.

'நமது அனுபவங்களின் மீதுதான் அறிவு வளர்கிறது என்றால் நாம் பெறும் அறிவு மிக மிகச் சிறிய அளவே இருக்கும். நமது அறிவு பிறரது அனுபவங்களாலும் நமக்கு முன் வாழ்ந்த முன்னோர்கள் விட்டுச் சென்ற, அவர்கள் தந்துவிட்டுப் போன பாரம்பரியத் தொடர்பில் இருந்தும் பெறப்படுகிறது. ஆகவேதான் சுய அனுபவத்தை மட்டுமே நம்பி எதையும் எடைபோடாமல் ஒரு பரந்த அடிப்படையில் நாம் வாழக் கற்றுக் கொள்ளவேண்டும். வாழ முயல வேண்டும்' என்பார் டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி.

'ஞானவான்களுடைய போதகம் ஜீவஊற்று, அதனால் மரணக் கண்ணிகளுக்குத் தப்பலாம்' என்கிறது பைபிள்.

சிந்தனை அறிவின் சிறப்பே மனிதன்

மன அலைச்சுழல் குறைவாக இருக்கும்போது உயர்ந்த சிந்தனைகள் உருவாகின்றன. ஆராய்ச்சி, தெளிவு எனும் மனநிலைப் படிகளின் வளர்ச்சியே சிந்தனை ஆகும். அவை தனக்கும் சமுதாயத்துக்கும் நலம் விளைவிப்பதாக அமையுமானால் அத்தகைய சிந்தனையாளர்களை மக்கள் போற்றுவர்.

'இயற்கை வளத்தை வாழ்வின் வளமாக மாற்றுவதற்கு சிந்தனை அவசியம். சிந்தனை என்றால் இயற்கையை நுணுகி ஆராய்ந்து, அதன் இயக்கத்தை இயக்க ஒழுங்கை, அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை அறிந்து கொள்ளும் ஆர்வம், செயல், திறமை ஆகும்.

‘வாழ்வை வளப்படுத்தும்
வழக்க பழக்கங்கள் எனும்
ஒழுக்கங்கள் எல்லாம்
ஆழ்ந்த சிந்தனையாளர்
அன்பினால் உலகுக்கு
அளித்த பரிசு ஆகும்.’

என்பார் வேதாத்திரி மகரிசி.

பெரியாரைத் துணை கோடல்:

அறம் உணர்ந்தவராய்த் தன்னைவிட மூத்தவராய் உள்ள ‘அறிவுடையவரின் நட்பை, கொள்ளும் வகை அறிந்து ஆராய்ந்து கொள்ள வேண்டும்.

அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறன் அறிந்து தேர்ந்துகொளல். (திரு. 441)

தம்மைவிட அறிவு முதலியவற்றால்பெரியவர் தமக்குச் சுற்றத்தாராகுமாறு நடத்தல், வல்லமை எல்லாவற்றிலும் சிறந்ததாகும்.

‘தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை. (திரு. 444)

என்றுரைக்கிறார் திருவள்ளுவர்.

அறிவு நிலைப் படிகள்:

மக்களின் அறிவு நிலையில் வேறுபாடுகள் உள்ளன. அவற்றுக்கு ஏற்றவாறு முன்னோர் வழிகளை வகுத்துள்ளனர்.

நம்பிக்கை:

அறிவுநிலையில் உயராத சிறுவயதினருக்கும், அறியாமையில் உள்ளவருக்கும் நம்பிக்கை வழியான பக்தி, உருவ வழிபாட்டுமுறைகளை வகுத்தனர். அறிவுறுத்தியும், அச்சமூட்டியும் நல்வாழ்வுக்கு வழிகாட்டினர்.

விளக்கம்:

சிந்திக்கத் தெரிந்தவருக்கு விளக்க வழியில் எச் செயல்கள் துன்பம் தருகின்றன என ஆராய்ச்சியும், விழிப்பும், தெளிவும், பெற வழி வகுத்தனர்.

முழுமைப்பேறு:

இறைநிலை உணர்ந்தவர், வாழ்வில் நிறைவு பெற்றவர்கள், சமுதாய மேன்மை உலக ஒற்றுமைக்கான சிந்தனைகளை எடுத்துரைப்பர்.

சீர் திருத்தமே வாழ்வின் வளம்:

மனிதகுல ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் வழி வகுக்கும் சிந்தனைகளை முன்னோர் வழங்கினர். அறிவியல் வளர்ச்சியால், முன்னேற்றம் மிகுந்துள்ளது. அதை நிர்வகிக்கும் திறமை உயர வேண்டும்.

'மனித வாழ்வு முன்னேற்றம், சீர்திருத்தம் என்ற இருவகையால் வளம் பெறுகிறது.

முன்னேற்றத்தின் வளர்ச்சிக்கேறப், சீர்திருத்தம் உயர்ந்தாலன்றி நல்லவிளைவுகளைத் தராது. வேகம் என்பதை முன்னேற்றமாகக் கொண்டால் அதை நிர்வகிக்கும் நுட்பம், திறமை இரண்டும் சேர்ந்ததே சீர்திருத்தமாகும்' என்பார் வேதாத்திரி மகரிசி.

'அறியாமையில் இருந்த அரேபிய மக்களை, நல்வழிப்படுத்த வாழ்க்கை நெறிகளையும், கட்டுப்பாட்டையும் கொண்டு வந்தார் நபிகள் நாயகம்.

கடும்வட்டி வசூலித்து ஏழைகளைத் துன்புறுத்தியவர்களை அடக்க, வாழ்க்கை நெறிகளை, ஆண்டவன் கட்டளைகளாக பரப்பினார் ஏசுபிரான்.

ஆடு மாடுகளை பலியிட்டுத் திருப்தி அடைந்த சமுதாயத்துக்கு நல்ல சிந்தனை. செயல், என எட்டுவழிப் பாதையை அறிவித்தார் புத்தர் பிரான்.

ஆதி சங்கரர், ராமானுஜர், ஆழ்வார்கள், நாயன்மார்கள், பக்தி, தெய்வீக இயக்கம் மூலம் நன்னெறிகளைப் பரப்பினர்.

சத்தியம், நீதி, நேர்மை, அன்பு போன்ற அடிப்படை வாழ்க்கை நெறிகளை எல்லா மதங்களும் போதித்தன.

அடுத்த கட்ட வளர்ச்சியாக, அரசியல், விழிப்புநிலை, சுதந்திரம், சமத்துவம், புரட்சிநிலை, தனி மனித சுதந்திரம் என வளர்ந்தது.

இன்று மனித ஆற்றல் ஒரு புதிய பரிமாணத்தில் விஸ்வரூபம் எடுக்க ஆரம்பித்திருக்கிறது. மனிதன் ஒருநாள் தன் முழுத் திறமைகளையும் உபயோகிக்கும்

அசாதாரண மனிதனாக விளங்குவான் என்றால் ஆச்சரியப்படத் தேவையில்லை' என்பார் டாக்டர் எம்.எஸ்.உதயமூர்த்தி.

ஆதிகால மனிதனிலிருந்து இன்றுவரை மனிதன் சிந்தனை அறிவின் வளர்ச்சியால், அறிவியலிலும், ஆராய்ச்சியிலும் முன்னேற்றம் அடைந்துள்ளான்.

வாழும் இடம், காலம் இவற்றுக்கேற்ப தேவைகளும், மாற்றங்களும் உண்டாகின்றன. அவற்றுக்கேற்ப வாழ்வை வளப்படுத்தும் சீர்திருத்தங்களும் உருவாயின. சிந்தனையும் சீர்திருத்தமுமே வாழ்வின் வளமாகும்.

'எந்தெந்த காலத்தோ, இடம், காலம், தேவை
இவையொப்பத் தோன்றியன எத்தனையோ செயல்கள்
அந்தச் செயல் அக்கருத்து இன்று சிந்தனைக்கோ
அனுபவத்திலோ துன்பம் அளிக்குமெனில் தவிர்ப்போம்'

'பழமையான சடங்கு முறைகள் மூடப் பழக்கங்கள் போன்றவை இன்றைய காலத்தில் சமுதாயத்திற்கு துன்பம் விளைவிக்கும் என்றால் தவிர்க்க வேண்டும்' என்பார் வேதாத்திரி மகரிசி.

இயற்கை ஆற்றலை உணர்ந்து, அதனை வாழ்வின் வளமாக மாற்றும் வழிகளை வழங்கும், சிந்தனையோர் வழியில் சிறப்பாக வாழ்க!

இந்தியப் பெண் விஞ்ஞானிகள்- 6

கமலா சோஹோனி– விஞ்ஞானி சி.வி. ராமனை எதிர்த்தவர்!

மேனகா நரேஷ், நியூஜெர்சி

1933 ஆம் ஆண்டில், பெங்களூரில் உள்ள இந்திய அறிவியல் நிறுவனத்தின் வளாகமும், இந்தியாவில் உள்ள அறிவியல் சமூகமும் அதிரும் வண்ணம் கமலா சோஹோனி என்ற இளம் பெண், நோபல் பரிசு பெற்ற இயற்பியலாளர் சி.வி. ராமனை எதிர்த்து, IISc-யில் பணிபுரிய அனுமதி கோரி காந்திய வழியில் தர்ணா செய்து போராடினார். யார் இந்த கமலா சோஹோனி?

ஆரம்பகால வாழ்க்கை, கல்வி:

கமலா சோஹோனி 1912 ஆம் ஆண்டு இந்தியாவின் மத்தியப் பிரதேசத்தில் உள்ள இந்தூரில் பிறந்தார். அவரது தந்தை நாராயணராவ் பகவத் ஒரு வேதியியலாளர். அப்பாவும் மாமாவும் வேதியியல் படிப்பதையும், அறிவியல் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருப்பதையும் பார்த்து, தானும் அவர்களைப்போல் ஆகவேண்டும் என்ற எண்ணம் கமலாவுக்குத் தோன்றியது.

1933 ஆம் ஆண்டு பம்பாய் பல்கலைக்கழகத்தில் வேதியியல் (முதன்மை), இயற்பியல் (துணை) ஆகியவற்றில் பி.எஸ்சி பட்டம் பெற்றார் கமலா. பின்னர் அவர் இந்திய அறிவியல் நிறுவனத்தில் ஆராய்ச்சி உதவித்தொகைக்காக விண்ணப்பித்தார்.

பேராசிரியர் சி.வி.ராமனை எதிர்த்து நின்ற முதல் பெண்:

பெண்கள் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள போதுமானத் தகுதியற்றவர்கள் என்று அப்போதைய இயக்குநர் பேராசிரியர் சி.வி. ராமன் கருதியதால் அவரது விண்ணப்பத்தை நிராகரித்தார். IISc-யில் பணிபுரிய அனுமதி கோரி காந்திய வழியில் தர்ணா செய்து போராடினார் கமலா! அவருடைய மன உறுதி சி.வி.ராமனை வியப்படையச் செய்தது.

சில வற்புறுத்தல்களுக்குப் பிறகு,அவர் தனது ஆராய்ச்சியின் முதல் ஆண்டில் நன்னடத்தையில் இருக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் IISc இல் சேர்க்கப்பட்டார்.

சி.வி.ராமன் அவரது பணியில் திருப்தி அடைந்தால் மட்டுமே அவருடைய ஆராய்ச்சி அங்கீகரிக்கப்படும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டது. மேலும் ஆண் ஆராய்ச்சியாளர்களுக்கு இடையூறு ஏற்படக்கூடாது என்பதற்காக கமலா இரவில் வேலை செய்ய வேண்டும் என்றக் கட்டளையைப் பிறப்பித்தார் சி.வி. ராமன்! இருபத்தி இரண்டு வயது கமலா இதையெல்லாம் ஏற்றுக்கொண்டார். ஆனால் அவருக்கு இதைக் குறித்து வருத்தம் இருந்தது. பல ஆண்டுகளுக்குப் பிறகு, இந்திய மகளிர் விஞ்ஞானிகள் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு விழாவில், அவர் இவ்வாறு பேசினார்:

மேனகா நரேஷ்
பேட்டி எடுத்தவர்

‘ராமன் ஒரு சிறந்த விஞ்ஞானியாக இருந்தாலும், அவர் மிகவும் குறுகிய மனப்பான்மை கொண்டவர். நான் ஒரு பெண்ணாக இருந்ததால் அவர் என்னை நடத்திய விதத்தை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. இது எனக்கு ஒரு பெரிய அவமானமாக இருந்தது. அந்த நேரத்தில் பெண்களுக்கு எதிரான பாரபட்சம் மிகவும் மோசமாக இருந்தது. நோபல் பரிசு பெற்ற ஒருவர் கூட இப்படி நடந்து கொண்டால் மற்றவர்கள் இடத்தில் என்ன எதிர்பார்க்க முடியும்?’

IISc-யில் படித்த காலத்தில், இந்தியாவில் நுண்ணுயிரியல் ஆராய்ச்சியின் முன்னோடிகளில் ஒருவரான M. ஸ்ரீனிவாசையா கமலாவின் முனைவர் பட்ட வழிகாட்டியாக இருந்தார். அவரின் கீழ், பால், பருப்பு வகைகள் , பருப்பு வகைகளில் காணப்படும் புரதங்கள் குறித்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டார். 1936 ஆம் ஆண்டில், அவர் தனது ஆராய்ச்சியைச் சமர்ப்பித்து, முதுகலைப் பட்டம் பெற்றார்.

இதைத் தொடர்ந்து , இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற உதவித்தொகையும் அவருக்கு வழங்கப்பட்டது. கமலாவின் வெற்றிக்குப் பிறகு, 1937-38 கல்வியாண்டிலிருந்து IISc-யின் கதவுகள் பெண்களுக்காகத் திறக்கப்பட்டன.

இங்கிலாந்தில் கமலா மேற்கொண்ட ஆராய்ச்சிகள்:

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில், மூளை வேதியியல் அறிவியலின் தந்தைகளில் ஒருவர் என்று அறியப்பட்ட டாக்டர் டெரெக் ரிக்டர் , தாவர உயிர் வேதியியலாளர் டாக்டர் ராபின் போன்ற புகழ்பெற்ற விஞ்ஞானிகளின் கீழ் கமலா பணியாற்றினார்.

நோபல் பரிசு பெற்ற டாக்டர் ஃபிரடெரிக் ஹாப்கின்ஸுடன் பணிபுரிய அவருக்கு ஒரு ஃபெல்லோஷிப் கிடைத்தது. தனது ஆராய்ச்சியின் ஒரு பகுதியாக, தாவர திசுக்களின் ஒவ்வொரு செல்லிலும் 'சைட்டோக்ரோம் சி' என்ற நொதி இருப்பதைக் கண்டறிந்தார். மேலும் ,இது தாவர செல்களின் சுவாசத்தில் ஈடுபட்டுள்ளது என்பதைக் கண்டறிந்தார். இந்தக் கண்டுபிடிப்பிற்காக முனைவர் பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது . அவர் 14 மாதங்களுக்குள் ஆய்வறிக்கையை எழுதியதாகவும், அது 40 பக்கங்கள் மட்டுமே கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது!

இந்தியா வருகை:

1939 இல் இந்தியா திரும்பியதும் பல பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார் கமலா. புதுதில்லியில் உள்ள லேடி ஹார்டிங் கல்லூரியில் புதிதாகத் திறக்கப்பட்ட உயிர்வேதியியல் துறையில் அதன் தலைவராக சிறிது காலம் பணியாற்றிய பிறகு, குன்னூரில் உள்ள ஊட்டச்சத்து ஆராய்ச்சி ஆய்வகத்தின் உதவி இயக்குநரானார்

‘‘நீரா’’ ஆராய்ச்சி:

1947 ஆம் ஆண்டு திரு. எம்.வி. சோஹோனியை மணந்த பிறகு, அவர் மும்பைக்குச் சென்று பம்பாயில் உள்ள ராயல் இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸில் உயிர்வேதியியல் துறை பேராசிரியராகச் சேர்ந்தார்.

தனது மாணவர்களுடன் சேர்ந்து, கிராமப்புற ஏழைகள் உட்கொள்ளும் 3 முக்கிய உணவுக் குழுக்கள் குறித்து உயிர்வேதியியல் ஆய்வுகளை மேற்கொண்டு, அவற்றின் ஊட்டச்சத்து மதிப்புகளை நிறுவினார்.

இந்தியாவில் உள்ள பனை மரங்களில் கணிசமான விகிதத்தைப் பயன்படுத்தி அதை ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட தொழிலாக மாற்றுவதற்கான வழிகளைக் கண்டறிந்து வந்த ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத், இனிப்பு பனை தேன், பருப்பு வகைகள் மற்றும் அரிசி மாவு ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்படும் ‘‘நீரா’’ என்ற பானத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்யுமாறும், அது இந்தியர்களின் ஊட்டச்சத்து தேவைகளை எவ்வாறு

பூர்த்தி செய்ய முடியும் என்பதை கண்டறிய வேண்டும் என்றும் கமலாவிடம் கேட்டுக்கொண்டார்.

‘‘நீரா’’வில் கணிசமான அளவு வைட்டமின்கள் ஏ, சி மற்றும் இரும்புச்சத்து இருப்பதாகக் கமலா கண்டறிந்தார். இந்தக் கண்டுபிடிப்பு வெல்லம், வெல்லப்பாகுகளை மலிவான உணவுப் பொருட்களாகப் பயன்படுத்துவதற்கான அடித்தளத்தை அமைத்தது.

‘‘நீரா பானம்’’ குறித்த கமலாவின் ஆராய்ச்சி ஊட்டச்சத்து ஏழை எளிய மக்களின் குறைபாட்டை எதிர்த்துப் போராட உதவியது.

‘‘நீரா’’ பெரும்பாலும் ஊட்டச்சத்து குறைபாட்டை எதிர்த்துப் போராடவும் கர்ப்ப காலத்தில் வலிமையை வழங்கவும் பயன்படுத்தப்படுவதால், அவரது கண்டுபிடிப்பு மனிதாபிமான அடிப்படையிலும் சிறந்ததாக விளங்குகிறது. பம்பாயின் ஆரே பால் திட்ட தொழிற்சாலையின் ஆலோசகராக, பால் உறைவதைத் தடுக்கும் ஒரு நெறிமுறையையும் கமலா உருவாக்கினார்.

சோஹோனியின் இந்தப் பணிக்காக இந்தியக் குடியரசுத் தலைவரால் ‘‘ராஷ்டிரபதி விருது’’வழங்கப்பட்டது.

பின்னர் அவர் ‘‘ராயல் இன்ஸ்டிடியூட் ஆஃப் சயின்ஸ்’’ இன் இயக்குநராக நியமிக்கப்பட்டார். இருப்பினும் இந்த பதவி உயர்வு பாலின சார்பு காரணமாக நான்கு ஆண்டுகள் தாமதமானதாக நம்பப்படுகிறது.

கமலா ஒரு சிறந்த எழுத்தாளராகவும் திகழ்ந்தார். இளம் மாணவர்களுக்காக மராத்தியில் ஏராளமான அறிவியல் புத்தகங்களை வெளியிட்டார். இவை தவிர, அவர் நுகர்வோர் உரிமைகள் குறித்துப் பல கட்டுரைகளை எழுதினார். 1982-1983 வரை இந்திய நுகர்வோர் வழிகாட்டுதல் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றினார்.

1997 ஆம் ஆண்டில் அறிவியல் பங்களிப்புகளுக்காக மதிப்புமிக்க தேசிய விருதை கமலா வென்றார். தன்னுடைய 87வது வயதில் கமலா காலமானார்.

முடிவுரை:

தனது வாழ்நாள் முழுவதும் பல தடைகளை எதிர்கொண்ட போதிலும், கமலா தனது லட்சியங்களைப் பின்பற்றுவதிலும், விஞ்ஞானியாக ஆராய்ச்சிகளை மேற்கொள்வதிலும் உண்மையான ஆர்வத்துடன் ஈடுபட்டார். அறிவியலில் , இங்கிலாந்து நாட்டில் முனைவர் பட்டம் பெற்ற முதல் இந்தியப் பெண்மணி என்ற பெருமையைப் பெற்றார். மேலும், தனது ஆராய்ச்சிகளின் மூலம் இந்தியா முழுவதும் உள்ள கோடிக் கணக்கான மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக உழைத்ததால், இந்திய அளிவியல் உலகில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்துள்ளார். அவரது வாழ்க்கையும், பயணமும் அறிவியல் துறையில் சாதிக்கத் துடிப்பவர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக இருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை.

Sarla Thakral – The First Pilot of India

Sarla Thakral (1916) was only 21-year-old when she became the first Indian woman to earn a pilot license. Her husband P. D. Sharma was the initiator behind that. His family had nine pilots already and they were all supportive of the decision. However, while she was working the commercial pilot license, her husband died in a crash in 1939. She was a widow at 24. She abandoned her plans to become a commercial pilot and became a successful watercolor painter.

நுமியின் காதல் கவிதைகள்

தமிழில் முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

ஓர் மகிழ்ச்சியான தருணம்

நீயும் நானும்
தாழ்வாரத்தில் அமர்ந்திருக்கும்
ஒரு மகிழ்ச்சியான தருணம்
நாம் பார்ப்பதற்கு இருவர்
ஆனால்
ஆத்துமாவில் ஒரே ஒருவர்.

நீயும் நானும்
தோட்டத்தின் அழகில்
பறவைகளின் இசையில்
வாழ்க்கையின் நீரோட்டத்தை
உணர்கிறோம்.

நட்சத்திரங்கள்
நம்மை பார்த்துக் கொண்டிருக்கும்
மெல்லிய இளம்பிறையாய்
இருப்பது என்னவென்று
அவற்றிற்குக் காட்டுவோம்

நீயும் நானும்
தான் என்னும் அகந்தை இன்றி
ஒன்றாக இணைந்திருப்போம்.
சோம்பலான யூகங்களில்
ஆர்வம் இல்லாமல்
நாம் சேர்ந்து சிரிக்கும் போது
சொர்க்கத்தின் பசுங்கிளிகள்
இனிப்பைக் கொட்டும்.
நீயும் நானும்
இந்த பூமியில் ஒரு மாதிரியாகவும்
காலம் கடந்த இனிய பூமியில்
இன்னொரு மாதிரியாகவும் (இருப்போம்)

ஆடி மாதத்தில் அம்மன் வழிபாடும் விரதங்களும்

முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி,
எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர்

தேவர்களின் பகல்பொழுது முடியும் தருணமாக ஆடி மாதம் அமைகிறது. இம்மாதம் தேவர்களின் இருளும் ஒளியும் அற்ற அந்திப் பொழுதாகும் அவர்களின் சந்தியா காலமானதால் இம்மாதத்தை எந்த நல்ல காரியமும் செய்யத் தகாத பீடைமாதமாகக் கருதுகின்றனர். அதனால் அம்மன் வழிபாடுகள் மற்றும் சிறப்பு விரதங்கள் மூலமாக இம்மாதத்தைச் சிறந்த மாதமாக மாற்ற முனைகின்றனர். மார்கழி மாதமும் இதைப் போலவே தேவர்களின் அதிகாலைப் பொழுதாக நம்பப்படுவதால் அந்த மாதத்திலும் வேறு எந்த உலக மயமான விசேஷங்களை நிகழ்த்தாமல் இறைவனுக்குப் பிரீதியான வழிபாடுகளை மட்டும் செய்கின்றனர்.

ஆடி மாதமும் பெண்களும்

ஆடி மாதம் பெண்களுக்கு உகந்த மாதமாக அம்மன் கோயில்களில் பல விழாக்கள் நடைபெறுகின்றன. மதுரை மீனாட்சி அம்மனுக்கு மட்டுமான முளைக்கொட்டு விழா நடைபெறும் அன்னை மீனாட்சி ஆடி வீதியில் தினம் வலம் வருவாள். சொக்கர் இதில் பங்கேற்பதில்லை. சங்கரன் கோயிலில் ஆடி தபஸ் நடக்கும் அம்மன் ஒற்றைக் காலில் தவம் இருந்து சிவ பெருமானை சங்கர நாராயணர் வடிவில் தரிசிப்பாள்.

பெண்கள் தங்கள் வீடுகளில் இறந்து போன கன்னிப் பெண்கள் மற்றும் சுமங்கலிப் பெண்களை வழிபட்டு அன்னதானம் வஸ்திர தானம் செய்யும் மாதம் ஆடி மாதம் ஆகும். சுமங்கலிகள் கௌரி விரதம் வரலட்சுமி நோன்பு, கோகிலா விரதம், ஜெய பார்வதி விரதம், வராகி ஏகாதசி, குஷ்ய ஏகாதசி என பல பெயர்களில் விரதம் இருந்து இறைவனை வணங்கும் மாதம் ஆடி மாதம். சகோதர நலம் காட்டும் பூரி ஜெகநாத் ரத யாத்ரா நிகழும் மாதம் இதுவாகும். பால்கி யாத்ரா என்று கண்ணனுக்கு [விதோபாவுக்கு] யாத்ரா நடைபெறும் மாதம் இது.

அவ்வை நோன்பு

ஆடி மாதம் பெண்கள் மட்டுமே செய்யும் அவ்வை நோன்பு தென் மாவட்டங்களில் பிரசித்தி பெற்றது. இது நள்ளிரவு தொடங்கி அம்மனின் கதை சொல்லி உப்பு போடாத மாவில் பல் உருவங்களைச் செய்து வணங்கி ஆண்களுக்குக் காட்டாமல் அவற்றைப் பெண்கள் மட்டுமே உண்பது வழக்கம். இதை அவ்வையார் நோன்பு என்றும் கூறுவர். அசந்தால் ஆடி, தப்பினால் தை, மறந்தால் மாசி என்ற பால்மொழி இந்த மாதங்களில் மட்டும் இவ்வழிபாடு நடப்பதைக் குறிக்கின்றது.

வராகி நவராத்திரி

மாலை நேரத்தில் பெண்கள் மட்டும் கூட்டமாகச சேர்ந்து வழிபடும் இவ்வராகி நவராத்திரியை சிலர் குப்த ராத்திரி என்றும் வேறு சிலர் காயத்ரி ராத்திரி என்றும் வழங்குகின்றனர். இமாசலப் பிரதேசத்தில் குஹ்ய நவராத்திரி என்பர். சாகம்பரி தேவிக்கு காய்கறி, கனி வர்க்கங்கள வைத்து வணங்க வேண்டும். தினமும் நெய் விளக்கேற்றி ஒற்றை திரி தீபம் ஏற்றி வராகிக்குரிய சிவப்பு வண்ணன்த்தில் செம்பருத்தி மலர்கள் படை சிவப்பு மணி மாலை அல்லது சிவப்பு நிறத்தில் ருத்ராட்சக் கோட்டை உருட்டி ஜெபம் செய்து தச மகாவித்யா என்ற பத்து தேவிகளையும் வணங்கி வர வேண்டும். இந்த விரதத்தின் போது சைவ உணவு மட்டுமே உண்டு சாத்விக வாழ்க்கை நடத்த வேண்டும். மனிதர்களுக்கு மட்டுமின்றி விலங்கு மற்றும் பறவைகளுக்கு அன்னதானம் செய்வது உத்தமம் ஆகும்.

குப்த நவராத்திரி

வராகி நவராத்திரியை சில குப்த நவராத்திரி என்பர். இதுவும் ஒரு சுமங்கலி பூஜை. ரிஷ்ய சிருங்கர் என்ற முனிவரிடம் வந்து ஒரு சுமங்கலிப் பெண் தன கணவர் தவறான செயல்களில் ஈடுபட்டு வருவதால் தனக்கும் பாவம் சேர்வதாகச சொல்லி

அழுதாள். அதற்கு அம்முனிவர் நீ குப்த நவராத்திரி விரதம் இரு உன் கணவனின் பாவம் உன்னை சேராது என்றார். அவளும் அப்படியே செய்தாள். அவள் கணவனும் காலப்போக்கில் திருந்தி விட்டான். அவளும் பாவத்தில் இருந்து விடுபட்டாள். எனவே கணவனைத் திருத்த நினைப்பவர்கள் இந்த ஆடி மாதத்தில் வரும் நவராத்திரியை அனுஷ்டிக்கலாம். வராகி அல்லது குப்தா நவராத்திரியின் போது நகம் வெட்டக் கூடாது; முடி வெட்டக் கூடாது, யாரிடமும் கோபபடுதல் ஆகாது. மது, புகை, போதையை முற்றிலும் விலக்கிவிட வேண்டும். பகலில் உறங்கக் கூடாது. கலவி கூடாது. கருப்பு உடை உடுத்த கூடாது.. வராகி நவராத்திரி அல்லது குப்த நவராத்திரியை ஆண்கள் கடைப்பிடித்தால் அவர்களுக்கு அதிகார பதவியை வராகி வழங்குவாள். தீய சக்திகள் அண்டாது. பில்லி சூனியம் கிட்ட வராது. திருஷ்டி அற்றுப் போகும்.

ஆடி செவ்வாய்

ஆடி மாதத்தில் வரும் செவ்வாய் வெள்ளி ஞாயிறு ஆகிய நாட்களில் அம்மன் வழிபாடு சிறப்பாக நடப்பதைக் காணலாம். ஆடி செவ்வாய் நாக வழிபாட்டுக்கும் புற்று வழிபாட்டுக்கும் உகந்தது. நாகரம்மன் , நாகாத்தம்மன், கரு மாரியம்மன் கோயில்களில் ஆடி செவ்வாய் அன்று ஆடு சேவல் பலி கொடுத்து வழிபடுவதுமுண்டு நாகநாதர் கோயில் போன்ற பிரதிஷ்டை பெற்ற கோயில்களில் பலி கொடுக்காமல் ஆடு மற்றும் சேவல்களைக் காணிக்கையாகக் கோயிலுக்கு கொடுக்கின்றனர். கிராமங்களில் பலியிட்டு படையல் போடுகின்றனர்.

முளைப்பாரி திருவிழாவுக்கு செவ்வாய் சாற்றுதல் ஆடி செவ்வாய் அன்று நடைபெறும் முதல் செவ்வாய் அன்று விழா தொடங்குவதாக பறை சாற்றுவர். அடுத்த செவ்வாய் அன்று விதை இடுவர் இதை முத்து போடுதல் என்பர். மறு செவ்வாய் அன்று முளைப்பாரி எடுத்துக்கொண்டு போய் நீர் நிலைகளில் ஆற்றில் குளத்தில் கண்மாயில் கரைத்துவிடுவர்.

ஆடிப் பௌர்ணமி

ஆடி பௌர்ணமியுடன் தொடர்புடைய சில சிறப்பான நோன்புகள் விரதங்கள் இருக்கின்றன.. கோகிலா விரதத்தை ஆடி பௌர்ணமியில் தொடங்கி ஆவணி பௌர்ணமியில் முடிவு செய்வர். இது ஒரு மாத விரதம் ஆகும். அடுத்து இவ்விரதத்தின் வைரவர், வராக மூர்த்தி, நரசிம்மன், மகிஷாசுற மர்த்தினி ஆகியோரை வணங்கி வர வேண்டும். கௌரி விரதம் என்பது மற்ற மாநிலங்களை விட குஜராத்தில் பெரும்பான்மையான பெண்கள் மேற்கொள்ளும் விரதம் ஆகும். இவ்விரதம் ஆடி மாதத்தில் சுக்ல பட்ச ஏகாதசி அன்று தொடங்கி ஐந்து நாட்கள் தொடர்ந்து ஆடி பௌர்ணமி அன்று நிறைவு பெறும்

ஜெயபாரதி விரதம் ஆடி பௌர்ணமிக்கு முன்னும் பின்னும் கடைப்பிடிக்கப்படும் விரதம் ஆகும். இது பெரும்பாலும் குஜராத்தில் பெண்களால் கடைப்பிடிக்கப்படுகிறது. ஆடி மாதத்தில் வளர் பிறையில் திரயோதசி அன்று தொடங்கி ஆறு நாட்கள் கடைப்பிடிக்கப்பட்டு பௌர்ணமி முடிந்து மூன்றாம் நாள் நிறைவு பெறுகிறது. பௌர்ணமிக்கு முதல் மூன்று நாள் பிறகு மூன்று நாள் கடைப்பிடிக்கப்படும் விரதம் ஆகும். ஆடி பௌர்ணமி அன்று ஹயகிறிவர் அவதரித்த நாள் என்பதால் அன்று வைணவத் திருக்கோயில்களில் சிறப்பு சேவை ஆராதனைகள் உண்டு.

ஆடி மாதத்தின் ஏகாதசி விரதங்கள்

யோகினி ஏகாதசிஆடி மாதப் பௌர்ணமி முடிந்து வரும் கிருஷ்ண பட்ச ஏகாதசி யோகினி ஏகாதசி எனப்படும் அன்று விரதம் இருந்தால் தோல் நோய் விலகும் என்பது நம்பிக்கை. சதுர் மாஸ்ய விரதம் என்பது நான்கு மாதங்கள் நடத்தும் விரதம் ஆகும். விஸ்வகர்மா தேவசகாயினி ஏகாதசி என்ற ஆடி மாத சுக்லபட்ச ஏகாதசியில் உறங்கப் போய்விடுவார். நான்கு மாதம் கழித்து பிரபோதினி ஏகாதசி அன்று கண் விழிப்பார். இந்த விரதம் ஆண் பெண் என எல்லோராலும் கடைப்பிடிக்கப்படுகிறது.

ஆடி அமாவாசை

அமாவாசை என்பது நீத்தார் கடன் தீர்க்கும் நாள் அன்று இருட்டு என்பதால் அதை இறந்தோருடன் தொடர்பு படுத்தியது ஆதி மனிதனின் மனம். இன்று வரை அதில் இருந்து மனித எண்ணங்கள் மாறவில்லை அக்கருத்தும் மறையவில்லை. கதிரவன் தெற்கே திரும்பும் ஆடி மாதத்து அமாவசை, நடுவில் நிற்கும் ஐப்பசி மாதத்து அமாவாசை, வட திசை திரும்பும் தை மாதத்து அமாவாசை ஆகிய நாட்களில்

இறந்தோர் இப்புமிக்கு வருவர் என்று நம்புவதால் அன்று அவர்களுக்கு படையலிட்டு திருப்தி செய்து அனுப்ப்புகின்றனர். கடலில் நீராடுதலும் கடற்கரையில் வைத்து நீத்தார் கடன் தீர்த்தலும் உண்டு. ஆடி அமாவாசை அன்று மலைa ஏறுவதும் சிறப்பாகக் கருதப்படுகிறது. சதுரகிரி மலை போன்றவற்றில் பௌர்ணமியை விட அமாவாசை அன்றிரவு மலையேறுவது சிறப்பான நிகழ்வாகும். ஆடி அமாவாசை அன்று மகாபாரதப் போருக்கு முன்பு அரவானைப் பலி கொடுத்த நாள் என்பதால் சேலம் மாவட்டத்தினர் அரவானின் தலையைக் குறிக்கும் வகையில் ஒரு தேங்காயை எடுத்து அததேங்காயின் மூன்று கண்களைத் திறந்து அதற்குள் சக்கரை பொரிகடலை தேங்காய் பூ வைத்து தீயில் முழுத் தேங்காயைச் சுட்டு இறைவனுக்கு படைத்து பின்பு உடைத்து உள்ளிருக்கும் இனிப்பைத் தின்பர்.

கேரளாவில் ஆடி

கேரள மாநிலத்தில் ஆடி மாதத்தை கற்கடக மாசம் என்பர். இம்மாதத்தில் ராம கதை படிப்பதைபெரும் புன்யமாகக் கருதுகின்றனர். எழுத்தச்சன் எழுதிய ஆத்யாதம இராமாயாணத்தை வீடு தோறும் வாசிக்கின்றனர். திருச்சூரில் உள்ள வடக்குனாதன் கோயிலில் ஆடி பூரம் நாள் அன்று யானைகள் அணிவகுப்பு சிறப்பாக நடைபெறும் அன்று ஆண்கள் வயிற்றில் புலி முகம் வரைந்து வருவதும் உண்டு. அன்று அங்கு நாலமபல் வழிபாடு என்று நாக்கு கோயில்களுக்கு சென்று வருகின்றனர். ஆயுர்வேத சிகிச்சை தொடங்க சிறந்த மாதம் ஆடி மாதமே ன்று நம்புகின்றனர். அந்த மாதம் முழுக்க உணவுக் கட்டுப்பாட்டைப் பின்பற்றுகின்றனர்.

ஆடி பதினெட்டாம் பேருக்கு

ஆடி மாதம் பதினெட்டாம் நாள் காவிரி பாயும் நிலப்பகுதியில் பதினெட்டாம் பெருக்கு சிறப்பாகக் கொண்டாடப்டுகிறது. அன்று நீர்நிலைகளுக்கு வழிபாடு செய்யப்படுகிறது. தலைக் காவிரி இருக்கும் கர்நாடகததில் தென்மேற்கு மழை பெய்து காவிரியில் புது வெள்ளம் பெருக்கெடுத்து வரும் அந்நாளில் கரையில் பெண்கள் கூடி பூவும் மங்கலப் பொருட்களும் தீபமும் தண்ணிரில் விட்டு கங்கையம்மனை வணங்குவர். தாலி பெருக்கி போடுவதும் இந்நாளின் சிறப்பம்சம் ஆகும். காவிரி பாயும் மாவட்டங்களில் பெண்களிடம் இப்பழக்கம் இருந்துவருகிறது. இவ்வாறு ஆடி மாதத்தில் பெண்களும் பெண் தெய்வங்களும் சிறப்பிடம் பெறுகின்றனர். இம்மாதம் மக்கள் நலம் வளம் காண வழிவகுக்கும் மாதமாகும். இம்மாதம் முதல் நெல் வயல்களில் வேளாண் பணிகள் விரைவு பெறுகின்றன. இனி கிராமத்துப் பெண்களுக்கு ஒய்வு என்பதே இருக்காது.

இங்கிலாந்து மண்ணில் இனிய தமிழ்விழா
'தமிழணங்கு' எழுத்தாளர்களுக்குப் பாராட்டு விருது

உலக முதன்மொழி என போற்றப்படும் அன்னைத் தமிழுக்கும் தமிழ்வழி மானுட சமுதாயத்துக்கும் பல்வேறு பங்களிப்புகளைப் பன்னாடுகளில் பன்முகங்களில் அர்ப்பணிப்புடன் ஆற்றிவரும் தமிழ்ச் சான்றோர்களையும் தமிழறிஞர்களையும் கவுரவிக்கும் ஒருவிழா அண்மையில் (ஜூன் 18 அன்று) நடைபெற்றது. அதுவும், நம் தாய்த் தமிழ்நாட்டில் அல்ல, நம் நாட்டைச் சில காலம் ஆண்ட பிரித்தானிய நாட்டின் பாராளுமன்ற வளாகத்தில் வைத்து, இப்படி ஒரு நிகழ்ச்சிக்கு சென்னையிலுள்ள ஆலந்தூர் மோகனரங்கன் ஆய்வு மையத்தினரும் இலண்டனில் இயங்கும் குரைடன் மாநகர் தமிழ்ச் சங்கமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர். இந்நிகழ்வில் உலகெங்கிலும் இருந்து 24 நாடுகளைச் சேர்ந்த 104 தமிழறிஞர்களும் தமிழ்ச் சங்கங்களின் பொறுப்பாளர்களும் 'செந்தமிழ்ச் சான்றோர்' விருது வழங்கிப் பாராட்டப்பட்டனர். இந்நிகழ்வில் இங்கிலாந்து காமன்வெல்த் விவகாரத் துணை அமைச்சர், குரைடன் மாநகரத் துணைமேயர், இங்கிலாந்தின் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் (எம்.பி.க்கள்) உள்ளிட்ட பலர் பங்கேற்று அறிஞர்களைப் பாராட்டிப் பேசினர். இவ்விழாவில் நமது 'தமிழணங்கு' இதழ்ப் பொறுப்பாசிரியர் டாக்டர் சந்திரிகா சுப்பிரமணியம் (ஆஸ்திரேலியா) அவர்களும் நமது இதழின் தொடர் எழுத்தாளர் பேராசிரியர் முனைவர் மோசசு மைக்கேல் பாரடே (சென்னை) அவர்களும் செந்தமிழ்ச் சான்றோர் விருதும் பாராட்டுப் பத்திரங்களும் பொன்னாடையும் வழங்கிப் பாராட்டப்பட்டனர் என்பது நமக்கெல்லாம் மகிழ்வுதரும் செய்தி. அயல்நாட்டு மண்ணில் அருந்தமிழ்ச் சான்றோர்க்கு செய்யப்பட்ட இச்சீர்மிகு பெருமைகள், மறக்க முடியாத ஒரு வரலாற்று நிகழ்வாக நிலைத்துவிட்டது.

பேரா. முனைவர் மோ. மைக்கேல் பாரடே
மேனாள் தமிழ்த்துறைத் தலைவர்,
சென்னைக் கிறித்தவக் கல்லூரி

முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன்
சிட்னி ஆஸ்திரேலியா

மரு.பு. சாலின் மனோகர் மரு.கொ.பா. புட்பராசு

இராவணர்

மங்கையர் மருத்துவம்

வாழ்க !
நலமுடன் !!

தொகுப்பாசிரியர்கள்

மரு.கொ.பா.புட்பராசு ESMP

Facebook / email : dr.pushparaj.sidha@gmail.com

blog:siddhamarundhagam.blogspot.com

அலைபேசி : 9787651412, 9047423903.

மரு.பு.சாலின் மனோகர் BSMS

kumarinaatusiddha@gmail.com

அலைபேசி : 9787002909, 9941120840

வெளியீடு :

இராவணர் பதிப்பகம்,

வாழவிளை, பரக்குன்று,

வழி குழித்துறை - 629 163,

குமரிமாவட்டம்.

உள்ளடக்கம்

இராவணர் மங்கையர் மருத்துவம் - பாகம் - 1

1. முன்னுரை - 35
2. எம்முரை - 44
3. வாலைகளின் பருவங்கள் - 59
4. இருதுவாகும் கால வயது - 64
5. மாதர்களின் பருவங்களின் பெயர்கள் - 65
7. பெண்களின் பருவங்கள் - 66
8. பூப்பு என்பது யாது? - 71
9. மாதாந்த தீட்டின் நன்மைகள் - 73
10. மாதவிடாயின் விபரம் - 74
11. சூதகம் எவ்வாறு உருவாகிறது? - 76
12. மாதவிடாய் கால ஒழுக்கம் - 77
13. மாதவிடாய் ஒழுக்கம் தவறுவதால் வரும் பாதிப்புகள்- 78
14. சூதகத்தாலுண்டாகும் பயன்கள் - 81
15. மாதர்களின் பண்பியல்பு - 83
16. கருப்பை வலுப்பெறும் கால அளவு - 84
17. வெளிபூப்பு - 86
18. சூதக வாயுவுக்கு கியாழம் - 88
19. உள்பூப்பின் இயல்பு - 89
20. கன்னியரின் ருதுகால உடல் மாற்றங்கள் - 91
21. பூப்பிலியர் இலக்கணம் - 92
22. பூப்புற்ற மங்கையரை பேணுதல் - 94
23. சூதக சன்னி - 95

24. மாதாந்திர தீட்டின் வரிசை - 98
25. வெண்ணீர் (விந்து) - 100
26. ஆண்குறியின் பயன் - 113
27. அல்குலின் அமைவு - 114
28. ஆண் பெண் கூபக அறை அமைவு - 115
29. கெற்பாசயத்தின் அமைவு - 116
30. போகத்தில் கருவுறுவது அறிய - 118
31. மங்கையரின் கொங்கை வளர்ச்சிக் குறைவு - 119
32. மங்கையரின் பிணிநீக்கும் தொடுவர்ம புள்ளிகள் - 123
33. சூல்காலம் - 126
34. புட்டவியல் - 136
35. **சூல்கால நோய்கள்** - 137
36. கருவுற்ற பின் துவாலை கசிவு ஏற்பட்டால் மருந்து - 139
37. கெற்ப துவாலைக்கு மருந்து - 142
38. கெற்பசூலை சகலதுக்கும் எண்ணெய் - 148
39. கெற்ப கிரந்திக்கு மருந்து - 150
40. கெற்பத்தில் வாயுவுக்கு புட்டவியல் - 151
41. வயிற்றில் குத்தெரிவுக்கு மருந்து - 152
42. சூல் ரோகம் அனைத்துக்கும் தைலம் - 153
43. பேற்றெண்ணெய் - 157
44. **சூல்கால பண்டுவம் – வேறு** - 158
45. சூலெண்ணெய் – வேறு - 164
46. கருவளர் நெய் - 166
47. சூல்வாந்தி - 169
48. சூலெண்ணெய் – வேறு - 172

49. கெற்பிணிக்கு நீரடைத்தால் - 174
50. கல்லடைப்பு மருந்து - 177
51. கெற்ப குருதிக்கு மருந்து - 179
52. சூல் தாகத்துக்கு கியாழம் - 180
53. கெற்பத்தில் சுரம் - 181
54. கெற்ப சுரத்துக்கு கியாழம் - 183
55. சூல் புழுவின் குறிகுணங்கள் - 185
56. **கரு பரிசோதனை** - 186
57. கருவுருவாகும் சோதனை - 188
58. கெற்பக்குறிகள் - 189
59. சூல்கால ஒழுக்கம் - 190
60. கருவழியும் காரணம் - 191
61. சூலழியும் காரணம் - 192
62. நஞ்சுகொடியின் விளக்கம் - 193
63. கருவின் வளர்ச்சி - 195
64. ஆண், பெண், அலி சிசு உருவாகும் விதம் - 199
65. இரட்டை குழந்தை பிறக்கும் விதம் - 200
66. கணவன் மனைவி உறவு - 203
67. கெற்ப காமாலை குறிகுணம் - 204
68. கெற்ப காமாலைக்கு வடகம் - 206
69. சூல் மகோதரம் - 207
70. அன்னபேதி செந்தூரம் - 209
71. சூலில் குழந்தை மரித்த விதமறிய - 210
72. இதற்கு மருந்து - 214
73. கற்பின் நிலைத்தன்மை - 222

74. பெண்களின் சினைமுட்டையின் இலக்கணம் - 223
75. சூல்தைலம் – வேறு - 224
76. சூல்தாய்க்கு வில்வாதி குடிநீர் - 227
77. சூலெண்ணெய் – வேறு - 228
78. சூசிகா வாயு குணம் - 230
79. சூல் தைலம் – வேறு - 232
80. கருவளர்ச்சி சூல் தைலம் - 234
81. சூலெண்ணெயின் பயன்கள் - 239
82. பேறுகால பண்டுவங்கள் - 240
83. பழிச்சூல் இலக்கணம் - 241
84. ஈண்வேளை செய்ய வேண்டிய பண்டுவங்கள் - 246
85. பேறு தாமதத்திற்கு குடிநீர் - 250
86. சேய் பிறந்தவுடன் பரிகாரம் - 251
87. சிசுவுக்கு சேனையூட்டும் முறை - 252
88. உந்தி கொடி முறிக்கும் விதம் - 254
89. பிறந்தவுடன் சேயை பேணும் விதம் - 255
90. பிரசவ பின் கவனிப்பு - 259
91. மதலை ஈன்ற தாயை பேணும் விதம் – வேறு - 262
92. பன்மூலப் புதையல் - 266
93. சீரகப் புதையல் - 271
94. பன்மூலப் புதையல் – வேறு - 274
95. முந்திரி வாற்று - 281
96. குறிஞ்சிக்குழம்பு - 284
97. நஞ்சு பிடித்த நோய் - 296
98. மதலை ஈன்ற தாயின் சூலுறை பழுத்தல் - 297

99. கருப்பை கழுவப் பீச்சு - 298
100. நஞ்சு கொடியை இழுப்பதால் ஏற்படும் விபரீதம் - 299
101. பூச்சு முறை – உள் மருந்து - 300
102. விடவக்கிழிவு நோய் - 303
103. மூச்சடங்கி பிறக்கும் சிசு - 305
104. மதலைகள் மூச்சடங்கி பிறக்க காரணம் - 306
105. இதற்கு பரிகாரம் - 307
106. சிசுவை நஞ்சுகொடி சுற்றினால் - 311
107. சிசு அழ / நஞ்சு கொடி வெளியாக - 312
108. பாலூட்டும் வரிசை - 314
109. குழந்தை பிறந்தவுடன் அழுவதின் காரணம் - 316
110. பால் அதிகமாக சுரக்க மருத்துவம் - 317
111. பால் வற்றச் செய்ய மருத்துவம் - 320
112. சேய் பால் குடிப்பதை நிறுத்த - 323
113. சவறு காய சுர நிதானம் - 325
114. தீருந்நோய்கள் - 328
115. தீரா நோய்களின் குறிகுணங்கள் - 329
116. சவறுகாய சன்னிக்கு தைலம் - 361
117. சவறு காய சுர நிதானம் – வேறு - 363
118. தீருந்நோய் - 365
119. தீராநோய் - 366
120. சினைப்பை / கருப்பை தாக்கப்பட்டால் - 378
121. பொய் கெற்பம் - 379
122. சூதகத்தடை நோய் - 380
123. கருப்பை கட்டிகள் உருவாகாமல் தடுப்பது எப்படி - 385

124. கருப்பை கட்டி இருப்பதை கண்டறிவது எவ்வாறு - 386
125. **சூதக வாயு பொது குணம்** - 388
126. சூதக வாதம் - 389
127. கருவில் ஊனமுடன் கருவுருவாகும் அடிப்படை - 392
128. கருவில் ஒன்றுக்கு மேற்பட்ட சிசு - காரணங்கள் - 394
129. பெண்களின் சினைப்பை - நன்மை - 395
130. **விகற்ப நோய்** - 397
131. காம மேகத் தைலம் - 403
132. **மகவை நிறம் மாற்ற** - 404
133. கருப்பை வெளிதள்ளல் குணம் - 405
134. மருந்து - 406
135. கருப்பை வெளி தள்ளலுக்கு புகை - 407
136. மலடு நீங்க சூடாமணி நெய் - 408
137. **கருவலாதி (பெண் மலடு)** - 411
138. **பெண் மலடின் பொதுக்குணம்** - 417
139. பெண்களின் மலடு வகைகள் - 420
140. அதி பிண்டத்தின் குணம் - 422
141. கும்மட்டி நெய் - 424
142. நீர் சூலை - 426
143. கும்மட்டிக்காய் நெய் - வேறு - 427
144. இரத்த சூலை குணம் - 429
145. விப்புருதி வாயு குணம் - 431
146. இதற்கு நெய் - 432
147. சூதக குலாந்தகன் நெய் - 434
148. சூதக வாயுவின் குணம் - 437

149. கும்மட்டிக்குழம்பு - 439
150. **யோனி நோய் நிதானம்** - 441
151. குக்கிலாதி நெய் - 469
152. யோனியில் பூச மருந்து - 471
153. பெருங்குறிஞ்சி நெய் - 474
154. பூண்டுத்திரி - 476
155. **ஆண்குறி நோயின் பெயர்கள்** - 478
156. **ஆண்குறி நோய் வரலாறு** - 479
157. இலிங்கப்பதங்கம் - 480
158. சீழ் மேகத்துக்கு வெள்ளி பற்பம் - 481
159. குக்கிலாதி இளகம் - 482
160. சித்திரவல்லாதி - 484
161. எள்ளுக்குழம்பு - 487
162. நீர்முள்ளிக்குழம்பு - 489
163. மலட்டு வாயுவுக்கு கும்மட்டிக் குழம்பு - 493
164. **கருக்குழிவாயு குணம்** - 495
165. சூதக வாயுவின் குறிகுணம் - 496
166. இதற்கு இளகம் - 497
167. இரத்த சூலை வாயுகுணம் - 499
168. பெண் மலடு நீங்க நெய் - 501
169. கிரகணி வாயு குணம் - 504
170. இதற்கு சூரணம் - 505
171. குடல் சூலை வாயு குறிகுணம் - 506
172. அழல் வாயு குணம் - 507
173. திராட்சை மணப்பாகு - 508

174. முலை குத்துக்கும் புண்ணுக்கும் மருந்து - 510
175. முலைப்பால் சுரக்க சோற்றுப்பாகம் - 511
176. கோபிகை சந்தணாதி குளிகை - 512
177. குறிஞ்சி லேகியம் - வேறு - 516
178. **சினைக்குழாய் கரு** - 518
179. மார்பு நோய்க்கு பரிகாரம் - 519
180. பூச்சு - 520
181. கருப்பை அமைவு இலக்கணம் - 522
182. **இளம்பிள்ளை வாத நோய்** - 524
183. இளம்பிள்ளை வாதம் வருங்காரணம் - 525
184. நோய் இலக்கணம் - 526
185. இளம்பிள்ளை வாத குணம் - 529
186. **பாவையர் பைத்தியம் வரலாறு** - 560
187. பூவையர் பைத்தியத்தின் பெயர்கள் - 561
188. உதிர காயம் - 576
189. **மேகநோய் நிதானம்** - 580
190. நோய் வருங்காரணம் - 583
191. நோய் தொகை விபரம் - 584
192. தீருந்நோய் / தீராநோய் - 585
193. அவற்றின் பெயர்கள் - 586
194. மேகத்துக்கு எள்ளுக்குழம்பு - 604
195. நீர் செறுப்புக்கு மருந்து - 606
196. நீரடைப்புக்கு தளம் - 607
197. பித்த மேகம் உடல் காந்தலுக்கு - 609
198. கருவங்கபற்பம் - 610

199. நாகச்செந்தூரம் - 611
200. சூல் விப்புருதி நோயின் குணம் - 613
201. சுரத்துக்கு நாசித்தூள் - 620
202. சூல் வாந்திக்கு கியாழம் - 621
203. கெற்ப புழுவின் இலக்கணம் - 622
204. கெற்பவாயுவின் குணம் - 623
205. **பெரும்பாடு** - 624
206. பெரும்பாடு நோய் வருங்காரணம் - 625
207. தீருந்நோய் / தீராநோய் - 626
208. **பெரும்பாடு நிதானம் – வேறு** - 633
209. நோய் வரும் வரலாறு - 634
210. பெரும்பாடு நோயின் தொகை - 635
211. பெரும்பாடு அனைத்துக்கும் சூரணம் - 639
212. செம்பருத்தி மலர் மணப்பாகு - 640
213. பெரும்பாடு விலகக் குழம்பு - 641
214. பெரும்பாடு நோய்க்கு கியாழம் - 642
215. பெரும்பாட்டுக்கு பொடி - 643
216. சதாவேலி நெய் பெரும்பாடுக்கு - 644
217. பெரும்பாடு பிணிக்கு கியாழம் - 646
218. பெரும்பாடு ரோகி குறி கழுவ பொடி - 647
219. பெரும்பாடு நீங்கச்சூரணம் - 648
220. தென்னம் பூ இளகம் - 650
221. **மேகதாரிப்பு** - 652
222. மாதவிடாய் கால சுரம் - 653
223. கருவிக்குத்து - 654

224. விருப்பமின்றி வல்லுறவு செய்தால் - 657
225. கொடும் புணர்ச்சியினாலுண்டாகும் கெடுதல் - 658
226. இதற்கு அவிழ்தம் - 659
227. அல்குலில் திரி வைத்து இறந்தால் குறி - 660
228. கோபத்துடன் வன்புணர்ச்சி குணம் - 661
229. சிறிய பெண்ணை புணர்ந்தால் - 663
230. மேகமுடைய பெண்ணை புணர்ந்தால் - 664
231. ஒடுக்கி வர்மம் தாக்கப்பட்டால் - 668
232. கொங்கையின் அமைப்பு - 670
233. நஞ்சு கொடியின் இலக்கணம் - 672
234. உதிரத்தின் பணிப்பயன் - 674
235. செரிமான உள்ளுறுப்புகள் - 675
236. உணவின் சுவையறியும் விதம் - 676
237. உதடுகளின் தொழில் - 677
238. புலன் நரம்பின் தொழில் - 678
239. கண்நீரின் பயன்கள் - 680
240. இயற்கை மாசுபாட்டால் வரும் தீமைகள் - 681
241. தூய்மை சுவாச காற்றின் பயன் - 682
242. உட்தோலின் தொழில் - 684
243. வியர்வை சுரப்பிகளும் அதன் செயல்பாடுகளும் - 685
244. வியர்வையிலுள்ள கழிவு பொருட்கள் - 687
245. மாதவிடாய் கால வயிறுவலிக்கு - 689
246. படிகார பற்பம் - 690
247. அஞ்சுப்பு மெழுகு - 692
248. **வெண்பூசணி இளகம்** - 693

249. **சூலிக்கு வர்மம் கொண்டால்** - 696
250. வெண்பூசணி லேகியம் - வேறு - 697
251. கெற்ப வாயுவுக்கு உப்பு - 699
252. பன்மூல புதையல் - வேறு - 700
253. தெளிநீரின் இலக்கணம் - 706
254. பாண்டம் பழக்குதல் - 707
255. **மார்பு நோய்** - 708
256. இதற்கு அவிழ்தம் - 713
257. சேராங்கொட்டை மெழுகு - 714

பாகம் - 2
பெண்டிர் பிணி போக்கும் அவிழ்தங்கள்

258. பெரும்பாடு கிரிச்சனத்துக்கு இரசாயனம் - 719
259. கரு காக்கும் தைலம் - 720
260. கெற்ப வாயுவுக்கு அவுரி எண்ணெய் - 721
261. சூல் தாய்க்கு கொடுக்க குளிகை - 722
262. கருவுற்ற மாதருக்கு கியாழம் - 723
263. மேகத்துக்கு கொடிவேலி நெய் - 724
264. கடுகு மாத்திரை - 725
265. **பெரிய உயிராதி சன்னிக்குழம்பு** - 726
266. சூல் தைலம் - 730
267. மேகத்துக்கும் வறட்சைக்கும் வீளி நெய் - 733
268. கெற்ப வாயு விலகத் தைலம் - 735
269. கூந்தலுக்கு ஆலம்பால் எண்ணெய் - 736
270. மாதுளை கற்பம் - 737

271. வங்காள பச்சை சூரணம் - 737
272. எள்ளுக் குடிநீர் - 738
273. சூதக கட்டுக்கு நவச்சார இளகம் - 739
274. பெரும்பாடுக்கு சஞ்சீவி குடிநீர் - 740
275. சஞ்சீவிக்குழம்பு - 741
276. மேகத்துக்கு சிப்பி நெய் - 742
277. அசோகு புதையல் - 743
278. கிட்டப்புதையல் - 745
279. அமுக்கூரப்புதையல் - 747
280. முந்திரி வாற்று - 750
281. அயவரிசை தெளிநீர் - 753
282. அரிதகிப் புதையல் - 756
283. பெரும்பாட்டுக்கு நாவல் வாற்று - 759
284. சன்னிக்குத்திரி - 761
285. சூதக வலிக்கு நெய் - 763
286. துவாலை போக தீநீர் - 764
287. தாமிர பற்பம் - 766
288. குறிஞ்சிக் குழம்பு - 770
289. சிவக்குழம்பு - 773
290. குக்கில் நின்பாதி கியாழம் - 774
291. அடைக்காமணி தைலம் - 778
292. அடைக்காமணி தைலம் - வேறு - 781
293. கும்மட்டிக்காய் நெய் - 783
294. கல்யாணி கல்கிரி - 786
295. மேகாதி கியாழம் - 787

296. காயாதி லேகியம் - 789
297. காம கேசரி குளிகை - 791
298. கந்தக இரசாயனம் - 795
299. கதளி இரசாயனம் - 797
300. பட்டை இரசாயனம் - 799
301. சர்வாங்க இரசாயனம் - 801
302. கருவுருவாக நெய் - 803
303. மார்பு சூலைக்கு சேங்கொட்டை நெய் - 805
304. மேகத்துக்கு சீனாந்திப்பட்டை தைலம் - 806
305. சூல்வாதத்துக்கு கியாழம் - 807
306. **மேகத்துக்கு எள்ளுக்குழம்பு** - 808
307. மண்டூர மாத்திரை - 809
308. காரீயச் செந்தூரம் - 810
309. வீளி நெய் - 811
310. வெள்ளுள்ளி நெய் - 812
311. வேசரி நெய் - 814
312. சூல் நெய் - 815
313. நாகச் சுன்னம் - 817
314. நவச்சார பற்பம் - 818
315. கும்மட்டி எண்ணெய் - 819
316. கெற்பமுண்டாக எண்ணெய் - 820
317. கெற்ப வாயுவுக்கு எண்ணெய் - 821
318. இருதுவாக மருந்து - 822
319. பூப்பெய்த பின் மாதவிடாய் தடைபட்டால் - 823
320. கெற்ப கிருமிக்கு எண்ணெய் - 824

321. பொன்னாங்காணி நெய் - 825
322. மல்லி மாதுளை நெய் - 827
323. பத்து தேங்காய் நெய் - 830
324. சூல் தாய்க்கு மலசலமடைத்தால் மருந்து - 831
325. சூதக வாயுவுக்கு வீர மெழுகு - 832
326. கெற்பராசிங்க குழம்பு - 833
327. கெற்பகிருமி ரோகத்துக்கு வீளி எண்ணெய் - 836
328. மலக்கிருமிகள் வெளியாக எண்ணெய் - 838
329. கும்மட்டிக்காய் நெய் - 839
330. சிந்தாமணி தைலம் - 841
331. இரச பற்பம் - 843
332. வனப்பு - 844
333. பேரழகு தைலம் / களிம்பு - 845
334. குக்கில் - 847
335. கும்மட்டிக்காய் சூரணம் - 849
336. கெவுன சிந்தாமணிக் குளிகை - 850
337. அறிவு தத்துவ சிந்தாமணி குளிகை - 852
338. மேகத்துக்கு மருந்து - 855
339. கெற்பத்தடை பிணிக்கு அவிழ்தம் - 856
340. அஞ்சுமுறை செந்தூரம் - 857
341. கெற்ப கிரந்திக்கு மஞ்சள் இரசாயனம் - 858
342. கந்தக இரசாயனம் - 859
343. கெற்பிணிக்கு மதுராதிக்குழம்பு - 860
344. எட்டிக்களிம்பு - 861
345. காந்த பற்பம் - 862

346. சூலை கிரந்திக்கு புகை - 863
347. பேற்றில் வந்த நீரழிவுக்கு அரசு நெய் - 866
348. கருத்தரிக்க நெல்லிக்காய் நெய் - 869
349. சூலியின் நீர் கடுப்புக்கு குழம்பு - 870
350. மேக எண்ணெய் - 871
351. ஆண்பிள்ளை பெற - 871
352. மங்கையர் மலடு நீங்க கியாழம் - 873
353. சூதக காலுக்கு குடிநீர் - 874
354. பெரும்பாடு நோய் நீங்க - 875
355. பெண்கள் பிரவிடையாக - 876
356. **இரட்டை குழந்தைகளின் விநோதம்** - 877
357. மார்பு சுருங்க - 878
358. இளமை மணப்பாகு - 879
359. **பெண்கள் மெய் நலிவடையும் காரணங்கள்** - 880
360. பெண்களின் எடை கூடும் காரணிகள் - 881
361. மணமாகாத மங்கையர் குண்டாவதின் காரணம் - 882
362. திருமணத்துக்குப் பின் தொப்பை வரக்காரணம் - 883
363. மேக ஏலாதி குளிகை - 885
364. கையான் தைலம் - 886
365. **சுரமனைத்துக்கும் தோடைவோர் கியாழம்** - 887
366. வாயு கிருமிக்கு தைலம் - 889
367. குக்கில் நெய் - 891
368. கெற்ப குன்ம வளிக்குத் தைலம் - 893
369. மாதவிடாய் வயிறுவலிக்கு சூரணம் - 894
370. சூலுண்டாக நெய் - வேறு - 896

371. சூதகம் வெளியாக எள்ளுக்குழம்பு - 897
372. பூண்டுக்களிம்பு - 898
373. சதாவேலி நெய் - 899
374. பருத்த மார்பு சுருங்க - 900
375. மார்பு பருக்க - 900
376. நீர் கடுப்புக்கு உண்டை - 903
377. பட்டை இரசாயனம் - 904
378. சுறோணித கட்டுக்கு குறிஞ்சிக்குழம்பு - 905
379. வாயுவுக்கு குறிஞ்சிக்குழம்பு - 906
380. பேற்றில் வரும் வயிறு பழுப்புக்கு - 908
381. சூலை நீருக்கு கியாழம் - 910
382. கிருமிக்கு சஞ்சீவி தைலம் - 911
383. பெரும்பாடுக்கு தூமரக்காய் சூரணம் - 911
384. சூதக வாயுவுக்கு வீர மெழுகு - 913
385. பத்து உப்பு மெழுகு - 914
386. பெரும்பாடுக்கு தென்னம்பூ குடிநீர் - 915
387. பெரும்பாடுக்கு பட்டுண்டை - 916
388. குளியல் பொடி - 918
389. சூல் சுரத்துக்கு ஏலாதி மாத்திரை - 919
390. சூல் கால மதுமேகத்துக்கு சூரணம் - 920
391. குமரித்தைலம் - 923
392. மதலை ஏலாதிக்குளிகை - 926
393. **சிசு நோய்களுக்கு குழியானை தைலம்** - 928
394. கற்பூராதிக் குளிகை - 931
395. **வலிய பராக்கிரம பூபதி** - 933

பாகம் - 3
பின்னிணைப்புகள்

396. **தனித்தமிழ் சிந்தாமணி மருத்துவத்திலுள்ள கூடுதல் உள் மருந்துகள்** - 940

397. **ஆதித்தமிழ் மருத்துவத்தின் வரலாறு** - 944

398. உலக மருத்துவ அறிவியலின் முன்னோடி - 1003

399. **தமிழ் மருத்துவத்தை அழிப்பவர்கள் யார்?** - 1015

400. உலக தோற்றமும் அதன் முடிவும் - 1024

401. இன்றைய காலகட்ட குமரிமாவட்ட நூல்கள் பற்றிய தகவல்கள் - 1035

402. சிந்தாமணி மருத்துவத்தை சித்த மருத்துவ கல்லூரி பாடதிட்டத்தில் - நன்மைகள் - 1039

403. **பலமொழிகளில் இராவண மருத்துவ நூல்கள்** - 1047

404. தமிழ் கலைகள் அபகரிக்கப்படும் அபாயம் - 1086

405. கன்னியாகுமரி மாவட்டத்தில் கழுவன்திட்டைகள் - 1093

406. தமிழ் மருத்துவத்தை காக்க நாம் என்ன செய்ய வேண்டும் - 1097

407. சித்த மருத்துவம் மட்டுமா ? தமிழர் மருத்துவம் ! - 1103

408. தமிழ் மக்களிடமிருந்து தூய இராவணரை பிரிக்கச் செய்த சூட்சிகள் - 1111

409. அகிலத்தின் ஆதிமொழி தமிழே - 1115

410. இராவணர் தமிழ் மருத்துவ நூல் கவிதைகள் - 1123

411. தமிழ் மருத்துவத்தின் சிறப்புகள் - 1140

412. இராவணர் மருத்துவத்தை அழித்ததின் நோக்கம் - 1147

413. சூலுற்ற உயிரினங்களை வதைக்கலாமா? - 1151

414. **அகத்தியர் தமிழ் மருத்துவத்துக்கு என்ன செய்தார்** - 1154
415. **தமிழ் மருத்துவம் எதை நோக்கி செல்கிறது** - 1160
416. குமரி மாவட்ட தமிழ் மருத்துவம் எது - 1170
417. **தனித்தமிழ் மருத்துவம் ஓர் ஆய்வு** - 1177
418. **சிந்தாமணி மருத்துவம்/சித்த மருத்துவம் ஒற்றுமை/வேற்றுமை** - 1182
419. குமரிக்கண்டம் தந்த தமிழ் சிந்தாமணி மருத்துவம் - 1195
420. பயிற்சி பற்றிய தகவல்கள் - 1201
421. ஆதித்தமிழ் மருத்தவத்துக்கும், ஆயுர்வேத வைத்தியத்துக்குமுள்ள வேறுபாடுகள் - 1203
422. பெண்களின் சாதிகள் - 1206
423. சிந்தாமணி மருத்துவ அளவைகள் - 1210
424. நிறைவுரை - 1211
425. எமது மருத்துவ நிலையத்தில் செய்யப்படும் சிறப்பு மருத்துவங்கள் - 1214
426. தயார் செய்யப்படும் சிறப்பு மருந்துகள் - 1216
427. மூலிகை தேநீரின் பயன்கள் - 1217
428. இராவண பதிப்பக நூல்கள் - 1219
429. சிந்தாமணி மருத்துவ சிகிட்சை முறைகள் - 1220
430. இந்நூல் எழுதுவதற்கான ஆதார நூல்கள் - 1222
431. நூலாசிரியர்கள் பற்றிய குறிப்பு - 1224
432. பயிற்சி பெற்றவர்களில் சிலர் - 1228

குறிப்பு : - பிரதான தலைப்புகள் மட்டுமே அட்டவணையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்தாய் இணைவோம்

தமிழணங்கு விருது வழங்கும் விழா

தமிழணங்கு ஆய்விதழின் மூன்றாம் ஆண்டு நிறைவை ஒட்டி இவ்விதழில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வரும் அறிஞர் பெருமக்களுக்கு விருது வழங்கப்படுகிறது.

நிகழ்ச்சி நிரல்

நாள் : 19-08-2025 செவ்வாய்க்கிழமை

இடம் : அண்ணா நினைவு நூலகம்,சென்னை.

பிற்பகல் 2.00 மணி : தமிழ்த்தாய் வாழ்த்து

வரவேற்புரை : **முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி**
ஆசிரியர், தமிழணங்கு பன்மொழி ஆய்விதழ்

தலைமையுரை : **பொறிஞர் ரவி சொக்கலிங்கம்**
நிறுவனர், சர்வீஸ் டு சொசைட்டி, மைசூர்.

விருதாளர்கள் அறிமுகம்

விருது வழங்குபவர் : **திருமிகு சைதை சா. துரைசாமி** அவர்கள்,
பெருநகரச் சென்னையின் முன்னாள் மேயர்,
மனிதநேய ஐ. ஏ. எஸ். அகாடமியின் தலைவர்

தமிழணங்கு இயற்றமிழறிஞர் விருதாளர்கள்

1. முனைவர் தேமொழி (சான்பிரன்ஸிஸ்கோ, யுஎஸ்ஏ)
2. முனைவர் மு. முத்துவேலு
3. முனைவர் மோ. மைக்கேல் ஃபாரடே
4. முனைவர் சந்திரிகா சுப்ரமணியன் (ஆஸ்திரேலியா)
5. முனைவர் சிவ. இளங்கோ
6. திருமிகு மு. பழநிசாமி
7. முனைவர் ஆனந்த் அமலதாஸ்
8. முனைவர் புதேரி தானப்பன்

தமிழணங்கு இயல்தமிழ் விருதாளர்கள்

1. வழக்கறிஞர் கனிமொழி (வெர்ஜினியா, யுஎஸ்ஏ)
2. ஐயை திவ்யகுமாரி கண்ணம்மா
3. டாக்டர் மேனகா நரேஷ் (நியூ ஜெர்சி, யுஎஸ்ஏ)
4. ஆராய்ச்சியாளர் மாரிராஜன்
5. கவிஞர் வித்யா மனோகர்
6. முனைவர் ஜெயந்தி
7. தமிழாசிரியர் ஜனக்புரி சீனிவாசன்
8. முனைவர் மெய். சித்ரா

தமிழணங்கு இலக்கணத் தமிழறிஞர் விருதாளர்கள்

1. நெருப்பலையார் இராம இளங்கோவன்
2. பேரா. முனைவர் கு. இராமகிருட்டிணன்

அனைவரும் வருக! அரும்பயன் பெறுக!

அன்பளிப்பு ரூபாய்: 120/-